உ
கணபதி துணை

திருத்தக்க தேவர்
இயற்றிய

சீவக சிந்தாமணியுள்
இரண்டாவதாகிய

கோவிந்தையாரிலம்பக மூலமும்
நச்சினார்க்கினியருரையும்.

இவை
உத்தமதானபுரம்
மஹாமஹோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி
வே. சாமிநாதையரால்
நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை
கேசரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப் பெற்றன.
1928
மூன்றாம் பதிப்பு

 [விலை அணா 10

முகவுரை.

" தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே."

சில வருஷங்களில், பி ஏ பட்டப்பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகத்தையும், அதனை அறிந்துகொள்ளுதற்கு இன்றியமையாத நச்சினார்க்கினியருரையையும் வெளிப்படுத்த நிச்சயித்து, அவை விளங்கும் வண்ணம் நூதனமாக எளிய நடையில் எழுதிய குறிப்புக்களையும் உரிய இடங்களிற் சேர்த்துச் சில அன்பர்கள் விரும்பியபடி தனிப்புத்தகமாக இப்போது பதிப்பிக்கலானேன்.

சீவகசிந்தாமணியென்பது, திருத்தக்கதேவர் என்னும் சைன முனிவரால் இயற்றப்பெற்றது; பழைய காப்பியங்கள் * ஐந்தனுள் முந்தியது. இது, பழைய இலக்கியவுரைகளிலும் இலக்கணவுரைகளிலும் உரையாசிரியர்களால் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாண நூல்களுள் ஒன்று. முற்காலத்து முதல் இடை கடை என்னும் முச்சங்கத்தும் எழுந்தருளியிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர்கள் அருளிச்செய்த இலக்கியங்கள்போன்று செந்தமிழ் நடையிற் சிறந்துள்ளது; வடமொழியில் வான்மீகம்போல எல்லாவருணனைகளும் தன்பால் அமைபப்பெற்றிருத்தலின் மகாகாவியமென்று கூறப்பட்டிருத்தலன்றி, பிற்காலத்து அதிமதுரமான தமிழ்க்காப்பியங்கள் இயற்றிய மகாகவிகள் பலர்க்கும் இன்ன இன்னவற்றை இன்னஇன்னவாறு வருணித்துப் பாடுகவென அவ்வான்மீகம்போல வழிகாட்டியதும் இந்நூலே என்பர்.

இந்நூல், சைனமதத்தினனாகிய சீவகனென்னு மோரரசன் பிறந்தது முதல் அவன் வீடுபெற்றது இறுதியாகவுள்ள கதையைக் கூறும்.

---

* ஐந்துகாப்பியங்களாவன :—சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி யென்பன.

அரசன் அமைச்சரைப் பலமுறை ஆராய்ந்து தெளியல் வேண்டுமென்பதும், பெண்வழிச்சேறல் பெருந்துயர் விளைக்கு மென்பதும், ஒருவன் தன்னுசிரியன் கட்டளைப்படியே எப்பொழுதும் ஒழுகல் வேண்டுமென்பதும், பகையை வெல்லக்கருதினேன் உரிய காலமும் இடமும் வாய்க்குமளவும் தன்னெண்ணத்தை வெளிப்படுத்தாதிருத்தல் வேண்டுமென்பதும், பிறவுயிர்களுக்குத் துன்பம் வரின் உடனே தீர்த்தற்கு முயலல் வேண்டுமென்பதும், வருத்தும்படி நேரினும் தனக்கு ஒருவாற்றானும் பகைவரல்லாதவரைச் சிறிதும் வருத்தலாகாதென்பதும், தந்தைதாயர்சொல்லைத் தலையாகக் கொள்ளல் வேண்டுமென்பதும், அறிவும் அன்புமுள்ள துணைவனிருந்தால் தானெண்ணியவற்றையெல்லாம் முடித்துக் கொள்ளலாமென்பதும், தனக்கு இன்பதுன்பங்கள் வந்தவிடத்து முறையே மகிழ்தலும் வருந்துதலுமின்றி எல்லாம் ஊழ்வினைப்பயனென்றே எண்ணல் வேண்டுமென்பதும், எல்லாவுயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடையனுதல் வேண்டுமென்பதும், சற்பாத்திரமறிந்து தானஞ்செய்தல் வேண்டுமென்பதும், தீவழிச் செல்வோரைக்காணின் இரங்கி உடனே அவரை நல்வழிப்படுத்த முயலல் வேண்டுமென்பதும், செய்ந்நன்றி மறவாதிருத்தல் வேண்டுமென்பதும், இவை போல்வன பிறவும் இந்நூலால் நன்குவிளங்கும்.

இதற்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினுர்க்கினியர் இயற்றியதாகிய பழையவுரையொன்றுண்டு; அவரெழுதிய சிலவாக்கியங்களை உற்றுநோக்குங்கால், அவ்வுரைக்கும் முந்தியதான பழையவுரையொன்று இருந்ததென்று தெரிகின்றது.

புலவர் சிந்தித்தவற்றையெல்லாம் தருதலின் சிந்தாமணியென்றும், நூற்பயனுகிய நாற்பொருளையும் நன்கு விளங்கக் கூறுதலின் முடிபொருட்டொடர்நிலைச்செய்யுளென்றும் இது வழங்கப் படுமென்பர்.

இந்நூலாசிரியர் இச்சரிதத்தை இன்ன நூலிலிருந்தெடுத்து யாம் பாடுகின்றேம் என்று கூறுமையின், இதற்கு முதனூல் இன்னதென்று இந்நூலைக் கொண்டு நிச்சயிக்கக்கூடவில்லை.

வடமொழியில் வாதீபஸிம்ஹரென்னும் கவியாற் செய்யப் பட்டனவாகிய க்ஷத்திரசூளாமணியென்னுங்காப்பியமும், கத்தியசிந்

தாமணியும், அரிசந்திரகவியாற் செய்யபட்டதான ஜீவந்தரசம்புவும், ஜீவந்தரநாடகமும் சீவகன் சரிதத்தையே பொருளாகக் கொண்டிருக்கின்றன. * அறுபத்துமூன்று சலாகா புருஷர்களுடைய சரித்திரங்களை விரித்துரைப்பதாகிய மகாபுராணத்தின் ஒரு பாகத்தும், இருபத்துநான்கு தீர்த்தங்கரரின் சரிதங்களையுணர்த்துவதும் மணிப்பிரவாள நடையாகவுள்ளதுமாகிய ஸ்ரீபுராணத்தில் ஸ்ரீவர்த்தமானருடைய புராணத்தும் இச்சரிதம் கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய க்ஷத்திரசூளாமணி முதலிய நூல்கள் மூன்றினையும் இந்நூலையும் வைத்து ஒப்புநோக்கி ஆராய்ந்தபொழுது அவற்றில் வேறுவேறாகவுள்ள நயங்கள் பலவும் ஒருங்கே இதிற் காணப்பட்டன. இந்நூலைத்தழுவியே அவைகள் செய்யப்பட்டனவோ அவற்றைத்தழுவியே இந்நூல் செய்யப்பட்டதோ என்னும் ஐயமும் அப்பொழுது நிகழ்ந்தது. ஆனாலும் அவற்றிலுள்ள வடமொழிப் பெயர்கள் பலவும் வடமொழிச் சிதைவுப்பெயர்கள் பலவும் பாகதச் சிதைவுப் பெயர்கள் பலவும் அவற்றிலுள்ள பொருளமைதியும் இந்நூலில் ஆங்காங்குக் காணப்பட்டமையின், அந்நூல்கள் இயற்றப்பட்டபின்பேனும் அவைபோன்ற வேறுவடநூல்கள் இயற்றப்பட்டபின்பேனும் இது செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், சிலப்பதிகாரமுதலியவற்றைப்போல இது முதலிலேயே தமிழிற் செய்யப்பட்டதன்றென்றும் தோற்றின. க்ஷத்திரசூளாமணி யென்பதை இதற்கு முதனூலென்று சைனர் கூறுகின்றனர். மேற்கூறியவற்றுள் கத்தியசிந்தாமணியையே இந்நூல் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. ஸ்ரீபுராணத்துள்ள சீவகன்கதைக்கும் இந்நூற்கதைக்குமுள்ள வேறுபாடுகள் பல. தமிழிற் சிந்தாமணிமாலை யென்று ஒரு நூல் வழங்குகின்றது; அது சுத்தத் தமிழ்நடையுள்ளதன்று.

இந்நூல், முதலிற் கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் கதையைத் தொகுத்துக் கூறுவதாகிய பதிகமும் முறையே தங்கப்பெற்று, பின்னர் நாமகளிலம்பகம்முதல் முத்தியிலம்பகமிறுதியாகிய பதின்

---

* சலாகா புருஷர்கள் அறுபத்துமூவர் : தீர்த்தங்கரர்-இருபத்துநால்வர், சக்கரவர்த்திகள்-பன்னிருவர், வாசுதேவர்கள்-ஒன்பதின்மர், பிரதிவாசுதேவர்கள்-ஒன்பதின்மர், பலதேவர்கள்-ஒன்பதின்மர்.

மூன்று இலம்பகவுறுப்புக்கள் அமையப்பெற்றுள்ளது. இதன் செய்யுட்டொகை-ருகசரு. 'தேவராருளிச்செய்த செய்யுள் இரண்டாயிரத்தெழுநூறென்றே கொள்க' என்று முத்தியிலம்பகத்துள்ள 'முந்நீர்வலம்புரி' என்னுங்கவியுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், மற்றவை பிறராற் செய்யப்பட்டனவென்று தோற்றுகின்றன. மற்றும், நச்சினார்க்கினியர்தாமே குணமாலையாரிலம்பகத்திலுள்ள, "வேந்தொடுமாறுகோடல்" என்னுங் கவியின் உரையில், 'தேவர் மனத்தையிறுகப் பிணித்தமைதோன்றக் கட்டியென்றும் பூட்டியென்றும் செய்யுள் செய்தமைபற்றி, கந்தியாரும் இடையிடையே பாடியிட்ட செய்யுட்களினும் அப்பொருள்தரக் கட்டியென்று செய்யுள்செய்தாரென்றுணர்க' என்றும், இந்நூலின் உரையிறுதியில், "தத்தைகுணமாலை" என்னுங் கவியும், "பகைமாற்று" என்னுங்கவியும் கந்தியார் கூற்று என்றும் எழுதியிருத்தலால், கந்தியா ரென்னு மொருவர் இந்நூலின் இடையிடையே செய்யுட்கள் செய்து சேர்த்தனரென்று தெரிகிறது; அச்செய்யுட்கள் இவையென்று பகுத்துணர்தல் அரிது. அன்றியும் இந்தக்கோவிந்தையாரிலம்பகத்து, "கார்விரிமின்னனார்" என்னுஞ்செய்யுளுரையின்பின் நச்சினார்க்கினியர், "இதன்பின், 'என்றவன்', 'சேட்டிளம்' என இரண்டுகவி கூறுவாருமுளர்; அவை பயிலவழங்கா" என்று எழுதி அவற்றிற்கு உரையெழுதாது விட்டதனால், விலக்கத்தக்க கவிகள் சில நச்சினார்க்கினியர் காலத்திற்குமுன்னமே இந்நூலிற் கலந்து விட்டன வென்றும் தெரிகின்றது.

சிந்தாமணி முழுப்புத்தகப் பதிப்பிற் பாடல்களுக்கு ஒரேதொடராக மொத்த எண்ணே போடப்பட்டிருத்தலின், இவ்விலம்பகக் குறிப்புரையிற் சில இடத்து அவ்வெண்ணே காணப்படும்.

'தியாகராஜ விலாஸம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
6—1—28.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

இந்நூலாசிரியராகிய

திருத்தக்கதேவர் வரலாறு.

சிந்தாமணி நூலாசிரியராகிய திருத்தக்கதேவருடைய காலம், இடம், ஆதரித்தபிரபுவின் பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தமிழ்நூல்களால் வெளிப்படையாக விளங்கவில்லை; ஆனாலும் இந்நூல் உரைத்தொடக்கத்தில், நச்சினார்க்கினியர், 'இத்தொடர்நிலைச் செய்யுளைத் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும்' என்று எழுதியிருத்தலால், இவருடையகாலம் பழமையானதென்றுமட்டும் தெரிகின்றது.

முத்தியிலம்பகத்துள்ள, "முந்நீர் வலம்புரி" என்னும் ஓம்படைச் செய்யுளினுரையில் இந்நூலாசிரியரை, 'சோழர்குலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், இவர் சோழர்குலத்திற் பிறந்தவரென்று புலப்படுகின்றது. நச்சினார்க்கினியருரைச் சிறப்புப்பாயிரத்துள்ள "வண்பெருவஞ்சிப், பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித், திருத்தகு முனிவன்" என்னுந் தொடரினால் இவர் வஞ்சியென்னுமூரிலிருந்த பொய்யாமொழியென்பவராற் புகழப்பட்டவரென்று தெரிகின்றது; பொய்யாமொழி யென்பவர், தஞ்சைவாணன் கோவையாசிரியரோ வேறொருவரோ நன்குவிளங்கவில்லை. இந்நூற்கடவுள் வாழ்த்தாகிய "மூவா முதலா" என்னுங் கவியினுரையிறுதியில் நச்சினார்க்கினியரா லெழுதப்பட்டுள்ள 'செம்பொன்' என்னும் முதலையுடைய வாக்கியத்தால், இவருடைய ஆசிரியர் இவரை மதித்திருந்தமை நன்கு புலப்படுகின்றது. இவர் திருத்தகு தேவரென்றும் கூறப்படுவர். தேவரென்ற பெயரால் இவர் துறவறத்தவரென்று அறியலாம். இந்நூலையன்றி நரிவிருத்தமென்று வழங்குகிற சிறு நூல் ஒன்றும் இவரால் இயற்றப்பட்டுள்ளதென்பர். வேறொன்றும் விளங்கவில்லை.

இத்தமிழ்நாட்டிலுள்ள சைனர்களுள் கர்ணபரம்பரையாக வழங்கும் இவருடைய சரித்திரம் வருமாறு:—

திருத்தக்கதேவர் சோழர் குலத்திலேயுதித்து உரிய பிராயத்தே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுச் சிறிது கல்வி கற்றபின்பு, நல்லாசிரியர்பால் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களையும் பழைய சங்கச்செய்யுட்களையும், அக்காலத்து வழங்கிய மற்றை நூல்களையும், ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, இப்படியே வடமொழியிலும் வல்லுநராய், பின்பு, தாம் மேற்கொண்ட ஆருகதசமயத்திற்கு உரிய நூல்களெல்லாவற்றையும் கற்று அவற்றிலே அதிபாண்டித்திய முடையராய், அன்பு அருள் வாய்மை அடக்கம் முதலிய நற்குணங்களனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று, ஆண்டில் இளையராயினும் அறிவில் முதியராய், இளமைப்பருவத்தே துறவறம் பூண்டு, தம்மாசிரியரை விட்டு நீங்காது அவர் கருத்தின்வழி ஒழுகுதலையே தமக்குப்பெரும்பயனாகக்கொண்டு அவ்வாறு அன்போடொழுகுவாராயினர்; சில நாட்கள் சென்றபின் ஆசிரியருடன் பாண்டிவளநாட்டிலேயுள்ள மதுராபுரியை யடைந்து அவ்விடத்தே சிலகாலம் அமர்ந்தனர்.

அங்ஙனம் அமரும்போது, திருத்தக்கதேவர், அம்மதுரைப் பதியிலேயிருந்த * சங்கப்புலவர்களின் புலமைகளை யுணர்ந்து, அவர்களோடு சேர்ந்து பழகவிரும்பி, ஆசிரியர்பால் அநுமதிபெற்றுச் சென்று அவர்களோடு நாடோறும் பயிலுவாராய்த் தமிழ்மொழியிலுள்ள பழைய செய்யுட்களின் சொற்சுவை பொருட்சுவைகளை அவர்கள் எடுத்துக் கூறிப் பாராட்டத் தாமின்புற்றும், தாமும் அவ்வாறே எடுத்து மொழிந்து அவர்களை இன்புறுவித்தும், † "தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா, ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ, நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத், தும்ப ருறைவார் பதி" என்றவாறே அவர்களோடும் அளவளாவி அளவில்லாத மகிழ்ச்சி யடைந்து அவர்களால் நன்குமதிக்கப்பட்டிருந்தனர்.

அப்படியிருக்கும் நாட்களிலே ஒருநாள், சங்கப்புலவர்கள் திருத்தக்க தேவரைநோக்கி, 'ஆருகதசமயத்தாரிற் பாடும்புலவர் பலரும் துறவினை வலியுறுத்திப்பாடத் தெரிந்து கொண்டாரேயன்றிக் காமச்சுவையைப் பாராட்டிப் பாடத் தெரிந்து கொண்டாரல்லர்; இக்காலத்து

---

* இச்சங்கம் கடைச்சங்கமன்றென்றும் ஜைனர்சங்கமென்றுங் கூறுவர்.

† நாலடியார், கல்வி, எ.

வழங்கும் காமச்சுவையை யுடைய நூல்கள் பலவற்றுள்ளும் ஒன்றேனும் அவர்கள் இயற்றியதாகக் காணப்படாமையே அதற்குத் தக்கசான்றும்' என்று சொல்ல, அதற்குத் திருத்தக்கதேவர், 'இன்பச்சுவையைப் பாராட்டுதலில் அவர் வெறுப்புற்றிருந்தாரல்லது பாடத் தெரியாதிருந்தாரல்லர்' என்றுகூற, சங்கப்புலவர்கள் 'அப்படியாஞற் காமச்சுவைமுழுதும் விளங்க அமைத்துத் தேவரே ஒரு நூலியற்றுதிர்' என்ருர்.

திருத்தக்கதேவர் அங்ஙனம் பாடத்துணிந்து, தம்மாசிரியர்பாற் சென்று வணங்கிநின்று நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்ய, ஆசிரியர் அவ்வாறு பாடுதற் கண்ணே தம்மாணுக்கர் வல்லுநராயிருத்தலை நன்குணர்ந்திருந்தாராயினும், மாணுக்கர்கருத்தை அளந்தறிய ஆலோசித்திருக்கும்பொழுது, அவ்விருவருக்கும் எதிரிலே ஒரு நரியானது ஓட, அதனைக் கண்ட ஆசிரியர், மாணுக்கரை நோக்கி, 'இந்நரிச்சாதித் தன்மையை ஆதாரமாகக் கொண்டு உமக்குத் தோற்றியவாறே ஒரு சிறிய நூல் இயற்றுதிர்' என்று சொல்ல, திருத்தக்கதேவர் அதனை ஆதாரமாகக் கொண்டு, யாக்கைநிலையாமை செல்வநிலையாமை முதலியவைகளெல்லாம் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிற் புலப்படும் வண்ணம் விரைவில் நரிவிருத்தம் என்னும் ஒரு நூலியற்றி ஆசிரியருக்குக் காட்ட, ஆசிரியர் பெரிதும் வியப்புற்றுத் தம்மாணுக்கர் கருத்துத் துறவின்கண்ணே உறுதி கொண்டிருத்தலைநோக்கிக் கழிபேருவகையுற்று மாணுக்கரைப்பார்த்து, 'சங்கப்புலவர்கள் கூறியவண்ணம் காமச்சுவை பெரிதும்விளங்கும்படி சீவகன்கதையை ஒருபெருங்காப்பியமாக இயற்றுதிர்' என்றுகூறி, 'அஃது இடையூறின்றி இனிதுமுடிக' என்று அருகக்கடவுளைப் பிரார்த்தித்து "செம்பொன்வரைமேல்" (2) என்னுஞ் செய்யுளொன்றியற்றி அதனுல் அக்கடவுளைத் துதித்து, 'இச்செய்யுளைக் கடவுள்வாழ்த்தாகக் கொண்டு நீர் நூலியற்றுதிர்' என்று அக்கவியைத் திருத்தக்கதேவருக்கு அளித்தனர்.

திருத்தக்கதேவர் அச்செய்யுளையேற்றுச் சிரமேற்கொண்டு, தாம் "மூவாமுதலா" என்னுங்கவியாற்சித்தனைத்துதியாநிற்க, அக்கவியை ஆசிரியர்கேட்டு, 'யான் கூறிய கவியினும் நீர்கூறிய கவி செவ்விதாயிருத்தலால், அதனை முதலிலே நிறுத்துக' என்றுசொல்ல, திருத்தக்கதேவர் தம்மாசிரியர் கட்டளையை மறுத்தற்கஞ்சித் தாம்

கூறிய சித்தசரணமாகிய "மூவாமுதலா" என்னுங்கவியை முன்னும், ஆசிரியர் கூறிய அருகசரணமாகிய "செம்பொன்வரைமேல்" என்னுங் கவியைப் பின்னுமாகவைத்துப் பாடத்தொடங்கி, இந்நூலை எட்டுநாளில் நிறைவேற்றி ஆசிரியர்க்குக் காட்ட, ஆசிரியர் நோக்கிப் பெரிதும் வியந்து புகழ்ந்து, 'இந்நூல் நின்று நிலவுக' என்று ஆசி கூறி "முந்நீர்வலம்புரி" (3143) என்னுங்கவியால் ஓம்படையுரைத்து, தேவரைநோக்கி, 'இனிச்சங்கப்புலவரிடஞ் சென்று அரங்கேற்றி வருதிர்' என்றனர்.

உடனே திருத்தக்கதேவர் சென்று பாண்டியராசனவைக்களத்திற் சங்கப்புலவர்களுக்கு முன்னே இந்நூலை வாசித்துக்காட்ட, அவர்கள்கேட்டு இந்நூல் சொல்வளம் சந்தவின்பம் செய்யுணடைமுதிர்ச்சி காமச்சுவை முதலியனவும் அலங்காரங்களு முடைத்தாய், எவ்வெச்சாதியார்க்கும் காலம் இடமுதலியவற்றிற்கும் ஏற்ற வருணனை முதலியன பெற்றிருத்தலைத் தெரிந்து வியப்புற்றுச் சிரந்துளக்கி, 'இங்ஙனம் பாடுதல் யாவர்க்கும் அரிதரிது' என்று புகழ்ந்து நன்குமதித்து மிகப்பாராட்டிப் பெருமகிழ்ச்சியடைந்தனர். அரசனும் அவ்வாறே புகழ்ந்து பெரிதும் பாராட்டினன். மற்றையோரும் மகிழ்ச்சியடைந்தனர்.

அப்படி நிகழ்ந்தபொழுது, ஆங்குள்ளாரிற் சிலர் ஐயமுற்று 'இத்திருத்தக்கதேவர் இளமைப்பருவந்தொடங்கித் துறவு பூண்டிருத்தல் மெய்ம்மையாயின், மற்றைச்சுவைகள்போலக்காமச்சுவையை இவ்வாறு பாராட்டிப்பாடுதல் இவர்க்கு இயலுவதன்று; இந்நூலின் கண்ணே அச்சுவை மிக்குள்ளது; ஆதலின், இவர் சிற்றின்ப அனுபவமுடையராதல் வேண்டும்' என்று தம்முட்பேசிக்கொண்டனர்.

அதனைத் தேவர் தெரிந்து அவ்வனைவருங்காணும்படி, திரண்ட இரும்பின் கட்டியைத் தழலிற் பழுக்கக்காய்ச்சிவருவித்து,'யான் பாலசந்நியாசியாகவிருத்தல் மெய்ம்மையாயின், இஃது என்னைச்சுடாதொழிக' என்று சூளுரைத்து அக்கட்டியைத் தம் கையினாற்றழுவித் தாம் யாதொரு துன்பமும் அடையாது இன்புற்றிருந்தனர்.

தேவர் அங்ஙனமிருத்தலைமுன்பு சந்தேகித்துப் பேசினோர்கண்டு அஞ்சி, 'யாம் என்னகாரியஞ் செய்தேம்? யாம் என்னகாரியஞ் செய்தேம்?' என்று நடுநடுங்கி, அவரைவணங்கி, 'யாங்கள் கருதிப்பேசிய

பெருங்குற்றத்தைப் பொறுத்தருள்க' என்று பன்முறையிரந்து வேண்டிக்கொண்டனர். தேவர் அவர்களைநோக்கி, 'நீவிர் எனது துறவொழுக்கத்தைப் பலரும் அறியச்செய்தீராதலின், எனக்குக் குற்றஞ்செய்தீரல்லீர்; இதுபற்றி, நீவிர் அஞ்சன்மின்' என்று பல இனிய மொழிகள் கூறி, அவர்களது அச்சத்தை அகற்றினர்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சங்கப்புலவர்களும் பாண்டியராசனும் திருத்தக்கதேவரது துறவொழுக்கத்தையும் மற்ற மேம்பாடுகளையும் மிக வியந்து பாராட்டினார்கள்.

பின்பு தேவர் அவர்களிடத்து விடைபெற்றுச்சென்று தம்மாசிரியரிடத்தே ஆங்குநிகழ்ந்தவற்றையெல்லாங் கூறி உடனுறைவாராயினர்.

இந்நூல் உரையாசிரியராகிய

நச்சினார்க்கினியர் வரலாறு.

விருத்தம்.

எவனாலவாயிடைவந் தமுதவா யுடையனென வியம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னோ.

"தொல்காப் பியத்திற் றெருகுத்த பொருளனைத்து
மெல்லார்க்கு மொப்ப வினி துரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு"

"கரைபெற்ற தோர்பஞ்சலட்சணமான தொல்காப்பியமுந்
தரைமுற்றும் போற்றியசிந்தாமணியுந் தமிழ்ச்சங்கத்தி
னிரைபெற் றுயர்பத்துப்பாட்டும் விளங்கநிசவுரைசெய்
வரைநச்சி னார்க்கினியன்னையன் பாண்டியமண்டலமே"

(பாண்டி மண்டல சதகம்)

இந்நூலின் உரையாசிரியராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவம். இவர் இன்னராதல், "வண்டிமிர் சோலை மதுராபுரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத் துவாச, னான்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச், சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும் உரைச்சிறப்புப்பாயி ரத்தால் விளங்கும். சிவதலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்', 'பெரும்பற்றப்புலியூர்' என்ப வற்றை முறையே ஆறெழுத்தொரு மொழிக்கும் எழெழுத்தொரு மொழிக்கும் உதாரணமாக இவர், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து

மொழிமரபில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும் சைவசமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய விலக்கணப் பொருள்களுக்கன்றித் தத்துவப்பொருளுக்கும் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள்கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து 'மேகம்மீன்ற'என்னும் ௩௩௫-ஆம்செய்யுளில்,'போகம்மீன்ற புண்ணியன்' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப் படை யுரையிற்காட்டிய சில நயங்களாலும், உரைச்சிறப்புப்பாயிரத்தில், "தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மையாளன்" எனக்கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும், இவர் சைவசமயியாதல் நன்கு வெளியாகும்.

"கச்சைசேரரவர்போலுங் கறையணிமிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர்போலும் பேரருளர்போலு
மிச்சையான் மலர்கடுவி யிரவொடுபகலுந்தம்மை
நச்சுவார்க் கினியர்போலு நாகவீச் சரவனாரே"

(தே. திருநா. திருநாகேச்சரம்)

"பச்சிலைபழம்போதேனும் பறித்திட்டுப் பத்திசெய்வோர்க்
கெச்சமிலிருமைப் பேறுமளித்தருளிறைவா போற்றி
முச்சகமுதலேபோற்றி மூலச்சுவட் டணியாய்போற்றி
நச்சினார்க் கினியாய்போற்றியெனத் துதி நவிலுங்காலை"

(காஞ்சி. சத்ததான. கக)

என்பவற்றில் முறையே 'நச்சுவார்க்கினியர்' என்றும்,'நச்சினார்க்கினியாய்' என்றும் வருவனவற்றை நோக்கும்போது இவருடைய பெயர் சிவபெருமானுடைய திருநாமமாகவே எண்ணப்படுகிறது.

இவ்வுரையாசிரியர்,இந்நூலுக்கன்றிப்பத்துப்பாட்டிற்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரைசெய்தருளினர். இன்னும் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்ற

மையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரை செய்திருப்பதாக இவருடைய உரைச்சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும் அவைகள் இங்கே எழுதப்பட்டில.

இன்றியமையாத இடங்களில்மட்டும் பதப்பொருள் இலக்கணக் குறிப்பு முதலியன இவரால் எழுதப்படும்; இவர்பதசாரம் எழுதுதல் மிகப்பாராட்டற்பாலது.

மேற்கோளாக எடுத்துக்காட்டும் நூலின் பெயரையாவது நூலாசிரியரின் பெயரையாவது எடுத்துக்கூறுதல் பெரும்பாலும் இவருக்கு வழக்கமின்று.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு ஆருகதநூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஓர் உரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக் கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர்.

நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார்நுங்காதலர்" என்னும் சஅ-ஆம் செய்யுளுரையில் "ஈங்குத் தன்மையைபுணர்த்துதல், 'செலவினும் வரவினும்' என்னுஞ் சூத்திரத்திற் கூறினோம்" என்றும், குணமாலையாரிலம்பகத்தில் 'மங்கை நல்லவர்' என்னுஞ் செய்யுளுரையில் ஆசிரியர் 'நண்டுந் தும்பியும்' என்று தும்பியைப்பின்வைத்தது, மேல்வருஞ் சூத்திரத்தில், 'மாவு மாக்களு மையறி வென்ப' என்ற ஐயறிவு இதற்கும் எறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்" என்றும் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதின பின்பு சீவகசிந்தாமணிக்கு உரையெழுதினரென்று விளங்குகின்றது.

பாஷாபிமானத்தையும் தமிழ்ப்பாஷையிலுள்ள நூலாராய்ச்சியையும் நூலாசிரியரிடத்தேயுள்ள அன்புடைமையையும் ஒவ்வொன்றையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து விளங்க எழுதுதலையும் மற்றக்

குணவிசேடங்களையுமுடைய இவர் வடமொழியுரையாசிரியர்களுள் ஒருவராய்ச் சிறந்து விளங்கிய ஸ்ரீமல்லிநாதஸூரியைப்போன்றவ ரென்று இருமொழியிலும் பாண்டித்திய முள்ளவர்கள் சொல்வார்கள்.

இவர் நூலாசிரியருடைய ஆழ்ந்தகருத்தை விளக்கி அவ்வவ் விடத்து எடுத்துக்காட்டும் நயங்கள் மிக்க இன்பத்தை அளிக்கும்; அவற்றுட் சில வருமாறு:—

11. ஆய்த்தியர் நலக்காசெறாணனுன்
19. உய்த்திட்டனர் பூசல்
23. மிலேச்சனை......தெழித்தான்
31. திருநகர்ச் செல்வ
32. பொன்னிழை சுடருமேனி
45. மடவார்மனம் போலமாய்ந்தார்
47. நாளுற்றுலந்தான்
58. நாளைக்கன வினிலருளிவந்து
70. நம்படைதம்மூள்

தொல்காப்பியவுரை முதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப் பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூற்பெயர்கள் முதலியவற்றுள் இது காறும் விளங்கியவை வருமாறு:—

க. அகத்தியம்
உ. அகநானூறு
ங. அணியியல்
ச. அவிநயம்
ரு. அறநெறிச்சாரம்
சு. ஆசாரக்கோவை
எ. இராமாயணவெண்பா
அ. இறையனாரகப்பொருள்
கூ. உதயணன்கதை
க0. ஏலாதி
கக. ஐங்குறுநூறு
கஉ. ஐந்திணையெழுபது
கங. ஐந்திணையைம்பது
கச. ஔவையார்பாடல்
கரு. கடகண்டு
கசு. கலித்தொகை
கஎ. களவழி நாற்பது.
கஅ. காக்கைபாடினியம்
ககூ. கார் நாற்பது
உ0. காரைக்காற்பேயார்பாடல்
உக. குண நாற்பது
உஉ. குறிஞ்சிப்பாட்டு
உங. குறுந்தொகை
உச. கூத்தநூல்
உரு. கைந்நிலை
உசு. கொன்றைவேந்தன்
உஎ. சிலப்பதிகாரம்
உஅ. சிறுகாக்கைபாடினியம்
உகூ. சிறுகுரீஇயுரை
ங0. சிறுபஞ்சமூலம்
ஙக. சிறுபாணாற்றுப்படை
ஙஉ. சினேந்திரமாலை

௩௩. சீவகசிந்தாமணி
௩௪. சூளாமணி
௩௫. தகடூர்யாத்திரை
௩௬. தந்திரவாக்கியம்
௩௭. திணைமாலைநூற்றைம்பது
௩௮. திணைமொழியைம்பது
௩௯. திரிகடுகம்
௪0. திருக்குறள்
௪௧. திருக்கோவையார்
௪௨. திருப்பாட்டு
௪௩. திருமுருகாற்றுப்படை
௪௪. திருவாசகம்
௪௫. திருவாய்மொழி
௪௬. திருவுலாப்புறம்
௪௭. தொல்காப்பியம்
௪௮. நற்றிணைநானூறு
௪௯. நாடகநூல்
௫0. நாலடியார்
௫௧. நெடுநல்வாடை
௫௨. பட்டினப்பாலை
௫௩. பதிற்றுப்பத்து
௫௪. பரிபாடல்
௫௫. பல்காப்பியம்
௫௬. பல்காயம்
௫௭. பழமொழி
௫௮. பன்னிருபடலம்
௫௯. பாரத வெண்பா
௬0. புறநானூறு
௬௧. புறப்பொருள்வெண்பாமாலை
௬௨. பூதத்தாரவையடக்கு
௬௩. பூதபுராணம்
௬௪. பெரும்பாணாற்றுப்படை
௬௫. பெரும்பொருள்விளக்கம்
௬௬. பொய்கையார்முதலாயினோர் செய்த அந்தாதி
௬௭. பொருநராற்றுப்படை
௬௮. மணிமேகலை
௬௯. மதுரைக்காஞ்சி
௭0. மலைபடுகடாம்
௭௧. மாபுராணம்
௭௨. முத்தொள்ளாயிரம்
௭௩. முதுமொழிக்காஞ்சி
௭௪. முல்லைப்பாட்டு
௭௫. மூதுரை
௭௬. மோதிரப்பாட்டு
௭௭. யாப்பருங்கலம்
௭௮. யாழ்நூல்
௭௯. வசைக்கடம்
௮0. வசைக்கூத்து
௮௧. வளையாபதி
௮௨. விளக்கத்தார்கூத்து.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் அவற்றின் உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்கு விளக்கிப் போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வட மொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுதற் கிடமுண்டு.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்தினாற் பிற்பட்

டவரென்று தெரிகின்றது. இவர் பழைய செய்யுட்களையேனும் அவற்றின் கருத்தையேனும் உரைநடையாக எழுதுவதுண்டு.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்தருளிய இம்மகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

இவருடைய மேம்பாட்டைப் பாராட்டி அக்காலத்து ஆன்றோராற்செய்யப்பட்ட உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் வருமாறு:—

வெண்பா.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

நேரிசையாசிரியப்பா.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுண்ணிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னாற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிறோல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணாக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முறையிடை யிட்ட காண்டிகை யுரைத்து
மான்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா

முரையற முழுதும் புரைபட வுரைத்து
மொலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்
வைபம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்து
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துந்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச

ஞன்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினிய
னிருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
வூழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

விருத்தம்.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினற் றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின்
மெச்சினா ணரும் விண்ணோர் மிசைகுவர் வேத போத
னச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

நூலைப்பற்றிய சில குறிப்புக்கள்.

சிந்தாமணி யென்பது, இந்நூற்குத் தன்மையால் வந்தபெயரென்பர்; நன்னூலில், "முதனூல்" என்னுஞ் சூத்திரவுரையில், 'தன்மையாற்பெயர் பெற்றன சிந்தாமணி, நன்னூல் முதலாயின' என்று சங்கரநமச்சிவாய ரெழுதியிருத்தல் காண்க. பிறந்தவுடன் சீவகனை விசயை, "சிந்தாமணியே" (311) என்று பாராட்டினமையால், சிந்தாமணியென்பது முதலில் அவனுக்குப் பெயராய் அப்பால் அவன் சரித்திரமாகிய இந்நூலுக்காயிற்றென்று கூறுவதுமுண்டு; "முந்நீர்வலம்புரி" (3143) என்னும் செய்யுளில், இந்நூல், சிந்தாமணி யென்னும்பெயரால் வழங்கப்பெற்றிருத்தல் காண்க. இப்பெயருள்ள நூல்கள்சில தமிழிலிருத்தலின், அவற்றினின்றும் வேறுபடுத்தித் தெரிவித்தற் பொருட்டே, 'சீவக' என்னும் அடைமொழியுடன் இந்நூற்பெயர் வழங்குவதாயிற்றென்று தெரிகின்றது. ஆனாலும் உரையாசிரியர்களாற் பெரும்பாலும் சிந்தாமணியென்றே

வழங்கப்படும். புலவர் சிந்தித்தவற்றையெல்லாந் தருதலின், இது சிந்தாமணி யென்னும் பெயர் பெற்றதென்று சிலர் சொல்லுவது முண்டு.

இதற்கு மணநூல் என்றும் ஒரு பெயர் வழங்குகின்றது; அதற்குக்காரணம், இதன் உறுப்பாகிய இலம்பகம் பதின்மூன்றனுள், ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௧௨-இவற்றிற் சீவகன் காந்தருவதத்தை முதலிய மகளிரெண்மரைத் தனித்தனி மணஞ்செய்து கொண்டதும் ௨-ஆம் இலம்பகத்தில் அவன் கோவிந்தையைத் தன்தோழனாகிய பதுமுகனுக்கு மணஞ்செய்வித்ததும், ௧, ௧௦, ௧௧, ௧௩, இவ்விலம்பகங்களில் அவன் நாமகள், மண்மகள், பூமகள், முத்திமகளென்னுமிவரை மருவியதுமாக நூல்முழுவதும் மணங்களே கூறப்படுதல். இதனை,

368. "குழைமுக ஞான மென்னுங் குமரியைப் புணர்க்க லுற்றார்"

369. "திருந்துபொற் கண்ணி யாற்குச் செல்வியைச் சேர்த்தினாரே"

370. "நாமக ளலத்தை யெல்லா நயத்துடன் பருகி"

2326. "பூமிதேவி,........ஏக மாக நுகரிய வெய்தி னானே"

2368. "பொருவில் பூமகட் புணர்ந்தனன்"

3117. "கேவல மடந்தை யென்னும்........பொன்னொரு பாக மாக" என்பவற்றாலும் இவற்றின் உரைகளாலும் அறிந்துகொள்க.

இந்நூல், சைனர்களாற்பூசித்துப் பாராயணஞ்செய்யப்பெற்று வருகின்றது.

புறத்திரட்டு முதலிய சில தொகைநூல்களில் இதன்செய்யுட்கள் இடத்திற்குத்தக்கபடி தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூற்பெயரைச் சிலேடைவகையில் அமைத்துப்பாராட்டிய நூல்கள் சில. அந்தப்பகுதிகள் வருமாறு:—

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினு
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே"

(வெங்கைக்கோவை, ௧௦௭)

"வந்தென்றுஞ் சிந்தா மணியென் றிருந்தவனைச்
சிந்தென்று சொல்லியநாச் சிந்துமே"

(தமிழ்விடுதூது)

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்—வளையாழி"

(திருத்தணிகையுலா, கஉகூ-எ.

இந்நூற்கதைகள் பழைய நூல்களில் எடுத்தாளப்பெற்று வந்துள்ளன. அவற்றுட்சில வருமாறு:—

"சீவகன் மஞ்சரியைத் தாழ்த்துரைப்பச் சீறினளே
தூவாய்க் குணமாலை சோமேசா - ஆவகையே
தன்னை புணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதி றென்று"

(சோமேசர் முதுமொழிவெண்பா, கஙஉ)

"சச்சந் தனையழித்துக் கொண்டான் றனியமைச்சன்
வைச்ச வரசை வடமலையே - நிச்சம்
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகு மாந்தர் பலர்."

"தோழமை கொண்ட சுதஞ்சணனாற் சீவகனும்
வாழுமுயிர் பெற்றான் வடமலையே - தாழா
துடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு."

(வடமலைவெண்பா, கஉ, எகூ.)

"சுரமஞ் சரிவிடுத்த சுண்ணம் பழித்த அருமந்தசீவகனும்"

(வருணகுலாதித்தனுலாமடல், கண்ணி, கஙச)

"சீவகனுக் கன்றொருபெண் சிங்கமொரு கன்றீனும்
பாவனைபோ லேயெழுதிப் பக்கத்தில் - ஓவியமாக்
காரானை யொன்றெழுதிக் காட்டவரிக் கன்றுதுள்ளிப்
போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே"

(கூளப்பநாயகன்விறலிவிடுதூது, கண்ணி, உ0ஙு - ச.)

"பாராளுஞ் சீவகர்கோன் பல்லவதே யத்தனுகச்
சீரால் விருந்தமைத்த சேவகனும்"

(சிவந்தெழுந்தபல்லவராயனுலா)

" சீவகன் றந்தை முயற்சியை நீத்த செயலினன்றோ
பூவல யத்தைப் புரப்பது விண்டனன் பொற்கொடியே
தேவன் மயில்வெற்பிற் றம்வீடு காக்குந் திறமிலனூர்
காவல ரென்பதெ னென்றோத னல்ல கருத்தல்லவே"
(மயூரகிரிக்கோவை, சகஉ.)

இந்நூல்,

"முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய்முரன்று முழங்கி யீன்ற
மெய்ந்நீர்த் திருமுத்திருபத்தேழ் கோத்துமிழ்ந்து திருவில்வீசுஞ்
செந்நீர்த் திரள்வடம்போற் சிந்தா மணியோதி யுணர்ந்தார் கேட்டா
ரிந்நீ ராயுயர்வ ரேந்துபூந் தாமரையாள் காப்பா ளாமே"
(இந்நூலாசிரியருடைய ஆசிரியரது வாக்கு)

"செந்தா மரைக்குச் செழுநாற்றங் கொடுத்த தேங்கொ
ளந்தா மரையா ளகலத்தவன் பாத மேத்திச்
சிந்தா மணியின் சரிதஞ்சிதர்ந்தேன்றெருண்டார்
நந்தா விளக்குச் சுடர்நன்மணி நாட்டப் பெற்றே"
(சீவகசிந்தாமணி, - ருகசச)

" வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தாமணி"
(நச்சினார்க்கினியருரைச் சிறப்புப்பாயிரம், ௫.)

"திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டே—முதித்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளனுகே
மெங்கெழிலென் ஞாயி றெமக்கு"
(ஒருவர் தம்மைக் குறிப்பால் இகழ்ந்துரைத்துக்கொண்ட பழையசெய்யுள்)
என்று புகழ்ந்துரைக்கப்பட்டும்,

முன்னொருகாலத்தில் சோழநாட்டை ஆண்ட அநபாய சோழ மஹாராஜாவும் அவரைச்சார்ந்தோரும் இந்நூற்பொருளை மெய் யென்று கொண்டு தங்கள் சமயக்கொள்கைகளை மறந்து வீணே காலங்கழித்தலையறிந்து அவர்களை நல்வழிப்படுத்தற் பொருட்டுப் பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழாராலும்,

" கலகமிடுமமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்
றுலகிலுளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணு
துமிகுத்திக் கைவருந்திக் கறவை நிற்க

மலடுகறந் தளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க விரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்"

"வளவனுங்குண் டமண்புரட்டுத் திருட்டுச் சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசை கூர
வுளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க
வுபயகுல மணிவிளக்காஞ் சேக்கி ழார்கண்
டிளவரசன் றனைநோக்கிச் சமணர் பொய்ந்நூ
லிதுமறுமைக் காகாதிம் மைக்கு மற்றே
வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கு
மறுமைக்குமுறுதியென வளவன் கேட்டு"

" அவகதையாய்ப் பயனற்ற கதையீ தாகி
லம்மையுமிம் மையுமுறுதி பயக்கத் தக்க
சிவகதையே ததுகற்ற திறமைப் பேரார்
சீவகசிந் தாமணிபோ லிடையில் வந்த
நவகதையோ புராதனமோ முன்னூ லுண்டோ
நானிலத்துச் சொன்னவரார் கேட்ட பேரார்
தவகதையோ தவம்பண்ணிப் பேறு பெற்ற
தனிக்கதையோ வடைவுபடச் சாற்று மென்றான்"

(திருத்தொண்டர்புராணவரலாறு, செய்யுள் - கo, கஉ)

என உமாபதி சிவாசாரியராலும்,

' திருவைக் கோவைக்குங்கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பல முடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கை யாலெழுதினர். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப் பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்புட்களோடொன்றுக்குவர். அங்ஙனமுமமையாது இலக்கணமாவது தொல்காப்பியமொன்று மே; செய்புளாவது திருவள்ளுவரொன்றுமே; இவ்விரண்டும் நீங்க லான இலக்கண விலக்கியமெல்லாம் ஒன்றுக்கொன்று பெருமை சிறு மை இணையென்று கொள்வாரென்பது தோன்ற இம்முறைவைத்து அடையைப் பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ; இறையனாரகப்

பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணாது நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்கார முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன்கதை முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக வெண்ணி வாணாள் வீணாள் கழிப்பர். அவர் இவைகளிருக்கவே அவைகளை விரும்புதல் என்னை யெனின், பாற்கடலுட்பிறந்து அதனுள் வாழு மீன்கள் அப்பாலை விரும் பாது வேறு பலவற்றை விரும்புதல்போல அவரதியற்கையென்க'

(இலக்கணக்கோத்துரை, பாயிரம்)

எனத் திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமிநாததேசிகராலும்,

"பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ
பயனில தாகுஞ் சிந்தா மணி வழி படர்த லெனப்போதித்
தத்திச் சுமையொரு தோள்வைத் திடுபு லுயர்த்தோன் மனமடியா
ருறுசெய னுடப் புரிமதி வலவ"

(சேக்கிழார் பிள்ளைத்தமிழ், தாலப்பருவம், அ)

"எள்ளுந் திறத்துப் பரசமய ரேறு வருக தேறதலி
லெங்க ளுணர்வின் கணுமதரித் தினிக்கு மிருங்கோற் றேன்வருக
தெள்ளும் புலத்தர் பெறுகாம தேனு வருக வருகந்தர்
சிந்தா மணியைப் பொருட்படுத்தாச் செல்வச் சிந்தா மணிவருக"

(ஷை நூல், வருகைப்பருவம், கo)

எனத் திரிசிரபுரம் மஹாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களாலும் புறச்சமயக் காப்பியமென்பது பற்றியே இகழ்ந் துரைக்கப்பட்டுமுள்ளது.

கவிகள் தாமியற்றுங் காப்பியத்துள் உரிய இடங்களில் தம்முடைய கொள்கையையும் இடமுதலியவற்றிற் கேற்ற பொருள்களையும் வழக்கங்களையும் உவமைகளையும் அரியபிறவற்றையும் உலோகோபகாரமாகப் புலப்படுத்திச் செல்லுதல் மரபு.

கொள்கை: இந்நூலாசிரியர் சைனராதலின், "ஆர்வ வேரரிந்து" (1) என்னுஞ் செய்யுளால், சீவகனுடைய ஆசிரியன் பற்றற்று ஸ்ரீ வர்த்தமானருடைய ஸமவசரணத்தில் நோற்று, நீர் மொக்குள் உடைந்து கண்ணுக்குத் தோற்றமற் போதல்போலக் கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்து போயினனென்றார்.

முல்லைத்திணைக்குரிய முதற்பொருள் முதலியன கோவிந்தையின் சரித நிகழ்ச்சிக்குரிய இடம் பெரும்பாலும் முல்லைத்திணையாதலின், அதன் நிலமுதற்பொருளாகிய புன்புலத்தை, "புறவணி பூவிரி புன்புலம்" (19) என்பதனாலும், அதன் கால முதற் பொருளை "முல்லை காரெனப் பூப்ப" (5) என்பதனாலும், தெய்வமாகிய திருமாலை, "ஆழியான்" (41), "நிலமகட்குக் கேள்வன்" (74) என்பவற்றாலும், அதற்குரிய மக்களுள் உயர்ந்தோனை, "நந்தகோன்" (32), "கோவன்" (47), "தொறுவை யாளுந் தோன்றல்" (66) என்பவற்றாலும், ஏனையோர்களில் ஆபரை, "ஆயர்" (13), "கோவலர்" (14), "நெய்பொதிந்தபித்தை வடிமலராயர்" (20), "முல்லைக்கண்ணிச் செந்துவராடையாயர்" (77) என்பவற்றாலும், ஆய்ச்சியரை, "மழலைத்தீஞ்சொலார்" (14), "ஆய்ச்சியர்" (79), "தொறுத்தியர்" (80) என்பவற்றாலும், விலங்குகளை, "மொய்ந்நிரை" (5), "நிரைமணந்த காலையே" (10), "கானிரை மேய" (13), "நிரையைவாரி" (20), "நாகான்" (79, 82), "ஆவுந்தொழும்" (79), "வலைப்படுமானென" (16), "மான்கறிகற்ற" (77) என்பவற்றாலும், ஊரை, "பள்ளியுள்" (14), "பள்ளியாகுலமாக" (18) என்பவற்றாலும், பூக்களை, "முல்லைகாரெனப் பூப்ப" (5), "புறவணிபூ" (19), "முல்லையங்கண்ணி" (30), "முல்லைத்தாரான்" (77), "மௌவல் சூழ்மயிலை" (77), "கருவிளம்போது" (72) என்பவற்றாலும், பறையை, "ஏறங்கோண் முழங்கப்புக்கு" (81) என்பதனாலும் கூறியிருத்தலும், வழக்கங்களை, "பல்லினுற் சுகிர்ந்தநாரிற் பனிமலர் பயிலப் பெய்த, முல்லையங் கண்ணி" (30), "சேதாநறு நெய்யுந் தீம்பால் சுமைத்தயிரும்,

பாதால மெல்லா நிறைத்திடுவல்" (73), "மௌவற் கொடி சூழ்ந்த மயிலை மரத்தின் நிழலிற் கோவிந்தையை யிருக்கச் செய்து" (77) நாழிபுளிருந்த நெய்யைப் பசுக்கன்று தின்றொழிந்த அறுகம்புல்லாலே தோய்த்து "ஆவும் தோழும் போலவே தலைவனும் நீயும் ஒருங்கு மூத்திடுவீராக" என்று சொல்லி அவளுடைய தலையிற் சேர்த்தி வாழ்த்தி அகப்பையால் முகந்த நீரைச் சொரிந்து ஆய்த்தியர் ஆட்டினர் (79), பின்பு நெய்விலைபாற்கிடைத்தனவான பொன்னு லாகிய தோட்டையும் மணிக்குழையையும் நீக்கி மங்கலமாகிய கடிப் பிணையைச் சேர்த்தி ஓரிலையிற் கொணர்ந்த சந்தனத்தைப்பூசி (80) மணஞ்செய்வித்து அவளுக்கு இரண்டாயிரம் பசுக்களையும் பொற் பாவை யேழையும் ஸ்திரீதனமாகக் கொடுத்தனர் (82) என்பவற்று லும் புலப்படுத்தியிருக்கின்றனர்.

உவமைகள் :—கோவிந்தனுக்கு ஆதீண்டு குற்றியும், (11) சண்டையில் இடையர்களை இரு புறத்தும் வந்து அலைத்த வேடர் களுக்குத் தயிர்கடைகயிறும் (15) வேடர்களால் துன்புற்ற ஆயர் களுக்கு மத்தாற்கலக்கப் பெற்றதயிரும் (13) கோவிந்தையின் மென் மை, சொல், மேனி, கண் என்பவற்றிற்கு முறையே வெண்ணெய், பால், ஆனெய், கருவிளம்பூ என்பவையும் உவமையாகக் கூறப்பெற் றுள்ளன. ஆசெல்தூண் (11) மத்து (15) பாறை படுதயிர் (18) என் பவற்றால் அந்நிலப் பொருள்களும், தயிர்முழங்கச் சென்று (77) என் பதனுல் அதற்குரிய நிமித்தமும், அரசர் ஆயர்கன்னியை மணஞ் செய்து கொள்ளலாமென்பதற்குக் கண்ணன் நப்பின்னையை மணந் தான் (74) என்பதனுல் உரிய பழஞ்சரித்திரமும் கூறப்பெற்றிருத் தல் அறிந்து இன்புறற்பாலது.

"வாளரந்துடைத்த" (53) என்னும் கவியில் வேடரை வென்று வீதியில் தேர் மீதுவரும் சீவகனுக்குச் சூரியனையும் அவனை யே நோக்கிக் கொண்டு வீதியின் இருபுறத்து நிற்கும் மகளிர்கண் களுக்கு நெருஞ்சிப் பூக்களையும் உவமை கூறியிருக்கும் நேர்மை யாராலும் என்றும் மறக்கற்பாலதன்று.

இங்ஙனமே அவ்வவ்விடத்துள்ள நுட்பங்களை அறிந்தின்புறு தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

உ

சீவகசிந்தாமணி.

இரண்டாவது
கோவிந்தையாரிலம்பகம்.

நச்சினார்க்கினியருரை.

[சீவகனுடைய ஆசிரியர் தவஞ்செய்து முத்திபெற்றமை.]

௧. ஆர்வவேரரிந்தச்சணந்திபோய்
வீரன்றாணிழல்விளங்கநோற்றபின்
மாரிமொக்குளின் மாய்ந்துவிண்டொழச்
சோர்வில்கொள்கையான்றோற்றநீங்கினான்.

ஆர்வவேர் - ஆசையென்கிற பிறவிவேர். அச்சணந்தி - ஆரியநந்தி. வீரன் தாள்நிழல் - ஸ்ரீவர்த்தமானஸ்வாமிகளுடைய சமவசரணத்தே. மொக்குளின் மாய்தல் - வீடுபெறுங்கால் திருமேனியுடனே மறைதல்.

(இ - ள்.) அச்சணந்தி, இவ்விடத்து நின்றும்போய், தாள் நிழலிலே விளங்கும்படி வேரையரிந்து நோற்றபின்பு, அக்கொள்கையான், விண் தொழ மொக்குளின்மாய்ந்து பிறவிநீங்கினானென்க.

(கு - பு.) ஆசை பிறவிக்குவேரென்பதை, "அவாவென்பவெல்லாவுயிர்க்கு மெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" (திருக்குறள், அவாவறுத்தல், ௧) என்பதனாலு முணர்க; ஆரியநந்தி என்பது சீவகனுடைய ஆசிரியன் பெயர். ஸ்ரீவர்த்தமானஸ்வாமிகள் - ஜைனநூலிற் கூறப்பட்டுள்ள தீர்த்தங்கரர்களுள் இருபத்துநான்காந் தீர்த்தங்கரர்; அவருக்கு வீரனென்றும் பெயர்; "வீரன் பிண்டியே" (௩௦௧௨) என்பர் பின்னும். சமவசரணம் - அவருடைய ஆலயம்;

அது, பூமிக்கு ஐயாயிரம் வில்லுயரத்திற்கு மேலே பன்னிரண்டுயோசனை அள வுள்ளதாய்ச் சௌதருமேந்திராதி தேவர்களால் நிருமிக்கப்பட்டதென்றும், அதற்குப் பூமியிலிருந்து இருபதினாயிரம் படிகள் உள்ளனவென்றும் ஸ்ரீபுராண முதலிய நூல்கள் கூறும்; "என்னெஞ்சமேயிடமேயுடைத் தேயிந்தி ராதிவிண் ணோர் - முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத் தாய்முழு மாமணித்தூண் - மன்னிஞ்சி மூன்றொடு மானுங் கணமுத லேழ்நிலத்துப் - பொன்னின் சின லய மாயிற்றன் றோவெங்கள் புங்கவற்கே," என்னும் திருநூற்றந்தாதியாலு முணர்க; அஃது அவருடைய தாணிழலாகக் கூறப்படும்; "அறிவ னடிக்கீழ்" (சீவக. உஎ) என்றதனாலுமுணர்க; மொக்குள் - நீர்க்கொப்புளம். மாய்தல் - மறைதல். கொள்கை - தவம். விண் -விண்ணுலகத்திலுள்ளார்; ஆகுபெயர்.

[ஒப்புமைப் பகுதி] ஆர்வவேரரிந்து: "ஆசை வேரறுத்து" (இலிங்க. நாரதன் கை. 3); "ஆர்வம் வேர் முதறடிந்து" (பாகவதம், நாரதர். 9.)

வீரன்றாணிழல்: "அடிகிழற்றருகவென்று" (சீவக. 1087); "தாணிழல் வாழ்நர்" (புறநா. 161).

மாரிமொக்குளின் மாய்ந்து: "மாரிமொக்குள்" (ஐங்குறு. 275); "மழை மொக்குளில்......தோன்றிக்கெடுமிதோர்யாக்கை" (நாலடி. 27); "மாரி மொக் குளின்மாய்ந்து பிறந்து" (மேரு 6: 75); "மொக்குளின் விளியும்யாக்கை" (கம்ப. கிளைகண்டு. 79); "மீதெழுமொக்குளன்ன யாக்கையை" (கம்ப. இந் திரசித்து வதை. 9.) (க)

[சீவகனுடைய ஆக்கம்.]

உ. நம்பனித்தலைநாகநன்னகர்ப்
பைம்பொனோடைசூழ்பருமயானையுஞ்
செம்பொனீள்கொடித்தேரும்வாசியும்
வெம்பவூர்ந்துலாம்வேனிலானினே.

(இ - ள்.) பிள்ளையார், இவ்வுலகில் நாகம்போலும் இராசமாபுரத்தே யானை முதலியவற்றைக் கண்டார்விரும்ப ஏறி, வேனிலானைபோல மகளிர்க்கு வேட் கை விளைத்து நடக்குமென்க.

(கு - பு.) நம்பன் - நமக்குச் சிறந்தவன்; சீவகன். நாகம் - பவணலோகம்; பாம்புகளின் உலகம். ஓடை - யானையின் நெற்றிப்பட்டம். வாசி - குதிரை. வெம்புதல் - விரும்புதல் "வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி" (உ) என்றார் முன் கடவுள்வாழ்த்திலும். வேனிலான் - வசந்தகாலத்திற்குரியவன்; மன் மதன். பிள்ளையாரென்றது, சீவகனை. வேட்கை - விருப்பம். (உ)

வேறு.

௩. கலையினதகலமுங்காட்சிக்கின்பமுஞ்
சிலையினதகலமும்வீணைச்செல்வமு
மலையினினகலியமார்பனல்லதிவ்
வுலகினிலிலையெனவொருவனுயினன்.

இதனால், சீவகற்குப் பதினையாண்டு சென்றபின் நல்வினையாற் பிறக்கின்ற குணங்கள் கூறுகின்றார்.

கலையினதகலம் - கல்விகாரணமாகப் பிறப்பதொரு ஞானம். காட்சிக்கின்பம் - அப்பருவத்திலே பிறப்பதோர் அழகு. சிலையினதகலம் - படைக்கலம் பயின்றவாற்றால் அப்பருவத்துப்பிறக்கும்வீரம். வீணை - தாளத்தோடே கண்டத்திலும் கருவியிலும் பிறக்கும் பாட்டு; இசைநாடகம் காமத்தைவிளைத்தலின், அவற்றாற் பிறக்குங் காமத்தை வீணைச்செல்வமென்றார்.

(இ - ள்.) ஞானமும் அழகும் வீரமும் காமமுமாகின்றான் சீவகன்; இவனல்லாத இவ்வுலகில் ஞானமுதலியன இல்லையென்னும்படி தானொருவனேயாயினனென்க.

அரசர்க்குச் சிறந்தன இந்நான்கென்றார்.

இனி, கலையினதகலம் - நாமகள்; காட்சிக்கின்பம் - வீற்றுத்தெய்வம்; சிலையினதகலம் - வீரமகள்; வீணைச்செல்வம் - மாதங்கி; இவர்கள்தாம் இவனல்லது வேறுயாங்களென்றில்லை யென்னும்படி ஆயினனென்றுமாம்.

(கு - பு.) காட்சி - காணுதல். சிலையென்றது, மற்றப்படைகளுக்குமாதலின் உபலக்ஷணம். படைக்கலம் - ஆயுதம். கருவி - வீணை முதலியவை; இந்நூலில் சீவகன், "வீணைக் கிழவன்" (26), "வீணை வித்தகன்" (1002) "வீணை வேந்து" (2598) என்று கூறப்பட்டிருத்தல் காண்க. வீற்றுத்தெய்வம் - அழகைத் தருவதொரு தெய்வம். சிலப். உ: 69-70, அடியார். வீரமகள் - வீரலக்ஷ்மி. மாதங்கி-சங்கீதத்தின் அதிதேவதை; 550. அகலிய-அகன்ற, விசாலித்த.

(பிரயோக விளக்கம்) முற்றும். சிலப். க: ௩௯-௪. அடியார். (௩)

வேறு.

௪. நாமவென்றி வேனகைகொண்மார்பனைக்
காமனேயெனக்கன்னிமங்கையர்
தாமரைக்கணுற்பருகத்தாழ்ந்துலாங்
கோமகன்றிறத்துற்ற கூறுவாம்.

நகை — முத்துவடம்.

(இ - ள்.) அங்ஙனம் ஒருவனாகிய மார்பனை மங்கையர் காமனேயென்று தாழ்ந்து கண்ணாற் பருகும்படி நடக்கும் அவனிடத்துப் பிறந்த காரியங்களைக் கூறுவாமென்றாரென்க.

(கு - பு.) இது கவிக்கூற்று. நாம் - அச்சம்; அம் - சாரியை. (௪)

[அரசனுடைய பசுக்களின் ஆக்கம்.]

ரு. சில்லம்போதின்மேற்றிரைந்துதேனுலா
முல்லைகாரெனப்பூப்பமொய்ந்நிரை
புல்லுகன்றுளிப்பொழிந்துபால்படுங்
கல்லென்சும்மையோர்கடலின்மிக்கதே.

பின்பனிக்கு அழிகின்றமையின், சிலவான அழகியபோதின்மேலே தேனினம் சாய்ந்துலாவுமுல்லையென்று அடைகூறியது. இப்பொழுது காரெனப் பூக்கும்படியாகவென்க. பால்படுஞ்சும்மை - பசுக்கறக்கிற ஒலி.

(இ - ள்.) நிரை, தான் புல்லுங் கன்றை நினைத்து, முல்லை காரெனப்பூப்பத் தானே பாலைப் பொழிதலாற் படுமொலி ஒரு கடலினும் மிக்கதென்க.

(கு - பு.) போது - மொட்டறுமலர். தேனினம் - ஒருவகை வண்டின் சாதி. முல்லை - கார்காலத்தில் மிகப் பூப்பது. காரென - கார்காலமென்றெண்ணி. நிரை - பசுக்கூட்டம். கன்று உள்ளி - கன்றை நினைத்து. (ரு)

[பசுக்களைக் கவருநற்கு மலைமேலே வேடர் கூடுதல்.]

சு. மிக்கநாளினுல்வேழமும்மத
முக்கதேனினோடுறிவார்சுனை
யொக்கவாய்நிறைந்தொழுகுகுன்றின்மேன்
மக்களீண்டினார்மடங்கன்மொய்ம்பினார்.

உக்க தேனுடனே மும்மதமூர்தலாலே சுனைகளெல்லாம் தம்மில் ஒக்க வாய்நிறைந்து ஒழுகுங் குன்று.

(இ - ள்.) இங்ஙனமொலிமிக்க நாளிலே குன்றின்மேல் மொய்ம்பினாராகிய வேடரெல்லாரும் வந்து தங்களிலே திரண்டாரென்க.

(கு - பு.) வேழம் - யானை. மடங்கல் மொய்ம்பினார் - சிங்கம்போன்ற வலியையுடையவர்கள். (சு)

[வேடர்களுக்குப் புட்குரலின்குறிப்பை நிமித்திகன் கூறல்.]

எ. மன்னவன்னிரைவந்துகண்ணுறு
மின்னநாளினுற்கோடுநாமெனச்
சொன்னவாபுளேயொருவன்புட்குரன்
முன்னங்கூறினுன்முழுதுணர்வினுன்.

இன்னநாள் - இளவேனிற்குரியநாள்.

(இ – ள்.) அங்ஙனமீண்டினவர்கள், இத்தன்மைத்தாகிய நாளிலே நிரை வந்துசேரும்; அதனை நாம் கொள்ளுதுமெனக் கூறிய அப்பொழுதே, புட்கூறிய குரலின் குறிப்பை, நிமித்தமெல்லாவற்றினும் அறிவுடையானொருவன் கூறினுனென்க.

அது மேற்கூறுகின்றுர்.

(ரு - பு.) ஈண்டினவர்கள் - நெருங்கினவர்கள். கொள்ளுதும் - கொள்ளுவோம். புள்-ஈண்டு ஆந்தை; இவ்விலம்பகம்,சா உ-ஆம் கவியுரையாலுமுணர்க. (எ)

[அவர்கள் அதனைக் கேளாமற்செல்லுதல்.]

அ. அடைதுநாநிரையடைந்தகாலேயே
குடையும்பிச்சமுமொழியக்கோன்படை
யுடையும்பின்னரேயொருவன்றேரினு
லுடைதுஞ்சுடுவிற்றேனுடைந்ததொப்பவே.

கூ. என்றுகூறலுமேழைவேட்டுவி
ரொன்றுதேரினுலொருவன்கூற்றமே
யென்றுகூறினுமொருவனென்செயு
மின்றுகோடுநாமெழுகென்றேகினுர்.

இவையிரண்டுமொருதொடர்.

பிச்சம் - பீலியாற் கட்டுவன. சுடுவில் - சுடுவால்; சுடுதலென வினையெனின்ற வினைப்பெயரன்றி வினைமாத்திரை உணர்த்தி நின்று உருபேற்றது; தேனினம்போலக் கெடுதுமெனவே தமக்குப் பாடின்மை கூறினுன்.

(இ - ள்.) நாம் நிரையையடிப்போம், அடித்த பொழுதே அரசன்படை வந்து பொருது குடையும் பிச்சமும் அவ்விடத்தே கிடக்கத் தான்கெடும்; அது கெட்டபின்பு சுடுதலால் தேனினம் கெட்டாற்போல ஒருவன்தோற் கெடுவேமென்று நிமித்திகன் கூறினுன்; அவன் கூறினவளவிலே அவனை

வேட்டுவீரென இகழ்ந்து, ஒருவனைக் கூற்றமேயென்று உலகங்கூறினும், அவ்வொருவன் ஒரு தோரால் ஒன்றுஞ்செய்யமாட்டான்; ஆகலின், இன்றுகொள்ளக்கடவேம்; எழுந்திருப்பீராகவென்றுகூறி நிரைநிற்கிற இடம்நோக்கிப்போனாரென்க.

(கு - பு.) பீலி - மயிலிறகு. பாடின்மை - அழிவின்மை. நிமித்திகன் - சகுனம் சொல்லுபவன்; "சுடுதலாற் றேனின மிரியுஞ் செய்தியாமென விரிந்த" (சீகாளத்தி புராணம், நான்முக. எஉ) என்பதும், "வெள்ளை வேட்டுவீர் புள்ளவன் பிழைத்ததென், றுள்ளழிந்தவர்கட் குறுதிகூற" (பெருங். கடுரு: கசு-எ.) என்பதும் இங்கே அறிதற்பாலன. மிதிலையிலிருந்து புறப்பட்டபொழுது தசரதருக்கு ஒரு கணி நிமித்தஞ் சொன்னதாகத் தெரிகிறது; கம்ப. பரசிராம. 6.

(ஒ - ப.) குடையும் பிச்சமும்: "குடையுங் கொடியுங்கூந்தற்பிச்சமும்" (பெருங். க. ரு அ: உசு.); "பிச்சமுங்கவிகையும்" (கம்ப. உ. மந்திர. 26)

(பி - வி.) 2: இ - வி. உயிரீற்றுப். சூ. 54. (அ-கூ.)

கo. வண்டுமூசருநறவமார்ந்தவர்
தொண்டகப்பறைதுடியொடார்த்தெழ
விண்டுதெய்வதம்வணங்கிவெல்கென
மண்டினார்நிரைமணந்தகாலையே.

மூசரு: விகாரம். தொண்டகப்பறை - ஏறுகோட்பறை விண்டு - அரசனுடன்பகைத்து.

(இ - ள்.) அங்ஙனமேகினவர், நறவமார்ந்து, பறை துடியோடார்த்தெழ முருகனைவணங்கி, விண்டு, நிரைவந்து கூடினவளவிலே வெல்கவெனக்கூறி, மிக்குச்சென்றாரென்க.

(கு - பு.) மூசுதல் அரு வென்க. ஏறுகோட்பறை - ஏறுகளைக்கொள்ளுதற்பொருட்டு அடிக்கும் வாத்தியம். துடி - உடுக்கை. நறவம் ஆர்ந்து - கள்ளைக்குடித்து. குறிஞ்சிநிலத்திற்கு முருகக்கடவுள் தெய்வம். (கo.)

[பசுக்களைப் பாதுகாமினென்று வள்ளுவன் கூறலும், இடையர்கள் போர்க்குச் செல்லுதலும்.]

கக. பூத்தகோங்குபோற்பொன்சுமந்துளா
ராய்த்தியர்நலக்காசெறானான்
கோத்தநித்திலக்கோதைமார்பினன்
வாய்த்தவந்நிரைவள்ளுவன்சொனான்.

கஉ. பிள்ளைபுள்புகுந்தழித்ததாதலா
லெள்ளன்மின்னிரையின்றுநீரென
வெள்ளிவள்ளியின்விளங்குதோணலார்
முள்குமாயரும்மொய்ம்பொடேகினர்.

இவையிரண்டுமொருதொடர்.

சுமந்திருப்பாராகிய ஆய்த்தியர். கோதை - பூமாலை, நித்திலத்தையுடைய மார்பினன் - நந்தகோன். வாய்த்த - தப்பாத. வெள்ளியாற்செய்த வளையினை யுடையதோள்.

(இ - ள்.) ஆய்த்தியர் நலம் சேர்தற்கு ஆதீண்டுகுற்றியை ஒப்பானாகிய நந்த கோனுடைய அந்நிரையிலே வாய்த்தநிமித்திகன், நிரைக்குள்ளேபுகுந்து காரி அழித்ததாதலால் இன்று நீர் நிரையைக் காவலிகழாதொழிமினெனச் சொன்னான்; அதுகேட்டுப் புதுமணவாளப்பிள்ளைகளும் மொய்ம்புடனே காத்தற்கே கினரென்க.

(கு - பு.) கோங்கு - ஒருவகைமரம்; அதன் மலர்கள் பொன்னிறமுடையன. ஆய்த்தியர் - இடைச்சியர். நலக்கு - நலத்துக்கு. ஆதீண்டுகுற்றி - தினவைப்போக்கிக்கொள்ளுதற்பொருட்டுப் பசுக்கள் உரிஞ்சிக்கொள்ளுவதற்கு நாட்டப்பட்டுள்ள கட்டை. நித்திலம் - முத்து. வள்ளுவன் - வருங்காரிய முரைப்பவனாகிய நிமித்திகன். பிள்ளை, காரி - கரிக்குருவி. வள்ளி - வளை; "வெள்ளி வள்ளியின் வீங்கிறைப் பணைத்தோள்" என்பது நெடுநல். ௬௯. முள்குதல் - முயங்குதல், "முள்குஞ்சினைவலாய்" (687); "முள்குமொய்ம்பன்" (1413); "முள்கப்பூம்பட்டழித்து" (1986) புது மணவாளப்பிள்ளைகள் போருக்குச்செல்லுதல் மரபன்று.

(ஒ - ப.) பூத்தகோங்கு போற்பொன் சுமந்துளார்: "பொற்கோங் கேய்ப்ப நற்கலனணிந்த.........மகளிரை" (பெருங். 4. 11: 47-8.)

வெள்ளி வள்ளியின் வீங்கு தோணலார்: "வள்ளியம்பணைத்தோள்" (பெருங். 2 - 14; 56).

முள்குமாயர்: "முள்குவார் போகம் வேண்டின்" (தே. திருநா. ஒற்றியூர் வெள்ள: 9) (௧௧-௨.)

[இடையர்கள் மேலிதல்.]

௧௩. காயமீனெனக்கலந்துகானிரை
மேயவெந்தொழில்வேடரார்த்துடன்
பாயுமாரிபோற்பகழிசிந்தினா
ராயர்மத்தெறிதயிரினாயினர்.

இ - ள். ஆகாயமுமீனுமென்னும்படி காட்டிலே கலந்து நிரைமேய்கிற அளவிலே வேடரார்த்துப் பரந்தமழைபோலப் பகழியை உடனேசிந்தினாராக, போரிற்கு ஆற்றாராய் ஆயர் மத்தாற்கடைந்த தயிர்போலச் சிதறினரென்க.

(கு - பு.) பகழி - பாணம்.

(ஒ - ப.) ஆயர்மத் தெறிதயிரினாயினர் : "தயிருடைக்குமத் தென்ன வுலைகைநலிசம்பரனை" (கம்ப. சடாயு. 23) "மத்தெறிதயிரின் மாழ்கி" (இலிங்க பலியேற்க. 33)

(பி - வி.) 3 - 4. நன். மயிலை. சங்கர. வினை. சூ. 32; நைடத. சாவணப். நாட்டுப். 16. (சங)

[இடையர்கள் ஊரிற்சென்று முறையிடுதல்.]

கச. குழலுநவியமுமொழியக்கோவலர்
கழலக்காடுபோய்க்கன்றுதாம்பழித்
துழலைபாய்ந்துலாமுன்றிற்பள்ளியுண்
மழலைத்தீஞ்சொலார்மறுகவாய்விட்டார்

கரு. மத்தம்புல்லியகயிற்றின்மற்றவ
ரத்தலைவிடினித்தலைவிடா
ருய்த்தனரெனவுடைதயிர்ப்புளி
மொய்த்ததோளலார்முழுதுமீண்டினார்.

இவையிரண்டுமொருதொடர்.

மற்று : அசை.

(இ - ள்.) அங்ஙனம் சிதறினகோவலர், குழலும் கோடாலியும் அங்கே கிடக்கக் காட்டைக்கழலப்போய், இடைச்சேரியில் மகளிர்நின்று சுழலும்படி அவ்வேடர் கயிறுபோல அத்தலையை நெகிழவிட்டாராயின் இத்தலையை நெகிழவிடார்; ஆகலால், இனி அந்நிரையைக் கொண்டேபோயினாரென வாய்விட்டார்; அதுகேட்டுத் தோள்முழுவதும் தயிர்ப்புள்ளி செறிந்தநல்லார் திரண்டாரென்க.

உய்த்தனரென்று இறந்தகாலத்தாற்கூறினர், தெளிவுபற்றி.

(கு - பு.) குழல் - வேய்ங்குழல். நவியம் - கோடாலி. கன்று தாம்பு அழித்து - கன்றுகள் கயிற்றை அழிவுசெய்து. உழலை - தடைமரம். பள்ளி - இடைச்சேரி; "பள்ளியாகுலமாக" (கஅ) என்பர்பின் ; மத்தம் - மத்து. புளி - புள்ளி. நல்லார் - மகளிர். "மத்தம்பிணித்த கயிறுபோனின்னலஞ், சுற்றிச்சுழலுமென் னெஞ்சு" என்பது கலி. முல்லை, கo. (கச-ரு)

வேறு.

[இடைச்சியர் வருந்தல்.]

கசு. வலைப்படுமானெனமஞ்ஞையெனத்தம்
முலைப்படுமுத்தொடுமொய்குழல்வேய்ந்த
தலைப்படுதண்மலர்மாலைபிணங்க
வலைத்தவயிற்றினராயழுதிட்டார்.

(இ-ள்.) அவர், முத்தோடே குழலிலேவேய்ந்த தலையின்மாலைபிணங்கும்படி மயிர்குலைய அலைத்தவயிற்றினராய், வலைப்படுமானென வலைப்படுமயிலென வருந்தினரென்க.

(கு-பு.) மொய்குழல் - நெருங்கியகூந்தல்; பிணங்க - பின்னிக்கொள்ள.

(ஒ-ப.) "வலைப்படுமானென": "வலைத்தலை மானன்ன நோக்கியர்" (திருவாச. நீத்தல். 40); "வலைப்படுமடமான் பிணையென" (கூர்ம. இரா. வைகு. 42.) (கசு)

இடைச்சியர் கன்றொடு புலம்பல்.

கஎ. எம்மனைமாரினியெங்ஙனம்வாழ்குவிர்
நும்மனைமார்களைநோவவதுக்கி
வெம்முனைவேட்டுவருய்த்தனரோவெனத்
தம்மனைக்கன்றொடுதாம்புலம்புற்றார்.

(இ-ள்.) அவர், பின்பும், வேட்டுவர் நும்முடைய தாய்மாரை நோகும்படி அடித்துக் கொண்டுபோயினர்; இனி எம்முடையதாய்மார், எங்ஙனம் உயிர் வாழ்வீர்! எனக் கூப்பிட்டுக் கன்றோடு புலம்புதலுற்றாரென்க.

உவப்பின்கண் அஃறிணையை உயர்திணையாகக் கூறினர்.

(கு-பு.) அவர் - இடைச்சியர். வேட்டுவர் - வேடர். எம்மனைமாரென்றது, கன்றுகளை நோக்கி; அண்மைவிளி.

"கன்றுகாண் மெய்குளிர்வீர்கண்டு" என்பது பெரும்பொருள் விளக்கம்.

(ஒ-ப.) மு: முல்லை. கஉ-கூ. (கஎ)

[இடையர் இதனை அரண்மனை வாயிலோனுக்குச் சொல்லல்]

கஅ. பாறைபடுதயிர்பாலொடுநெய்பொரு
தாறுபடப்பள்ளியாகுலமாக
மாறுபடமலைந்தாய்ப்படைநெக்கது
சேறுபடுமலர்சிந்தவிரைந்தே.

௧௯. புறவணிபூவிரிபுன்புலம்போகி
நறவணிதாமரைநாட்டகநீந்திச்
சுறவணிசூழ்கிடங்காரெயின்மூதூ
ரிறையணிகேட்கவுய்த்திட்டனர்பூசல்.

இவையிரண்டும் ஒருதொடர்.

ஆய் - வேடுபோலச் சாதியை யுணர்த்திற்று. சேறு - மது. புறவு -முல்லை நிலம்.

(இ - ள்.) கற்போற்றோய்ந்த தயிரும் பாலும் நெய்யுடனேகலந்து ஆறுண்டாம்படி பள்ளியிலே வருத்தமிகழாநிற்க, கெடாதுநின்றஆய்ப்படை மாறுபாடுண்டாகப் பொருது கெட்டது; கெட்டபின்பு, ஆயர், மலர்சிந்தும்படி விரைந்து புன்புலத்தைப் போய் நாட்டகத்தைநீந்தி மூதூரில் இறையணித்தாகக் கேட்கும்படி நிரையையடித்த பூசலைக் கொண்டுபோய்ப் போகட்டாரென்க.

இட்டனரென்றார், இப்பழியை அரசன்தலையிலே போகடுதலால்; உய்த்திட்டனர்: ஒருசொல்லுமாம்.

மூதூரெனவே இது கேட்டறியாததென்பது கருத்து. இதனால் வாயிலோனுக்கு இசைத்தமை கூறினர்.

(கு - பு.) ஆய் - இடைச்சாதி; வேடு - வேட்டுவச்சாதி; இவ்விலம்பகத்தின் ௯௮-ஆம் பாடலாலுமுணர்க. சேறு - தேன். இதனடியாக வந்தபெயர் சேறையென்பது. புன்புலம் - புன்செய். சுறவு - சுறாமீன். கிடங்கு - அகழி. ஆரெயில் - அரியமதில். இறை - அரசன். அணித்தாக - சமீபமாக. 'இறையணிகேட்க' என்றதனால், வாயிலோனுக்குச் சொன்னமை பெறப்பட்டது: இங்கே புன்புலத்தைப் போய் என்றதுபோல, 'காகத்தையோடி' (சீவக. 510-உரை) என்பர் பின்; போகட்டார் - போட்டார்; "வண்டு போகட்டமலர்போன் மருண்மாலை, யுண்டுபோகட்டவுயிர்க்கு" (நள. சுயம். ௧௧௯.)

(ஒ - ப.) "பாறைபடுதயிர்": "பாறைபடுவெண்டயிர் மருவி" (கூர்ம. கண்ணவ. 111.) (௧௮-௯)

[இடையர் ஊரிற் பலர்க்கும் தெரிவித்தல்.]

௨௦. கொடுமரவெயினரீண்டிக்கோட்டிமிலேறுசூழ்ந்த
படுமணிநிரையைவாரிப்பைந்துகிலருவிநெற்றி
நெடுமலையத்தஞ்சென்றாரென்றுநெய்பொதிந்தபித்தை
வடிமலராயர்பூசல்வளநகர்பரப்பினாரே.

துகில்போலருவி. நெய்யை வார்த்த மயிரிலே மலரையுடைய ஆயர்,

(இ - ள்.) மறவர் திரண்டு நிரையைச்சேரக்கைக்கொண்டு மலையில் அருஞ் சுரத்தேபோயினரென்று பூசலை நகரிலே பரப்பினரென்க.

"பல்லாக் கொண்டா ரொல்லா ரென்னும் - பூசல் கேட்டுக் கையது மாற்றி" (பன்னிருபடலம்) என்றும், "நிரைகோட்கேட்டுச் செய்தொழி லொழிய" (பு. வெ. 2: 2) என்றும் துறைகூறுதலின், இவருங் கேட்டோ ரெல்லாஞ் சென்றுமீட்பரெனக் கருதி நகர்க்குணர்த்தினர்.

(கு - பு.) கொடுமரம் - வில். கோடு - கொம்பு. இமில் - ஏற்றின்முசுப்பு பித்தை - தலைமயிர்.

(ஒ - ப.) "துகிலருவி": "அறுவைத்தூவிரிகடுப்ப......இழிதரு" (புறநா. .154.) (உ0)

வேறு.

[கட்டியங்காரன் சிங்காதனத்திலிருத்தல்.]

உக. காசின்மாமணிச்சாமரைகன்னியர்
வீசமாமகரக்குழைவில்லிட
வாசவான்கழுநீர்பிடித்தாங்கரி
யாசனத்திருந்தானடன்மொய்ம்பினன்.

மொய்ம்பினன் : இகழ்ச்சி.

காசு - குற்றம்.

(இ - ள்.) மொய்ம்பினன், கன்னியர்சாமரை வீசுந்தோறும் மகரக்குழை வில்விடக் கழுநீரைப்பிடித்து, சச்சந்தன் இருந்த மண்டபத்தே அவனிருந்த சிங்காதனத்தே இருந்தானென்க.

(கு - பு.) மகரக்குழை-மகரமீன் வடிவாகச் செய்யப்பட்டுள்ள குண்டலம். வில் - ஒளி. அரசர் கையிற் செங்கழுநீர்ப் பூவைப் பிடித்திருத்தல் மரபு; சீவக. 1867, 2358; "தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை, யூழுறு நறுஞ்போ தொருகையிற் பிடித்து" (பெருங். ௩. ரு : 87-8), "குவளை...தனிப்பூப்பிடித்த கையன்" (பெருங். 1-38: 308-9) என்றும், "கார்நறு நீலங்கடிகயத்துள் வைகலு, நீர்நிலை நின்ற பயன்கொலோ - கூர்நுனைவேல், வண்டிருக்க நக்கதார்வர்மான் வழுதியாற், கொண்டிருக்கப் பெற்ற குணம்" (பழையசெய்யுள்) என்றும் வந்திருத்தல் காண்க. ஆங்கு - நெஞ்சறிசுட்டு. மொய்ம்பு - தோள், வலி. (உக)

[வாயிலோன் கூறல்]

உஉ. கொண்டவாளொடுங்கோலொடுங்கூப்புபு
சண்டமன்னனைத்தாடொழுதாயிடை
யுண்டோர்பூசலென்றூற்குரையாயெனக்
கொண்டனர்நிரைபோற்றெனக்கூறினன்.

(இ - ள்.) எடுத்த வாளொடும் பிரம்பொடுங் கையைக்குவித்துக் கொடிய அரசனைத் தாளைத்தொழுது அக்காட்டிலே ஒருபூசலுண்டென்றுகூறியஆசாரவாசிக்கு அது யாது கூறுயென்றரசன்கூற, அவனும் யான்கூறுகின்றதனைத் திருவுளம்பற்று ; நிரையை அடித்துக்கொண்டாரென்று கூறினனென்க.

(கு - பு.) பூசல் - பெரும்போர். ஆசாரவாசி - வாயில்காப்போன் ; ஆசாரம் - திசைச்சொல் ; இஃது அசாரமெனவும் வழங்கும். திருவுளம்பற்று - உட்கொள்க. நிரை - பசுக்கூட்டம்.

(ஒ - ப.) "வாளொடுங் கோலொடுங்கூப்புபு" : "கோலொடும் வாளொடும் கூப்பியகையன்" (பெருங். 1. 47 : 23.) (௬௨)

[கட்டியங்காரன் கேட்டுக் கோபித்தல்.]

௬௩. செங்கட்புன்மயிர்த்தோறிரைசெம்முக
வெங்கணேக்கிற்குப்பாயமிலேச்சனைச்
செங்கட்டீவிழியாத்தெழித்தான்கையு
ளங்கட்போதுபிசைந்தடுகூற்றனன்.

(இ - ள்.) அடுகூற்றனன், அதனைக்கேட்டுப் பூவைப்பிசைந்து, கண்முதலியவற்றையுடைய மிலேச்சனைக்கண்ணாலே தீப்புறப்பட விழித்துக் கோபித்தானென்க.

அவன் அரசனன்மையிற் கோபம் எளியார்மேற்றாயிற்று.

(கு - பு.) தோல் திரை செம்முகம் - தோல்சுருண்டசிவந்தமுகம். வெங்கண் - அஞ்சாமை. குப்பாயம் - சட்டை. மிலேச்சர்கள் பண்டைக்காலத்தில் வாயில் காவலர்களாக இருப்பதுண்டென்று பழைய நூல்களாலும் தெரிகின்றது. கட்டியங்காரன் முதலில் மந்திரியாக இருந்து பின்பு அரசனாகிய சச்சந்தனைக் கொன்று அரசாட்சி பெற்றவனாதலால், 'அவன் அரசனன்மையின்' என்றார்; நிகழ்ந்த செய்தி கூறிய வாயிலோனைக் கோபித்தல் நியாயமன்றென்று உணர்க.

(ஒ - ப.) "வெங்கணேக்கிற் குப்பாயமிலேச்சனை" : "படம்புகு மிலேச்சர்" (முல்லை. 66); "காய்ந்தநோக்கிற் காவலாளரும்" (பெருங். 4. 10 : 38) (௬௩)

வேறு.

[சேனைத்தலைவனுக்கு அவன் கூறல்.]

௬௪. கூற்றின்னிடிக்குங்கொலைவேலவன்கோவலர்வாய்
மாற்றம்முணர்ந்துமறங்கூர்கடற்றானைநோக்கிக்
காற்றின்விரைந்துதொறுமீட்கெனக்காவன்மன்ன
னேற்றையரிமானிடிபோலவியம்பினனே.

* "ஏறுமேற்றையும்" என்றலின், ஏற்றையும் பெயர்.

(இ - ள்.) கூற்றுப்போற் கோபியாநின்ற வேலவனுகிய காவன்மன்னன், அக்கோபம் சிறிது தணிந்து, கோவலரையழைத்து, அவர் கூறிய கூற்றிற் பொருளையுணர்ந்து தனது தானையைப்பார்த்து, காற்றினும் விரைந்துசென்று நிரையை மீட்பீராகவென்று அரிமானேறுமிடியும்போல இயம்பினனென்க.

(கு - பு.) கூற்றுப்போல் - யமன்போல. கோவலர் - இடையர். கூற்று - சொல். தானை - சேனை. அரிமானேறு - ஆண்சிங்கம். மறம் - வீரம். மீட்க என.

(பி - வி.) 4: நன். மயிலை. சங்கர. உரி. 17 - மேற். (உச)

வேறு.

[சேனையின் எழுச்சி.]

உரு. கார்விளைமேகமன்னகவுளழிகடாத்த வேழம்
போர்விளையிவுளித்திண்டேர்புனைமயிர்ப்புரவிகாலாள்
வார்விளைமுரசம்விம்மவானுலாப்போந்ததேபோ
னீர்விளைசுரிசங்கார்ப்பநிலநெளிப்பரந்தவன்றே.

கார்காலத்துண்டானமேகமன்ன கவுண்மறைந்த கடாம். போருண்டா தற்குக் காரணமான குதிரை. வார்விளை - வாருண்டான. யானையும் பரியும் முழக்கமுமுண்மையின், மேகம் உவமை.

(இ - ள்.) வேழமும் தேரும் புரவியும் காலாளும் முரசம் விம்மச் சங்க மார்ப்ப வானுலாப்போந்ததேபோல் நிலநெளியப் பரந்தவென்க.

இனி, வானுலாப் போந்ததேபோலு நீராவது கடல்; அதில் விளைந்த சங்குமாம்.

நெளிய: விகாரம்.

(கு - பு.) கவுள் - கன்னம். கடாம் - மதம். வேழம் - யானை. புரவி - குதிரை. வான் - மேகம். உலா - பவனி. பரிசை - கேடகம். சுரிசங்கு - முகம் சுழித்த சங்கு ; நெளி -நெளிய.

(ஒ - ப.) "நிலநெளிப் பரந்த" (படை) : "ஞாலநெளிய வீண்டிய வியன் படை" (புறநா. 23.) (உரு)

[போர் செய்தல்.]

உசு. காலகம்புடைப்பமுந்நீர்க்கடல்கிளர்ந்தெழுந்ததேபோல்
வேலகமிடைந்ததானைவெஞ்சினவெயினர்தாக்க
வால்வளையலறவாய்விட்டிரலையுந்துடியுமார்ப்பப்
பால்வளைந்திரவுசெற்றுப்பட்டலொடுமலைந்ததொத்தார்.

* தொல். மரபியல். உ

(இ - ள்.) காற்று உள்ளே அடித்தலாலே கடலெழுந்ததேபோலக் கிளர்ந்து வேல்மிடைந்த தானையும் எயினரும் வளையலற இரலையும் துடியும் வாய்விட்டார்ப்பத் தம்மிற் றாக்குதலாலே கோவித்து ஒருபக்கத்திலே வந்து வளைந்து இரவும் பகலும் மலைவதொத்தாரென்க.

மூன்று நீர்மையையுடைய கடல்; அது முற்கூறினும்.

ஒடு : எண்ணொடு. வேடர் அரசர்க்கெதிர்நிற்றலின், இரவும் பகலு முவமையாயின. வளை தானைக்கும், துத்தரிக்கொம்பும் துடியும் வேடர்க்கும் நிரனிறை.

(கு - பு.) மூன்றுநீர்மை - நிலத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல். முன்பு கூறியது, இந்நூல் அவையடக்கம், உ - ஆம் கவிபுரையில். கிளர்ந்து - வளர்ந்து. எயினர் - வேடர். வளை - சங்கு. மலைவது - போர்செய்வது. வேடர்க்கு இரவும், அரசன் படை வீரர்க்குப் பகலும் உவமை. செற்று - நெருங்கி. துத்தரிக்கொம்பு - ஒருவகை ஊதுகொம்பு, "கொம்பு துத்தரி கொட்டு முறைமையான்" என்றார் கம்பநம்; கங்கைப்படலம். ௬௦. (உசு)

உஎ. விற்பழுத்துமிழ்ந்தவெய்யவெந்நுனைப்பகழிமைந்தர்
மற்பழுத்தகன்றமார்பத்திடங்கொண்டுவைகச்செந்நாச்
சொற்பழுத்தவர்க்குமாண்மைசொல்லலாந்தன்மைத்தன்றிக்
கொற்பழுத்தெரியும்வேலார்கொடுஞ்சிலைகுழைவித்தாரே.

பழுத்து - குழைந்து. வெய்ய - விரும்பின. மற்பழுத்து - மற்றொழிலிலே முற்றுப்பெற்று. செவ்வியநாவிலே சொல்லெல்லாம் கைவந்தவர்கள். கொற்றொழிலிலே அடிபட்டு. மைந்தரும் வேலாரும் அரசன் படை.

(இ - ள்.) வேடர் கையில் வில் வளைந்து கான்ற பகழி மைந்தர் மார்பத்தே தங்குதலாலே கவிகளுக்கும் ஆண்மை கூறலாந் தன்மைத்தன்றாக எரியும் வேலார் அவ்வேடர் வில்லைக் கெடுத்தாரென்க.

இனி, வேலார் தமது வில்லை வளைத்தார், அவ்வளவிலே வேடர் மைந்தரை வீட்டினரென்றுமாம்.

(கு - பு.) வெம்மை - விருப்பம்; "வெம்மையுட்டினம் விருப்பம்" என்பது சூடாமணிநிகண்டு. கொற்றொழில் கொல்லன்றொழில், அல்லது கொல்லுதற்றொழில். கான்ற - உமிழ்ந்த. 'வீட்டினர்' என்பது அடுத்த செய்யுளிலுள்ளது. கைவந்தவர் - மிகத்தேர்ந்தவர்.

(ஒ - ப.) "விற்பழுத்துமிழ்ந்த......பகழி": "வில்லுமிழ்நடுங்கணை" (மலைபடு. 226); "விற்பழுத்துமிழும் வெய்ய வாளி" (பாகவதம். சராசந். கஈ). "விற்பழுத்துமிழும் வெய்யகணை" (கூர்ம. இரா. வனம். 56); "விற்பழுத்துமிழ் வெங்கடுங்கணை" (காசிகா. துர்க்கன்- 16.) (உஎ)

[வேடராற் சேனைதுலைதல்.]

உஅ. வாட்படையனுங்கவேடர்வண்சிலைவளையவாங்கிக்
கோட்புலியினத்தின்மொய்த்தார்கொதிநுனைப்பகழிதம்மால்
வீட்டினார்மைந்தர்தம்மைவிளிந்தமாகவிழ்ந்ததிண்டேர்
பாட்டரும்பகடுவீழ்ந்தபனிவரைகுனிவதொத்தே.

(இ - ள்.) தம்மைக்கெடுத்த வாட்படை கெடும்படி வேடர் வில்லைவளைத்துப் புலியினம்போல் எதிர்சென்று மொய்த்தவர்கள், தம்பகழியாலே வீரரானவர்களை வீட்டினார்; அவ்வளவிலே மா வீழ்ந்தன; தேர்கவிழ்ந்தன; வரை குனிவதனையொத்துப் பகடு பட்டு வீழ்ந்தனவென்க.

மொய்த்தார்: தொழிற்பெயர். பட்டு: விகாரம்.

(கு - பு.) மொய்த்தவர்கள் - வேடர்கள். வீட்டினார் - கொன்றார். மா - குதிரை. வரை - மலை. பகடு - யானை. தொழிற்பெயர் - வினையாலணையும் பெயர். 'பட்டு' என்பது பாட்டு என வந்தமையின், விகாரம். வணங்க - வளைய. கோள் - கொலை. நுனை : நுனி. (உஅ)

[சேனை புறங்கொடுத்து ஓடுதல்.]

உகூ. வென்றிநாங்கோடுமின்னேவெள்ளிடைப்படுத்தென்றெண்ணி
யொன்றிபுள்வாங்குகென்னவொலிகடலுடைந்ததேபோற்
பொன்றவழ்களிறுபாய்மாபுனைமயிர்க்குஞ்சிபிச்ச
மின்றவழ்கொடியொடிட்டுவேற்படையுடைந்தவன்றே.

வேற்படை - காலாள். குஞ்சி - சிற்றணுக்கன்.

(இ - ள்) படாதமைந்தர், வேடரை வெளியிலே புறப்படவிட்டு யாம் இப்பொழுதே வெற்றியைக்கொள்ளுதுமென்று எல்லாருமெண்ணி அப்படையுடனே பொருந்தித் தள்ளிச் செறிது குறைப்பீராகவென்று தம்படைக்குச் சொல்ல, களிறும் மாவும் வேற்படையும் குஞ்சத்தையும் பிச்சத்தையும் கொடியுடனே போகட்டுக் கடலுடைந்தது போலுடைந்தவென்க.

(கு - பு.) சிற்றணுக்கன் - ஒருவகை விருது. இது, மிகவும் அருகிற் பிடித்தற்குரியது. "கோலக்குஞ்சி நிழற்குளிர் பிச்சமும்" என்பர்பின்; சீவக. உகஎ0. கொள்ளுதும் - கொள்ளுவோம். பிச்சம் - பீலிக்குடை. வெள்ளிடைப்படுத்து - வெளியிடமுண்டாகச்செய்து. இக்கவியின் பொருளோடு சஉ - ஆம் கவிப்பொருள் ஒத்திருத்தல் காண்க. (உகூ)

[இடையர் தெரிவித்தலும், கட்டியங்காரன் வருந்துதலும்.

ந0. பல்லினாற்சுகிர்ந்தநாரிற் பனிமலர் பயிலப்பெய்த
முல்லையங்கண்ணிசிந்தக்கால்விசைமுறுக்கியுாய

சொல்லெனவொலிப்பவோடிப்படையுடைந்திட்டதென்ன
வல்லலுற்றழுங்கிநெஞ்சிற்கட்டியங்காரனழ்ந்தான்.

(இ - ள்) படை கெட்ட வளவிலே ஆயர், கண்ணி சிந்தும்படி கால் விசையுண்டாக முறுக்கி ஓடி ஒல்லெனவொலிப்பப் படையுடைந்ததென்று கூற, அது கேட்டுக் கட்டியங்காரன் நெஞ்சிலே ஒரு வருத்தமுற்றிரங்கி அதிலே அழுந்தினனென்க.

பல்லாற் கிழித்த நாரிலே பூ நெருங்க வைத்துக் கட்டப்பட்ட முல்லைக் கண்ணி.

என்றார்க்குப் பாடமாயின், என்று வருந்தினார்க்குத் தானுமெதிரே வருந்தினனென்க.

(கு - பு.) கண்ணி - மாலை. இடையர்க்கு முல்லைமாலையுரித்து. "பல்லினாற் சுகிர்ந்த நாரிற், கொந்தவிழ் கோடற் போது கட்டிய குழங்கன் மாலை" (கூர்மபுராணம், பிலக்க. சு) என்பது இங்கே அறியற்பாலது. (௩௦)

[இடையர் மீட்டும் தெரிவித்தல்.]

௩௧. வம்புகொண்டிருந்தமாதர்வனமுலைமாலைத்தேன்சோர்
கொம்புகொண்டன்னநல்லார்கொழுங்கயற்றடங்கண்போலு
மம்புகொண்டரசர்மீண்டாராக்கொண்டுமறவர்போனார்
செம்புகொண்டன்னவிஞ்சித்திருநகர்ச்செல்வவென்றார்.

செம்பின்றன்மையைக் கொண்டாலொத்த மதில் உலகிற்கன்றி நகரிற் கரசனாகிய ஸ்ரீமானேயென்றார், வெகுண்டு.

(இ - ள்.) நிரைபோனபின் வந்த ஆயர், செல்வனே, மாலையினது தேனொழுகுவதொரு கொம்பு கச்சைத் தம்மிடத்தேகொண்டு அடிபரந்த காதலையுடைய முலையைத் தனக்குறுப்பாகக் கொண்டாற்போலு நல்லாருடைய கண் போலத் தப்பாத அம்பையெதிர்கொண்டு அரசர் மீண்டார்; மறவர் ஆவைக் கொண்டே போனாரென்றாரென்க.

அரசர் - அவன் புதல்வரும் மதனனும்.

(கு - பு.) மதனன் - கட்டியங்காரனுடைய மைத்துனன். "செம்படுத்த செழும்புரிசை," "செம்புகொப் புளித்த மூன்றுமதில்" எனத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், "செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து" என மாங்குடி மருதனாரும் அருளிச்செய்தவை இங்கே அறிதற்பாலன.

(ஒ - ப.) "நல்லார்......தடங்கண் போலுமம்பு": "போல்வளையாள்...... கண்போற்பகழி" (பு. வெ. காஞ்சி. 24); "செம்பு கொண்டன்னவிஞ்சி":

"செம்புறழ்புரிசைப்பாழி" (அகநா. 375) ; "செம்புறழ்புரிசைச் செம்மன் மூதூர்"; "செம்புபுனைந்தியற்றிய சேணெடும்புரிசை" (புறநா. 37, 201); "செம்பியன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்" (நெடுநல். 112); "செம்படுத்த செழும் புரிசை" (தே. திருஞா. தெளிச். 3); "செம்பிட்டுச் செய்தவிஞ்சி" (கம்ப. கும்ப. வதை. 159.) (௩௧)

[நந்தகோன் முரசறைவித்தல்.]

௩௨. மன்னிரைபெயர்த்துமைந்தர்வந்தனர்கொள்கவாட்கட்
பொன்னிழைசுடருமேனிப்பூங்கொடியனையபொற்பிற்
கன்னியைத்தருதுமென்றுகடிமுரசியம்பக்கொட்டி
நன்னகர்வீதிதோறுநந்தகோனறைவித்தானே.

(இ - ள்.) அதுகேட்டு அரசன் வாளாவிருத்தலின், நந்தகோன் கண்முதலியவற்றையுடைய கன்னியை மைந்தர் நிரைமீட்டுவந்தவர் கொள்வாராக; யாமும்தருவேமென நகர்வீதிதோறு மிக்கமுரசை முழங்கக்கொட்டிச் சாற்றுவித்தானென்க.

மன்னிரை - பெரியநிரை. பூண்விளங்குதற்குக் காரணமான மேனி.

இரண்டு குலத்தோரும் தாழ்வு உயர்வு கருதாதிருத்தற்குக் கொள்க வென்றும் தருதுமென்றுங் கூறினான். படைநான்கு மிகப்படைத்துப் பல்லுயிர்க்கும் அருள்புரிந்தோருண்மையானும், கன்னியை விரும்புவாருண்மையானுங் கொட்டியறைவித்தானென்க.

(கு - பு.) வாளாவிருத்தல் - சும்மாவிருத்தல். நந்தகோன் - அரசனுடைய பசுக்கூட்டத் தலைவன். கன்னி - நந்தகோன் மகள். கடி - மிகுதி. (௩௨)

[கேட்டவர்கள் தம்மால் ஆகாதென்றல்.]

௩௩. வெதிர்ங்குதைச்சாபங்கான்றவெந்நுனைப்பகழிமூழ்க
வுதிர்ந்ததுசேனையீட்டங்கூற்றொடுபொருதுகொள்ளுங்
கருந்தடங்கண்ணியன்றிக்காயமாறாகவேகு
மருமபெறலவளுமாகென்றாடவர்தொழுதுவிட்டார்.

மூங்கிலாற்செய்த குதையையுடைய வில்.

(இ - ள்) ஆடவர், சேனைத்திரள் வேடர்தம் சாபங்கான்ற பகழி மூழ்குதலாலே கெட்டது; ஆதலால், இவளையன்றி ஆகாயமேவழியாகச் செல்வாளொரு பெறுதற்கரிய தெய்வமகளுமாக, அவ்வேடராகிய கூற்றொடு பொருது கொள்ளும் கோளைவல்லாரில்லையென்று தொழுதுவிட்டாரென்க.

இது சொல்லெச்சம்.

(கு - பு.) வெதிர் - மூங்கில். குதை - நாணைக்கட்டுதற்கு வில்லின் இரு புறத்தும் அமைந்துள்ள பள்ளம். சாபம்-வில். சொல்லெச்சம் என்றது 'கோளை வல்லாரில்லை' என்றதனை. (நுங)

[இச்செய்தியை ஒருவன் சீவகனுக்கு உணர்த்தல்.]

நுச. கார்விரிமின்னனார்மேற்காமுகர்நெஞ்சினோடுந்
தேர்பரிகடாவித்தேந்தார்ச்சீவகனருளிற்போகித்
தார்பொலிபுரவிவட்டந்தான்புகக்காட்டுகின்றாற்
கூர்பரிவுற்றதெல்லாமொருமகனுணர்த்தினானே.

(இ - ள்.) சீவகன், மின்னையொக்கும் மகளிர்மேலே காமுகர்நெஞ்சு ஓடு மாறுபோல ஓடுந்தேரைச் செலவிலே கடாவிப் பின்பு, புரவியை வட்டத்தே செல்லக் காட்டுகின்றவனுக்கு, அவனருளாலே ஒருமகன் போய்வந்து கூர் பரிவுற்றதெல்லா முணர்த்தினானென்க.

வட்டம் - வாளி. இனி, ஒரு மகன் தேர்பரிகடாவிப் போய் வந்தென்று மாம்.

இதன்பின், * "என்றவன்" † "சேட்டிளம்" என இரண்டுகவி கூறு வாருமுளர் ; அவை பயில வழங்கா.

(கு - பு.) கார் - மேகம். காமுகர் - காமிகள். பரி - செலவு. வாளி - வட்ட மாயோட்டல். காட்டுகின்றவன் - சீவகன். பரிவுற்றது - வருத்தமுற்றது. (நுச)

வேறு.

[சீவகன் சபதஞ் செய்தல்.]

நுரு. தன்பான்மனையாளயலான்றலைக்கண்டுபின்னு
மின்பாலடிசிற்கிவர்கின்றகைப்பேடிபோலா
நன்பால்பசுவேதுறந்தார்பெண்டிர்பாலர்பார்ப்பா
ரென்பாரையோம்பேனெனின்யானவனாகவென்றான்.

---

* என்றவனுரைப்பக்கேட்டேயெரிமணிக்கடகக்கையா
லொன்றியதோழர்கைம்மேலெறிந்துநக்குணர்வின்மிக்கான்
சென்றவற்கோகையாகச்சிறப்பொடுசெம்பொன்சிந்தி
நன்றிதேபோல்வதில்லைநாந்தொறுமீட்டுமென்றான்.

† சேட்டிளம்பருதிபோலுந்திருமகிழ்மாலைமார்பன்
கேட்டலுங்கனன்றுவல்லேகிளரொளிநந்ததிண்டேர்
நீட்டமில்செய்கைதம்மாற்பண்ணெனநினைந்துசொன்னான்
றீட்டரும்பருதியன்னசீவகசாமியன்றே,

தன் பருதியாய்த் தங்கிய வீரமகளே. போலாவென்பது செய்யாவென் னுமெச்சப்பொருட்கண் வந்த உவமைச்சொல். நன்பால் - நல்லொழுக்கம்; * "பலவயினானும்" என்றதனால் சிலவயின் திணைவிராய் எண்ணி உயர்திணை யான் முடிந்தன.

(இ - ள்.) நல்லொழுக்கம், பசு, துறந்தார், பெண்டிர், பாலர், பார்ப்பா ரென்பாரை ஓம்பேனெனின், யான், தன்வீரத்தை அயலாரிடத்தே கண்டு பொறுத்தான் ஆண்மகனன்மையிற் பேடியையொத்துப் பின்னும் பாலடிசி லுண்டற்கு மேற்கொள்கின்ற ஒழுக்கத்தையுடைய கட்டியங்காரனுவேனென் றானென்க.

இஃது உட்கோள். இனிப்போலாமென மகரவீறாக்கிப் பேடி போலாமவ னாகவென்றுமாம். போலாவென்றது எச்சப்பொருளுணர்த்தினமையின் ஒப் பில் போலியாகாமையுணர்க.

(கு - பு.) வீரமகள் - வீரலக்ஷ்மி. ஓம்பேனெனின் - பாதுகாவேனாயின். பாலடிசில் - பாற்சோறு. உட்கோள் - மனத்தினிற்கொண்டது; எண்ணியது.

(ஒ - ப.) "தன்பான் மனையாளயலான்றலைக் கண்டு பின்னு, மின்பாலடி சிற்கிவர்கின்றகைப் பேடிபோலா:" "நின்னையறிவன் பெரிதுநின்முறையனாய, கன்னியையொர் காளைபிறனெய்துவது கண்டு, மன்னுமணவில்லுள் வயிறாரவ யில் கின்றாய்க், கின்னுமுளவோ புதிய வென்றுமிகநக்கான்" (சூளா. அரசியற். 156); "மனைவியயலான் மருவல் கண்டுமவள் கையாற், றினையளவு மோர்பொ ழுது தின்றவனுமாவேன்" (பாரதம். 13-போர். 184.)

(பி - வி.) 2. இ - வி. சூ. சிவஞா. பெயர். 7; முற்றும். இ - வி. வைத். பொது. 4. நன். மயிலை. சங்கர. பொது. 27. மேற். (௩௫)

[சீவகன் போருக்குப் புறப்படுதல்.]

௩௬. போர்ப்பண்ணமைத்துநுகம்பூட்டிப்புரவிபண்ணித்
தேர்ப்பண்ணமைத்துச்சிலைகோலிப்பகழியாய்ந்து
கார்க்கொண்மூமின்னினிமிர்ந்தான்கலிமான்குளம்பிற்
பார்க்கண்ணெழுந்ததுகளாற்பகன்மாய்ந்ததன்றே.

பண்ணமைத்தல் - சமைத்தல். கொண்மூ : விகாரம்.

(இ - ள்.) புரவியைப்பண்ணி நுகத்தேபூட்டித் தேரைப் பண்ணமைத்துப் பின் தன்னைப் போருக்கு ஈடாகப்பண்ணமைத்துக் கோலி ஆய்ந்து மின்போலத் தேரைச்செலுத்தினான்; அப்பொழுது குதிரைக்குரத்தாற் பாரிடத்தெழுந்த புழுதியாலே பகற்பொழுது கெட்டதென்க.

தொல். சொல். கிளவியாக்கம், சூ. ௰க.

(கு - பு.) பண்ணி - ஆயத்தஞ் செய்து. சிலைகோலி - வில்லை வளைத்து. கொண்மூ - மேகம்; "கொண்மு மாடங்கள்கூடலின்" என்றார், பெரும்பற்றப் புலியூர் நம்பியும்; திருவால. 12: 13. கலி - முழக்கம். (ருசு)

[நீங்கள் போருக்குப்புறப்பட வேண்டாவென்று வேடர்களுக்கு நிமித்திகன் கூறல்.]

ருஎ. இழுதொன்றுவாட்கணிளையாரிளையார்களுக்கிற்
பழுதின்றிமூழ்கும்பகழித்தொழில்வல்லகாளை
முழுதொன்றுதிண்டேர்முகஞ்செய்தவன்றன்னொடேற்கும்
பொழுதன்றுபோதுமெனப்புண்மொழிந்தான்மொழிந்தான்.

(இ - ள்.) முன்பு நிமித்தங் கூறினவன், அத்தேரைக் கண்டு, தோன்றின அவன் மகளிர் காமுகரிடத்து நோக்குகின்ற நோக்குப்போலத் தப்பின்றாகத் தைக்கும் அம்பாற் செய்யுந் தொழிலைவல்லகாளை; தேரொன்றே திசைமுழுதும் முகஞ்செய்தற்குக் காரணமானவன்றன்னுடனே யாம் இப்பொழுது போரை எதிர்கொள்ளும் பருவமன்று; போகக்கடவேமென்று கூறினானென்க.

(கு - பு.) இழுது - நெய். போகக்கடவேம் - மீளக்கடவேம். புள்மொழிந்தான் - புள்ளினிமித்தங் கூறினவன். (ருஎ)

[வேடர் சீவகனை எதிர்த்தல்.]

ருஅ. மோட்டுமுதுநீர்முதலைக்குவலியதுண்டேற்
காட்டுண்ணமக்குவலியாரையுங்காண்டுமென்றே
யேட்டைப்பசியினிரைகவ்வியநாகமேபோல்
வேட்டங்கிரையைவிடலின்றிவிரைந்ததன்றே.

(இ - ள்.) அப்பொழுது வேட்டுவச்சாதி, முதுநீரிடத்துப் பெரிய முதலைக்குவலியதொன்றுண்டாயின் நமக்குக் காட்டிடத்து வலியாரையுங்காண்டுமென்று கூறி, இரைக்கு இடைந்த பசியால் இரையைக் கவ்விய நாகம்போல் அங்கிரையைக் கைவிடுதலின்றாய்ப் போரிற்கு விரைந்ததென்க.

(கு - பு.) மோடு - மிகுதி. காண்டும் - காண்பேம். வேடு - வேட்டுவச்சாதி. நீரினிடத்தில் முதலை மிக வலியுடையதென்பதை, "நெடும்புனலுள் வெல்லு முதலை, யடும்புனலி னீங்கி னதனைப்பிற" என்னும் திருக்குறளாலுணர்க. "ஏட்டை வெம் பசியிற்பாய்ந்த முடங்குளை மடங்கல்" என்பது, கூர்ம. பிலக்க. சஅ. ஏட்டை - இளைப்பு. (ருஅ)

வே று.

[இரண்டு படையும் தம்முள் எதிர்த்தல்.]

ருகூ. கடற்படையனுங்கவென்றகானவரென்னுங்கூற்றத்
திடைப்படாதோடிப்போமினுய்யவென்றிரலைவாய்வைத்
தெடுத்தனர்விளியுஞ்சங்கும்வீளையும்பறையுங்கோடுங்
கடத்திடைமுழங்கக்காருங்கடலுமொத்தெழுந்தவன்றே.

(இ - ள்) அங்ஙனம் விரைந்தவர், அரசன்படை கெடும்படி வென்ற வேடரென்னுங் கூற்றத்திடையில் அகப்படாதே பிழைக்க ஓடிப்போங்கோளென்று வார்த்தை கூறித் துத்தரிக்கொம்பையூதிக் கொக்கரிப்பையும் சீழ்க்கையையு மெழுப்பினர். அதற்கெதிரே பிள்ளையாருடைய சங்கும் பறையும் கொம்பும் காட்டிலே முழங்க, இரண்டுபடையினொலியும் காரையும் கடலையு மொத்தெழுந்தவென்க.

* "வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த" என்றார் பிறரும்.

(கு - பு.) ஓடிப்போங்கோளென்பது ஓடிப்போங்களென்பதன் மரூஉ; தொல். வினை. உகூ-ஆம் சூத்திரத்திற்குக் கல்லாடரெழுதிய விசேடவுரையாலும் இது துணியப்படும்; "புறப்பற்றுத், தள்ளுங்கோளூரவிற் றாமோதரன் பள்ளி, கொள்ளுங்கோ ளூர்மருவுஞ்சோள்'' என்னும் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி யாலுமுணர்க. கொக்கரிப்பு-கர்ச்சிப்பு சீழ்க்கை - நாவின் தலையை மடித்துச் செய்யுமொலி. இவ்வொலியோடு செய்யப்படுங் கூத்துச் சீழ்க்கைக்கூத்தென்று கூறப்படும்; "போர்த்தொழி விளையவர், நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயில" என்றார் நாமகளிலம்பகத்தும், கக; "வீளைக்குரலும் விளிசங்கொலியும்" என்பது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம். பிள்ளையாரென்றது, சீவகனை. (ருகூ)

சO. கைவிசைமுறுக்கிவீசுங்கொள்ளியுங்கறங்குமேய்ப்பச்
செய்கழற்குருசிறிண்டேர்விசையொடுதிசைகளெல்லா
மையெனவளைப்பவீரரார்த்தனரவருமார்த்தார்
மொய்யமர்நாட்செய்தையன்முதல்விளையாடினானே.

விசையுண்டாக முறுக்கி. ஐயென - விரைய. பின்பு செய்யு மொய்யமருக்கு முதலைநாட்கொண்டு என்றது தான்செய்யுந்தொழில் நிகழ்த்துவதற்கு முன்பே அதனைத் தொடங்கிவைத்தல். இது தம்மிற்றும் படைவகுத்து விளையாடுந் தன்மைத்தென்று விளையாடினானென்றார். தனக்கு அவர் நிகரன்மையானும், அரசாட்சியின்மையிற் பகையின்மையானும், தனதருளும் வீரமு

* குறுந்தொகை, உஎஉ.

மேம்படுத்துவதற்குச் சென்ருகலானும், அவரை அஞ்சப்பண்ணி நிரைமீட்டானென்பதே தேவர் கருத்து; அது மேற்காண்க.

(இ - ள்.) அவரெதிர்த்தலிற் குருசில்தேர் கொள்ளிவட்டத்தையும் காற்ருடியையுமொப்ப விசையோடே விளையாடிற்க, தன்வீரர்ஆர்த்தார்; அதுகேட்டு வேடரும்ஆர்த்தார்; அப்பொழுது ஐயன் நாட்செய்து விளையாடினனென்க.

(கு - பு.) இங்ஙனம் தேர்சுற்றுதல் சக்கரகதியெனப்படும். முதலிற் செய்யும் போரைக் கன்னிப்போரென்பர். மொய்த்தல் - நெருங்குதல்,

(ஒ - ப.) "மொய்யமர்.........முதல்விளையாடினனே" : 'காகுத்தன் கன்னிப்போரில்" (கம்ப. தாடகை. 77.) (௪0)

[வேடர்கள் மெலிதல்.]

சக. ஆழியானூர்திப்புள்ளினஞ்சிறகொலியினுகை
மாழ்கிப்பையவிந்தவண்ணம்வள்ளறேர்முழக்கினுனுஞ்
சூழ்துகண்மயக்கத்தானும்புளிஞருள்சுருங்கிச்சேக்கைக்
கோழிபோற்குறைந்துநெஞ்சினறமெனமறமும்விட்டார்.

(இ - ள்.) திருமாலேறப்படுவதாகியகருடனது சிறகொலியினுலே பாம்பு மயங்கிப் படமொடுங்கினுற்போல, வள்ளல் தேரொலியாலும் தம்மைச்சூழ்ந்த துகளின் மயக்கத்தாலும் வேடர் மனவெழுச்சி சுருங்கி, வலைப்பட்ட கோழி போலச் செயல்குறைந்து தமது நெஞ்சின் அறம்புகுதாமற் கைவிட்டாற்போல ஈண்டு மறத்தையும் கைவிட்டாரென்க.

அவருயிரைக் கொடுத்தலின், வள்ளலென்ருர். பொராதே தேரொலியாலே அஞ்சுவித்து நிரைமீட்கின்ருன்.

(கு - பு.) ஆழி சக்கரம். ஊர்தி - வாகனம். துகள் - புழுதி. மறம் - வீரம்.

(ஒ - ப.) அடி 1-2: சூளா. அரசியற். 134; கம்ப. நாகபாச. 263. (௪௧)

[வேடகர்கள் அம்பு மழையைப்பொழிதல்.]

௪௨. புள்ளொன்றேசொல்லுமென்றிப்புறுத்தலைவேடன்பொய்த்தான்
வெள்ளங்தேர்வளர்ந்தநம்மைவென்றியீங்கரிதுவெய்தா
வுள்ளம்போற்போதுநாமோரெடுப்பெடுத்துய்யவென்று
வள்ளன்மேலம்புமாரியார்ப்பொடுசிதறினரே.

(இ - ள்.) அங்ஙனம் மறம்விட்ட வேடர், ஆந்தை ஒரு தேர் வருமென்று சொல்லாநின்றதென்று நமக்குச் சொல்லி இந்தப் புன்றலை வேடன் நிமித்தத்தைத் தப்பினுன் ; நம்மைத் தேர் வெள்ளமாக வளைந்தன; ஆகலான் இவ்

விடுத்து நிரைகோடலரிது; இனி நாம்கடிதாக ஒரு காலுற்றுப்பொருது தள்ளி உய்யப்போம்படி ஒருவருள்ளம்போலே எல்லாரும் செல்லக்கடவேமென்று கூறிச்சென்று, வள்ளன்மேலே அப்புமாரியைச் சிதறினாரென்க.

நீ நினைந்தாற்போலப் போவேமென்றுமாம்.

(கு - பு.) புறத்தலை என்பது, குறிப்பால் சிறிய தலையென்னும் பொருளைத் தந்தது; இப்படியே சிறியதலையை, "முனித்தலை" என்பர் பின்; இலக்கணையாரிலம்பகம், கசுச. இதன் வழிநூலும், இதிலுள்ள சொற்களையும் வாக்கியங்களையும் பெற்றுவந்ததுமாகிய சிந்தாமணிமாலை என்பதில், இங்கே கூறப்பட்ட வேடன் புறத்தலைவேடனென்று கூறப்பட்டுள்ளான். அப்புமாரி - பாணமழை. ஆர்ப்பொடு-முழக்கத்தோடு.

(ஒ - ப.) "புறத்தலை வேடன்": "முனித்தலைப்புதல்வர்" (புறநா. 250.) (சஉ)

[சீவகன் அதனை விலக்கல்.]

சங. மால்வரைத்தொடுத்துவீழ்ந்தமணிநிறமாரிதன்னைக்
காலிரைத்தெழுந்துபாறக்கல்லெனப்புடைத்ததேபோன்
மேனிரைத்தெழுந்தவேடர்வெந்நுனைப்புமாரி
கோனிரைத்துமிழும்வில்லாற்கோமகன்விலக்கினானே.

(இ - ள்.) மாரிதன்னைக் காற்று, கல்லென இரைத்தெழுந்து சிதறவடித்த தன்மைபோல, தன்மேல்நிரைத்தெழுந்த வேடருடைய அம்பாகியமழையை, கோமகன் தன் கைவில்லால் தான்சொரிகின்ற கோலை எதிரே நிரைத்து விலக்கினானென்க.

மால் - பெருமை. வரையிற்றொடுத்தென்றார், காலமழையென்றுணர்தற்கு.

காற்றுத் தான் வேண்டிய திசையே மழையைப் போக்குமாறுபோல இவனம்பு தன் விசையால் அவரம்பை மீளவிட்டதென்க.

* "நாமுறக், கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை" என்றார் பிறரும். இதனாற் 'கோமகன் என்றார்.

(கு - பு.) மணிநிறம் - நீலநிறம். பளிங்கின் நிறமுமாம். கோல் - அம்பு.

(ஒ-ப.) 'பெயலுறழக்கணைசிதறி' (மதுரை. 183); 'காலமாரியினம்புதைப்பினும் (புறநா. 187.) (சங)

[சீவகன் வேடர்களை ஓடச்செய்தல்.]

சச. கானவரிரியவில்வாய்க்கடுங்கணைதொடுத்தலோடு
மானிரைபெயர்ந்தவாயரார்த்தனரணிந்ததிண்டோ

---

* புறநானூறு, கஎங.

டானென்றுமுடங்கிற்றென்றுநிமிர்ந்ததுசரம்பெய்மாரி
போனின்றவென்பமற்றப்பொருவருசிலைபினர்க்கே.

அங்ஙனந் தொடுத்த தொடைவிசேடங்கண்டு இனிப்பொரவரிதென்று குறைந்து நிரையைக் கைவிடுதலால், 'தொடுத்தலோடும் நிரை பெயர்ந்த' என்றார்.

(இ - ள்.) தனது வில்வாய்க்கடுங்கணையை அங்ஙனந் தொடுத்த தொடையுடனே நிரைமீண்டன; அதுகண்டுஆயர்ஆர்த்தனர்; அதன்பின்பு, நிரையைவிட்டுக்குவிந்த கானவர் இரியும்படியாகத்தனது திண்டோடாவென்று முடங்கிற்று; ஒன்று நிமிர்ந்தது; அப்பொழுது அவ்வேடர்க்கு அம்புகள் பெய்மாரிபோலத் தாரையாய் நின்றவென்க.

இது நிரைமீட்டபின்பு, அவ்வேடர் நிரள் குலைந்தபோம்படி எய்த நிலைமை கூறிற்று. கொல்லாதிருத்தலின், 'மாரிபோல்' என்றார்.

(கு - பு.) கடுங்கணை - விரைவாகிய பாணம். முடங்கிற்று - வளைந்தது. என்ப: அசைநிலை.

(பி - வி.) முற்றும்- இ. கோ. சாமி. ஒழி பு. 38; நன். மயிலை. சங்கர. வினை. 32 ; பிர. சுப்பிர. திங். 5. (உசு)

வே று.

[வேடர்கள் மறைதல்.]

சரு. ஐந்நூறுநூறுதலையிட்டவாறுயிரவர்
மெய்ந்நூறுநூறுநுதிவெங்கணைதூவிவேடர்
கைந்நூறுவில்லுங்கணையும்மறுத்தான்கணத்தின்
மைந்நூறுவேற்கண்மடவார்மனம்போலமாய்ந்தார்.

தலையிட்ட - முதலிலே யிட்ட. வேடர் ஐம்பத்தாறுயிரவர். அவர் மெய் நூற்றை நூறவல்ல கணையை இப்பொழுது அங்ஙனம் நூறுதபடி சொரிந்து. தூவுதல் - மிகச்சொரிதல். மையாகிய நூறு - அஞ்சனம். இனி, மையை அழித்தற்குக் காரணமான வேலென்றுமாம். நிலைநில்லாது கெடுதலின் மனம் உவமை.

மாய்தல் - மறைதல்; * "களிறுமாய்க்குங் கதிர்க்கழனி" என்றாற் போல. தம் உயிர்க்கு ஊறுசெய்யாது எய்தமைகண்டு போகடுதலின், தூவுதலான் அறுத்தானென்றார். தூவித் துணித்தானென்றுமாம்.

(இ - ள்.) அங்ஙனம் பெய்மாரிபோனிற்கும்படி கணையைத் தூவி, வேடர் கையிற் பிறரைநூறுகின்ற வில்லையும் அம்பையும் அஞ்சிப்போகடப்பண்ணி

---

* மதுரை. உசஎ.

ஞன்; பின்பு, அவர் மடவார்மனம்போல ஒருகணத்திற் காட்டிலே மறைந்தாரென்க.

(கு - பு.)'மூன்றுதலையிட்ட முப்பதிற் றெழுத்தின்'(தொல். புணரியல்,க.) 'மெய்நூறு' என்பதில் நூறென்பது பலவென்னும் பொருளில் வந்தது. நூற - அழிக்க. (சுரு)

[சீவகன் மீட்சி.]

சசு. வாள்வாயுமின்றிவடிவெங்கணைவாயுமின்றிக்
கோள்வாய்மதியநெடியான்விடுத்தாங்குமைந்தன்
றோள்வாய்சிலையினொலியாற்றொறுமீட்டுமீள்வா
னுள்வாய்நிறைந்தநகைவெண்மதிசெல்வதொத்தான்.

கோள் - இராகு. சிலையினொலியால் - எய்கிற காலத்து விசையிற்பிறந்த ஒலியாலே; இது, "கோணிரைத் துமிழும் வில்லால்" (சுங) என்றதனைக் கருதிக் கூறிற்று.

நாடோறு நிறைந்தமதி, உலகறியக் கலைநிரம்பினமை தோற்றுவித்தலின் உவமையாம். மேல் அரசர், தேற்றவும் தேருமற் பொருதுபட்டாரேனும், அவர் கட்டியங்காரனைப்போற் பகையன்மையிற் சிறிது பாவமுளதென்று அதுதீர்த்தற்குப் பொன்னாற்பண்ணவனுருவமாக்கி விழவுஞ்செய்து களத்துப் பாவம் போக்கினனென்று கூறிய தேவர், ஈண்டு வேடர் எம்முறையானுங் கொல்லத்தகாதவராதலிற் கொலையின்றென்பது தோன்றக் களத்துப்பாவம் போக்கினனென்று கூறாராயினரென்க.

(இ - ள்.) கோள்வாய்மதியத்தைத் திருமால் விடுத்தாற்போல, மைந்தன் அவ்வேடர்மேல் வாட்டழும்புமின்றாக அம்புத் தழும்புமின்றாகச் சிலையினொலியால் நிரைமீட்டுமீள்வான், மதிபோவதனையொத்தானென்க.

(கு - பு.) இராகுவின் வாய்ப்பட்ட சந்திரனைத் திருமால் விடுத்தாரென்பது ஜைனர்கள் கூறுவதொரு கதை; அன்றி, "தேம்பலிளந் திங்கள் சிறைவிடுத்தைவாய்ப், பாம்பின்னணைப் பள்ளிகொண்டாய் பாஞ்சோதி" என்னும் பெரியதிருமொழியாலும் இது துணியப்படுகின்றது. கலை - கிரணமும் வித்தையும். மேல் என்றது காந்தருவதத்தையாரிலம்பகத்தை. அரசர் - கட்டியங்காரன் கட்டளையால் அழுக்காறுற்றுப் போர்செய்தற்கு வந்தோர். பண்ணவன் - அருகன்; பண்ணவனுருவமாக்கியது முதலியவற்றைக் காந்தருவதத்தையாரிலம்பகம், ௩உஅ-ஆம் கவிமுதலியவற்றாலுணர்க. தேவர் - இந்நூலாசிரியராகிய திருத்தக்கதேவர்.

(ஓ - ப.) பாம்பின் வாயினின்றும் மதியைத் திருமால் மீட்டதுபோல் வேடர் கையினின்றும் நிரையை மீட்டனன் : "பாம்பின், வையெயிற்றுய்ந்த

மதியின்மறவர், கையகத் துய்ந்த கன்றுடைப்பல்லா, னிரையொடு வந்த வுரைய ளுகி" (புறநா. 250); "பான்மதிவிடுத்தனே" (யா-வி. செய். மேற்.)

"நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வதொத்தான்" : "மதியம்போல ......தேர்கடைஇ" (மணி. 4: 75-6.)

வேடர்களுக்கச்சத்தை மட்டும் உண்டாக்கினமை: "காரணமில்லவன் கண் ணிற்கான்றதி..............யாரையு மெவற்றையு மச்சஞ் செய்தவே" (கந்த. திருவவ. 50.) (சுசா)

[கட்டியங்காரன் கோபித்தலும், ஊரார் மகிழ்தலும்.]

சஎ. ஆளற்றமின்றியலர்தார்வன்றோழரோடுங்
கோளுற்றகோவனிரைமீட்டனனென்றுகூற
வாளுற்றபுண்ணுள்வடிவேலெறிந்திற்றதேபோ
னாளுற்றுலந்தான் வெகுண்டானகரார்த்ததன்றே.

தோழர்க்குப் போரின்றேனுங் கூடநின்ற நிலையால் தோழரோடுமென் ரூர். கோளுற்ற - வேடராற்கொள்ளப்பட்ட. கோவன் – நந்தகோன்; அரசனு மாம். தான் தோற்றதன்மேல் இவன் வெற்றி நிலைநின்றது, புண்ணிலேவேல் எறியப்பட்டு அதுமுறிந்துநின்றாற்போன்றது. நிரைமீட்டற்கு வெகுண்டமை யால் தேவர் நாளுற்றுலந்தானென்று ஒருபெயரிட்டார்; சீவகன் அரசவுரிமை எய்துநாள் வந்துறுதலின், தனக்கிழைத்த நாளுற்றுலந்தவன் என்றுமாம்.

(இ - ள்.) தாரவன், தோழருடனே இரண்டு படையிலும் ஓராளுக்கும் குற்றமின்றாக நிரைமீட்டானென்றுகூற, அதுகேட்டு நாளுற்றுலந்தவன், இற்றதுபோல வெகுண்டான்; நகர் உவந்து ஆர்த்ததென்க.

(கு ·பு.) தோழர் - சீதத்தன், புத்திசேனன், பதுமுகன், தேவதத்தன் என்னும் இந்நால்வரும் ஐந்நூற்றுவரும். அற்றம் - அறுதல், குற்றம். தாரவன்- சீவகன். வடிவேல் - கூரியவேல். நாளுற்றுலந்தான் - கட்டியங்காரன்.

(ஒ - ப.) "ஆளற்றமின்றி.........கோளுற்ற கோவன்"; "ஆளுறுபடா மைக் கோளுறுபுரிந்தசெம்மலாளர்" (பெருங். 3. 18 ; 3-4.) (சஎ)

வேறு.

[சீவகனைக் கற்புடைமகளிர் வாழ்த்தல்.]

சஅ. இரவிதோய்கொடிகொண்மாடத்திடுபுகைதவழச்சுண்ணம்
விரவிப்பூந்தாமநாற்றிவிரைதெளித்தாரந்தாங்கி
யரவுயர்கொடியினான்றனகன்படையனுங்கவென்ற
புரவித்தேர்க்காளையன்னகாளையைப்போலிகவென்றார்.

(இ - ள்.) சீவகன் செல்கின்ற தெருவிலே கற்புடைமகளிர், மாடத்தே சுண்ணத்தோடே கலந்து புகைதவழாநிற்கத் தாமத்தை நாலப்பண்ணி விரையை எங்குந் தெளித்து அதனை இங்ஙனங் கோடித்து, தாமும் மங்கலமாக ஆரத்தை யணிந்து, துரியோதனன்படை கெடும்படிவென்ற அருச்சுனனை யொத்த காளையைப் பொலிகவென்றாரென்க.

வில்லும் தேரும் நிரைமீட்டலும் உவமம்.

(கு - பு.) சுண்ணம் - வாசனைப்பொடி. பூந்தாமம் - பூமாலை. நாலப் பண்ணி - தொங்கக்கட்டி. விரை - வாசனை; என்றது சந்தனக்குழம்பை. அதனை - அம்மாடத்தை. கோடித்து - அலங்கரித்து. விராடபுரத்திலிருந்த பொழுது அருச்சுனன் நிரைமீட்டமை இங்கே அறியத்தக்கது. (சஅ)

[வீதியிற் கற்புடைமகளிரல்லாதோர் சீவகனைக் காணுதலும் சொல்லுதலும் செய்தலும்]

சகூ. இன்னமுதனைய செவ்வாயிளங்கிளிமழலையஞ்சொற்
பொன்னவிர்சுணங்குபூத்தபொங்கிளமுலையினார்த
மின்னிவர்நுசுப்புநோவவிடலையைக்காணவோடி
யன்னமுமயிலும்போலவணிநகர்வீதிகொண்டார்.

(இ - ள்.) செவ்வாயினையும் சொல்லினையுமுடைய, வளர்கின்ற இளைய முலையினையுடையார், விடலையைக் காண்பதாக நுசுப்புநோவ ஓடி, அன்னமும் மயிலு நின்றாற்போல நகரில் தெருவைக் கைக்கொண்டு நின்றாரென்க.

இது கற்புடைமகளிரொழிந்தோரைக் கூறிற்று.

(கு - பு.) பொன் அவிர் - பொன்னைப்போலே விளங்குகின்ற. மின் இவர் நுசுப்பு - மின்னின் தன்மைபொருந்திய இடை. விடலை - கசு - பிராயத்திற்கு மேல் ஙo-வரையும் கூறப்படும் ஆண்பாற் பருவப்பெயர்; பன்னிருபாட்டியல், உஙஉ-ஆம் சூத்திரம் பார்க்க. (சகூ)

ருo. சில்லரிச்சிலம்பின்வள்வார்ச்சிறுபறைகறங்கச்செம்பொ
னல்குற்றேரணிந்துகொம்மைமுலையெனும்புரவிபூட்டி
நல்லெழினெடுங்கணம்பாப்புருவவில்லுருவக்கோலிச்
செல்வப்போர்க்காமன்சேனைசெம்மன்மேலெழுந்ததன்றே.

இன்: அசை. 'முலை யெனும்புரவி' என்றார், புரவியின்பின் தேர் செல்லுமாறு போல முலைசென்று வசீகரித்தபின்பு அல்குற்பயன் கோடலின்.

(இ - ள்.) செல்வத்தேநின்று போர்செய்யுங் காமன் சேனை சிலம்பாகிய பறை கறங்காநிற்க அல்குலாகிய தேரைச்சமைத்து, முலையாகிய புரவியைப்

பூட்டி, கண் அம்பாகக்கொண்டு, புருவமாகிய வில்லை முடியவளைத்து, தலைவன் மேலே மறுபடையாக எழுந்ததென்க.

இதனால் அவர் வேட்கை செலுத்தினமை கூறினர்.

(கு - பு.) சில் அரி - சிலவாகிய பருக்கை. சிலம்பின், இன் : அசை. வள்வார் - சிறியவார். (ருo)

ருக. நூல்பொரவரியநுண்மைநுசுப்பினையொசியவீங்கிக்
கால்பரந்திருந்தவெங்கட்கதிர்முலைகச்சின்வீக்கிக்
கோல்பொரச்சிவந்தகோலமணிவிரற்கோதைதாங்கி
மேல்வரல்கருதிநின்றார் விண்ணவர்மகளிரொத்தார்.

நூலெதிர்த்தற்கரிய. இன்னும் ஐயும் அசைச்சொல். கோல் - நரம்பு.

(இ - ள்.) இடைதளரும்படி வீங்கி அடிபரந்து தளராதிருந்த முலையைக் கச்சாற் கட்டி, விரலாற் கோதையைத் தாங்கி, சீவகன் வரவைக் கருதி இமையாதே பார்த்து, மேனிலத்து நின்றவர் தெய்வமகளிரை யொத்தாரென்க.

(கு - பு.) நுசுப்பினை : இன்னும் ஐயும் அசைச்சொல். கோல் - வீணையின்நரம்பு. கோதை-விரற்கூடு. (ருக)

ருஉ. ஆகமுமிடையுமஃகவடிபரந்தெழுந்துவீங்கிப்
போகமும்பொருளுமீன்றபுணர்முலைத்தடங்கடோன்றப்
பாகமேமறையநின்றபடைமலர்த்தடங்கணல்லார்
நாகம்விட்டெழுந்துபோந்தநாகர்தம்மகளிரொத்தார்.

அஃக - சுருங்கும்படி. பொருள் - சுணங்கு. புணர்முலை - நெருங்கினமுலை. வேல்போலுங்கண். எழுந்து - உயர்ந்து.

(இ - ள்.) எழுந்து வீங்கி ஈன்றமுலைத்தடம், ஒருபாதியேதோன்ற ஒருபாதிமறைய, ஒருவர்பின்பு ஒருவர் நின்ற நல்லார் நாகருலகத்தைவிட்டுப் போந்த நாகர்மகளிரை யொத்தாரென்க.

(கு - பு.) ஆகம் - மார்பு. நாகருலகம் - பவணலோகம்; இது போகத்திற்சிறந்ததென்று சைன நூல்கள் கூறும். (ருஉ)

ருந. வாளரந்துடைத்தவைவேலிரண்டுடன்மலைந்தவேபோ
லாள்வழக்கொழியநீண்டவரிமலர்த்தடங்கணல்லா
ரீள்சுடர்நெறியைநோக்குநிரையிதழ்நெருஞ்சிப்பூப்போற்
காளைதன்றேர்செல்வீதிகலந்துடன்றொக்கவன்றே.

வாளரம் - அரவிசேடம்.

(இ - ள்.) அராவினவேலிரண்டு தம்மில் மலேந்தனபோல் ஆள்வழக்கமற மலேந்து நீண்டகண்ணெல்லாம், கொடுமைசெய்யமாட்டாது தம்மிற்கலந்து, ஞாயிறுபோம் நெறியைநோக்கும் பூப்போலே காளை தேர் செல்கின்ற வீதியிலே சேரநெருங்கின வென்க.

(கு - பு.) வாளரம்-ஒருவகை அரம்; "வாளரம் பொருதவேலும்" என்ருர் கம்பரும்; மிதிலே. கஉ ஆள்வழக்கம் - ஆடவர்களின் நடை. மலேந்து - மாறுபட்டு. காளே - சீவகன். நெருஞ்சிப்பூக்கள் சூரியனே நோக்குமென்பதைப் பின்னுள்ளவற்ருலு முணர்க: "எழுதரு மதியங் கடற்கண் டாஅங், கொழுகு வெள் ளருவி யோங்குமலே நாடன், ஞாயிறனேயனென் ருேழி, நெருஞ்சி யனேயவென் பெரும்பணேத் தோளே" (குறுந். ௩௧௫); "பாழூர் நெருஞ்சிப் பசலே வான்பூ, வேர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்கு", (புறநா. கரு௫); "வெஞ்சுடர் நோக்கு நெருஞ்சியில்" (இறை. சூ. சஎ. உதாரணச்செய்புள்); "அருந்தவர்க் காயினுந் திருந்துமுக மிறைஞ்சாது, செங்கதிர் விரும்பும் பைங் கொடி நெருஞ்சிப், பொன்புனே மலரின் புகற்சிபோல" (பெருங். 2. 4: 14 - 5.)

(ஒ - ப.) "வாளரந்துடைத்தவைவேல்": "அரஞ்சுடர்வேல்" (கம்ப. நாகபாசப். 2); "அரங்காதுவார்கணே' (அரங்கத். 17.)

"தடங்கணெல்லாம்.........நெருஞ்சிப்பூப்போற், காளைதன் றேர்செல் வீதிகலந்துடன் ஞெருக்கவன்றே": "சுடரொடுதிரி தருநெருஞ்சிபோல" (அகநா. 336); (௫௩)

௫௪. வடகமுந்துகிலுந்தோடுமாலேயுமணிபுமுத்துங்
கடகமுங்குழையும்பூணுங்கதிரொளிகலந்துமூது
ரிடவகையெல்லேயெல்லாமின்னிரைத்திட்டதேபோற்
பட்வரவல்குலாரைப்பயந்தனமாடமெல்லாம்.

வடகம் - அத்தவாளம்; உடைவிசேடம். கதிரொளி - திங்களுஞாயிறும் போலு மொளி. கலந்து - கலப்ப. இடவகை - குறுந்தெரு. நிரைத்திட்டது: ஒருசொல்.

(இ - ள்.) வடகமுதலியன ஒளி தம்மிற்கலக்கும்படி சிலமின்னேநிரைத் தாற்போல மூதூரிடத்தினது கூறுபாட்டினெல்லே எல்லாவற்றினுமுள்ள மாட மெல்லாம் மாதரைப்பெற்றன வென்க.

இனி, மூதூரெல்லேயெல்லாம் வடகமுதலியன ஒளி தம்மிற்கலக்கும்படி சிலமின்னிரைத்தாற்போலவென்றுமாம்.

(கு - பு.) அத்தவாளம்-மேற்போர்வை. மின் நிரைத்திட்டதேபோல்-மின் னலே வரிசைப்படுத்தினுற்போல.

(ஒ - ப.) "வடகமுந்துகிலுந்தோடும்": "வடகமுந்துகிலும் மற்றும்" (காஞ்சிப். கண்புதை. 37.) (௫௪)

௫௫. மாதுகுமயிலினல்லார்மங்கலமரபுகூறிப்
போதகநம்பியென்பார்பூமியும்புணர்கவென்பார்
தோதகமாகவெங்குஞ்சுண்ணமேற்சொரிந்துதண்ணென்
றூதுகுபிணையல்வீசிச்சாந்துகொண்டெறிந்துநிற்பார்.

இதுமுதல், "வட்டிடை" (௬0) அளவு மொருதொடர்.

காதலொழுகுகின்றமயிலிற்காட்டின் நல்லார் - பரத்தையர். போதக - போதுக; "திருவேபுகுதக" (சிவக. ௨௧௨௧) என்றாற்போல. இவன் அரசனென்றறியாதிருந்தும் உலகங்காத்தற்குரியனென்று பூமியும் புணர்கவென்றார். தோதகமாக - வருத்தமாக. நல்லார் மங்கலங்கூறி, நம்பி, போதகவென்பாரும், புணர்கவென்பாரும், அவ்விடமுஞ் சொரிந்து வீசி எறிந்து நிற்பாரும்.

(கு - பு.) தாது - மகரந்தம். பிணையல் - மாலை. (௫௫)

௫௬. கொடையுளுமொருவன்கொல்லுங்கூற்றினுங்கொடியவாட்போர்ப்
படையுளுமொருவனென்றுபயங்கெழுபனுவனுண்ணூ
னடையுளார்சொல்விற்றெல்லாநம்பிசீவகன்கட்கண்டாந்
தொடையலங்கோதையென்றுசொல்லுபுதொழுதுநிற்பார்.

உம்மையிரண்டும் சிறப்பு. வாட்போரையுடையபோரென்று போரிற்கு விசேடம். பனுவல் - ஆராய்ச்சி. நடை - ஒழுக்கம். தொடையலங்கோதை - கட்டுதலையுடைய அழகியமாலை. கோதாய், நுண்ணூல்வல்லார் கூறிற்று, கொடையிலுமொருவன் கொடுப்பான்; படையிலுமொருவன் கெடுப்பான்; இவ்விரண்டும் ஒருவனிடத்தே நில்லாவன்றேயாயினும், அவ்விரண்டும் சீவகனிடத்தேகண்டேமென்று தம்மிற்கூறி, அவனைத் தொழுதுநிற்பாரும். ஒன்றல்லவெல்லாம் பலவாதலின், இரண்டையும் எல்லாமென்றார். இவற்றிற்குக் கன்னனும் அருச்சுனனுங்கொள்க. இனி நிலையாமையையுணர்ந்து கொடைக்கு நிகரில்லாதவன் அதனாற்படைக்கு நிகரிலனவனென்று சொல்லிற்றுமாம்.

(கு - பு.) பயம் - பிரயோசனம். (௫௬)

௫௭. செம்மலைப்பயந்தநற்றாய்செய்தவமுடையளென்பா
ரெம்மலைத்தவஞ்செய்தாள்கொலெய்துவம்யாமுமென்பார்
அம்மலையமுதமன்னாரகம்புலர்ந்தயர்ந்துநோக்கித்
தம்முறுவிழுமவெந்நோய்தந்துணைக்குரைத்துநிற்பார்.

இவனைப்பயந்தமையால் தவமுடையளென்பாரும், இவனைப்பெறவிருக்கின்றவள் எம்மலையிலேநின்று தவஞ்செய்தாள் ? யாமும் அதனைச்சேர்வேமென்பாரும். 'தவஞ்செய்தார்கொல்' என்றும் பாடம். அகம்புலர்ந்து - நெஞ்சுலர்ந்து. தம்முடையமிக்க சீரிய காமநோயைத் தம்தோழியர்க்குக் கூறி நிற்பாரும்.

(கு - பு.) செம்மல் - பெருமையிற் சிறந்தவன். அயர்ந்து - தளர்ந்து.

(ஒ - ப.) "எம்மலைத்தவஞ்செய்தாள்கொல்": "விழுத்தமுடையள் விளங்கிழைபெரிதென" (பெருங். 4-5 : 34.) (ருஎ)

ருஅ. சினவுநர்க்கடந்தசெல்வன்செம்மலரகலநாளைக்
கனவினினருளிவந்துகாட்டிபாங்காணவென்பார்
மனவிரியல்குலார்தம்மனத்தொடுமயங்கியொன்றும்
வினவுநரின்றிநின்றுவேண்டுவகூறுவாரும்.

நாளையென்றார், இற்றைக்குக்காட்சியால் ஆற்றுதலின். காட்டி: இகரவீற்று வியங்கோள். செல்வனே, எம்மையருளி நாளைக் கனவிடத்தேவந்து நின் அகலத்தை யாம்காணக்காட்டுவாயாக வென்பாரும். மனவு-மணி. தாம் கூறுவன ஒன்றும் கேட்பாரின்றாகவும் மயங்கிநின்று தாம் இவனிடத்துவிரும்பு நுகர்ச்சிகளைத் தம்மனத்தோடு கூறுவாரும். அல்குலார், இரண்டிடத்தும் கூட்டுக.

(கு - பு.) சினவுநர் - கோபிப்பவர், பகைவர். செல்வன்: அண்மைவிளி. அகலம்-மார்பு. காட்டி - காட்டுக. (ருஅ)

ருகூ. விண்ணகத்துளர்கொன்மற்றிவ்வென்றிவேற்குருசிலொப்பார்
மண்ணகத்திவர்களொவ்வார்மழகளிறனையதோன்றல்
பண்ணகத்துறையுஞ்சொல்லார்நன்னலம்பருகவேண்டி
யண்ணலைத்தவத்திற்றந்தார்யார்கொலோவளியரென்பார்.

மற்று: வினைமாற்று. தோன்றலை மண்ணிடத்து இம்மக்களொவ்வாராதலாற்பின்னை இக்குருசிலையொப்பார் விண்ணகத்துளரோ? அஃதறிகின்றிலேமென்பாரும் ; இவ்வுலகின்மகளிர் ஈங்கில்லாததொருநலத்தை நுகரவேண்டி இவ்வண்ணலைத் தாம்செய்த தவத்தாற்றந்தவர் தேவரோ மக்களோ அவர் யாவராயினும் எல்லாராலுமளிக்கத்தக்காரென்பாரும்.

(கு - பு.) மழகளிறு - இளங்களிறு. (ருகூ)

கூ0. வட்டுடைப்பொலிந்ததானைவள்ளலைக்கண்டபோழ்தே
பட்டுடைசூழ்ந்தகாசுபஞ்சிமெல்லடியைச்சூழ
வட்டாக்கனையசெவ்வாயணிநலங்கருகிக்காமக்
கட்டழலெறிப்பநின்றார்கைவளைகழலநின்றார்.

வட்டுடை - முழந்தாளளவாகவீரருடுக்குமுடைவிசேடம். காசு - புறத்தின் மேகலை. அட்ட அரக்கு.

(இ - ள்.) மயிலினல்லார், அமுதமன்னார், அல்குலார் ஆகிய இவர்கள் என்பாருமென்பாருமாய், வள்ளலைக்கண்டபொழுதே காமத்தீயெரிய வாய்கருகி நின்றவர்கள், பின்பு, மேகலைகழல வளைகழல நின்றாரென்க.

(கு - பு.) தானை - சேனை. பஞ்சி - செம்பஞ்சு. அட்டஅரக்கு - உருக்கிய அரக்கு. கட்டுஅழல் - வலியநெருப்பு. "குற்றுடைவாள் வட்டுடையின் வயங்க" என்பது, நைடதம், இந்திரப்படலம், ௪௦.

(ஒ - ப.) "வட்டுடைப் பொலிந்த தானை": "வட்டுடைமருங்குல்சேர்த்தி" (சீவக. 767.) (௬௦)

௬௧. வார்செலச்செல்லவிம்முமவனமுலைமகளிர் நோக்கி
பேர்செலச்செல்லவேத்தித்தொழுதுதோடக்கவிப்பாற்
பார்செலச்செல்லச்சிந்திப்பைந்தொடிசொரிந்தநம்பன்
றேர்செலச்செல்லும்வீதிபீர்செலச்செல்லுமன்றே.

வார்செலச்செல்ல - கச்சு மேலே போகப்போக. இப்பால் - பின்பு. நிலத்திலேசெல்லும்படி செல்லும்படி சிதறிச் சொரிந்தன; தொடி பலவாதலிற் கூறினர். செல்லுமென்பது, நிகழ்காலமேயுணர்த்தும்.

(இ - ள்.) நம்பன்தேர்செல்லுதலாலே இப்பாலுள்ளமகளிர், மறையுமளவு நோக்கிநின்று, அழகுபோகாநிற்கப்போகாநிற்க ஏத்தித் தொழுது தோளை நாற்ற அத்தோள்கள் செருகிக் காத்தற்குரிய தொடிகளையுஞ்சொரிந்தன. பின்பு அவனதுதேர், செல்கின்றவீதியின் மகளிர்க்குப் பசப்புப்பரக்கத்தான் செல்லாநிற்குமென்க.

"நீப்ப நீங்காது வரின்வரை யமைத்து, தோட்பழி மறைக்கு முதவிப், போக்கில்பொலந்தொடி" (நற். ௧௩௬)என்பர். முன் வளைகழலநின்றார்க்கு வருத்தமிகுதியால் தொடியுங்கழன்றனவென்க.

(கு - பு.) தோளைநாற்ற - தோளைத் தொங்கவிட. தொடி - வளைகளின் முன் அணிந்துகொள்ளப்படுவது. பீர் - பசலை.

(ஒ - ப.)"பைந்தொடி சொரிந்த": "தொடிபழிமறைத்தலிற் றோளுய்ந்தனவே" (நற். 23); "தொடிநடந்திழியச் சாஅய்த்தோளவர் கொடுமைகூறின" (தொல். களவு. சூ. 20. ந. மேற்.) (௬௧)

[சீவகன் தன்வீட்டைச்சூழ்ந்த மதிலின் வாயிலிற் புகுதல்.]

௬௨. வாண்முகத்தலர்ந்தபோலுமழைமலர்த்தடங்கண்கோட்டித்
தோண்முதற்பசலைதீரத்தோன்றலைப்பருகுவார்போ

ஞண்முதற்பாசந்தட்பநடுங்கினர்நிற்பநில்லான்
தோண்முகப்புலிபோடொப்பான்கொழுநிதிப்புரிசைபுக்கான்.

ஒளியையுடையமுகத்தே பூத்தமலர்போலுங்குளிர்ந்தகண். புரிசை - தன் மனையைச்சூழ்ந்த மதில்.

(இ - ள்.) அங்ஙனம்பசந்தவர் தம்தோளிற்பசலைதீரும்படி தோன்றலைப் பருகுவார்போலே கண்ணாலே வளைத்துப்பார்த்து நடுங்கினராய் நாணாகிய முதற்றளைதடுத்தலாலே செல்லமாட்டாது நிற்ப, தான் நில்லானாய்க் கொல்லுமுகத்தையுடைய புலிபோல்வான் புரிசைக்குள்ளே புக்கானென்க.

(கு - பு.) தோண்முதல் - தோளிடம். மகளிர்க்குரியகுணம் நான்கனுள் நாண் முதலாவது; குணம்நான்காவன: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. மதில் இங்கே வீட்டைச்சூழ்ந்தது.

(ஒ - ப) தடங்கண் கோட்டி.........நிற்ப: "பெருங்கண்கோட்டி விரும்புவனநோக்கி" (பெருங். 3. 10 : 25.) (௬௨)

[தேரைக் கொட்டிலிற் புகுத்தல்.]

௬௩. பொன்னுகம்புரவிபூட்டுவிட்டுடன்பந்திபுக்க
மன்னுகவென்றியென்றுமணிவள்ளநிறையவாக்கி
பின்மதுப்பலியும்பூவுஞ்சாந்தமும்விளக்குமேந்தி
மின்னுகுசெம்பொற்கொட்டில்விளங்குதேர்புக்கதன்றே.

ஏந்தி, ஏந்த.

(இ - ள்) புரவி நுகம்பூட்டுதல்விட்டுப் பந்தியிலேபுக்கன. பின்பு தேருக்கு மதுவை வட்டினிறையவார்த்து, அம்மதுவாகியபலிமுதலியவற்றைவென்றிமன்னுகவென்றேந்த, அத்தேர் மகிழ்ந்து கொட்டிலிலேபுக்கதென்க.

(கு - பு.) பந்தி - குதிரைகட்டுஞ்சாலை. வாக்கி - வார்த்து. சாந்து - சந்தனம். தேரினைவழிபடுதல்மரபு; இதனை, "அனையதேரினை யருச்சனைவரன்முறையாற்றி, எனையரென்பதோர்கணக்கிலா மறையவரெவர்க்கும், வினையினன்னிதி முதலிய வளப்பரும் வெறுக்கை, நினையினீண்டதோர் பெருங்கொடை யருங்கடனேர்ந்தான்" (கம்ப. தேர். உச) என்பதனாலுமுணர்க.(௬௩)

(ஒ - ப.) "பொன்னுகம் புரவி பூட்டுவிட்டு" "புரவிகள் கொளீஇயதிண்ணுகம்" (சீவக. 2214); "புரவி பூண்டபொன்னுகம்" (பெருங். 1. 45: 15); "தேர்நுக வெவ்வாசிகள்" (பாரதம். 14—போர். 51.)

"மதுப்பலியும் பூவும்.....ஏந்தி":"மதுப்பலிதூஉவும்"(பெருங்.1.33: 86.)

[சீவகன் தன்வீட்டிற் செல்லுதல்.]

௬௪. இட்டவுத்தரியமெல்லென்றிடைசுவல்வருத்தவொல்கி
யட்டமங்கலமுமேந்தியாயிரத்தெண்மரீண்டிப்
பட்டமுங்குழையுமின்னப்பல்கலனொலிப்பச்சூழ்ந்து
மட்டவிழ்கோதைமார்பின்மைந்தனைக்கொண்டுபுக்கார்.

ஒல்கி — எதிர்கொண்டு.

(இ - ள்.) ஆயிரத்தெண்மரீண்டி, எட்டுமங்கலத்தையு மேந்தி, மின்ன ஒலிப்ப உத்தரியம் இடையையும் சுவலையும்வருத்த எதிர்கொண்டு, சூழ்ந்து, மைந்தனை உள்ளேகொண்டு புக்காரென்க.

"சாமரை தீபந் தமனியப் பொற்குடங், காமர் கயலி ணிணைமுதலாத் தேமருவு, கண்ணடி தோட்டி கதலிகை வெண்முரச, மெண்ணிய மங்கலங்க ளெட்டு."

(கு - பு.) சுவல் - பிடர். ஒல்கி — அசைந்து. எட்டுமங்கலம் - அஷ்டமங் கலம், பட்டம் - நெற்றிப்பட்டம். மட்டு - மணம், தேன். கயலிணிணை - இணைக்கயல். தோட்டி - அங்குசம். கதலிகை - கொடி. (௬௪)

[வீட்டிலுள்ளார் மகிழ்ச்சி.]

௬௫. தாயுயர்மிக்க தந்தைவந்தெதிர்கொண்டுபுக்குக்
காய்கதிர்மணிசெய்வெள்வேற்காளையைக்காவலோம்பி
யாய்கதிருமிழும்பைம்பூணுயிரச்செங்கணான்றன்
சேயுயருலகமெய்தியன்னதோர்செல்வமுற்றார்.

பிள்ளை உயர்ச்சிமிகுதிக்குக் காரணமான தந்தை; "சான்றோனாக்குத றந்தைக்குக் கடனே" (புறநா. ௩௧௨) என்றார் பிறரும். காய்தல் - எறித்தல்.

(இ - ள்.) தாயும் தந்தையும் பிள்ளையை எதிர்கொண்டுபுக்கு, ஆலத்தி முதலியவற்றாலே பரிகரித்து, உலகைப் பெற்றாலொத்ததோர் செல்வத்தைத் தாமுற்றாரென்க.

(கு - பு.) சேயுயருலகம் - மிகவுயர்ந்தவுலகம்; தேவருலகம். (௬௫)

[நந்தகோன் சீவகனைநோக்கித் தன்கருத்தைக் கூறல்.]

௬௬. தகைமதியெழிலைவாட்டுந்தாமரைப்பூவினங்கட்
புகைநுதியழலவாட்கட்பொன்னனாள்புல்லரீண்ட
வகைமலிவரைசெய்மார்பின்வளளலைக்கண்டுவண்டார்த்
தொகைமலிதொறுவையாளுந்தோன்றன்மற்றின்னகூறும்,

௬௭. கேட்டிதுமறக்கநம்பிகேண்முதற்கேடுசூழ்ந்த
நாட்டிறைவிசயையென்னுநாறுபூங்கொம்பனாளை
வேட்டிறைபாரமெல்லாங்கட்டியங்காரன்றன்னைப்
பூட்டிமற்றவன்றனாலேபொறிமுதலடர்க்கப்பட்டான்.

இவை யிரண்டு மொருதொடர்.

தான் மதிக்குக்கெடாதே மதியைத்தான்கெடுக்கும் பொற்றாமரையில் திருப்பொருந்தும்படி பெருத்த மார்பினையுடைய வள்ளலைக்கண்டு சிலமொழிகளைக்கூறுகிற்கும், நிரையையாளும் வண்டாரையுடைய நந்தகோனென்க; மற்று - வினைமாற்று. இன்ன - இத்தன்மையவாகியமொழிகளை; இன்னகேளென மேலேகூட்டுக.

பொறிமுதல் - இருவினையுஞ்செய்வதற்குக் காரணமானவுயிர்: "தொழின் முதனிலையே" (தோல் வேற். ம. சூ. உக) என்றாற்போல நின்றது.

(இ - ள்.) வள்ளலைக்கண்டு கூறுந்தோன்றல். நம்பி, இதனைக்கேட்டுமறப்பாயாக; பின்னை இன்ன கேட்பாயாக; அவ்விரண்டும் யாவையெனின், கொம்பனாளை விரும்பிப் பல்லுயிரைக்காக்கின்ற பாரத்தையெல்லாம் கட்டியங்காரனைப் பூட்டித் தனக்குமுன்னே நாட்டிற்குக் கேடுசூழ்ந்த இறை அவனாலே உயிர் போக்கப்பட்டானென்க

(கு - பு.) தகை - பெருமை. வள்ளல் - சீவகன். தொகை - கூட்டம். தோன்றல் - நந்தகோன். இறை-சச்சந்தன் - கொம்பனாள்-விசயை. பொறி - இருவினை; "சிறுகாலைப்பட்ட பொறியும்" (நாலடி. 110.)

(பி - வி) ௬௭. அடி-க: இ. வி. வைத். வினை 13. (௬௬ - ௭)

௬௮. கோலிழுக்குற்றனான்றேகொடுமுடிவரையொன்றேறிக்
காலிழுக்குற்றுவீழ்ந்தென்கருந்தலைகளையலுற்றேன்
மால்வழியுளதன்றாயின்வாழ்வினைமுடிப்பலென்றே
யாலம்வித்தனையதெண்ணியறிவினுளகன்றுநின்றேன்.

காலோடி வீழ்ந்தேனாக வீழந்தென்றது, கட்டியங்காரன் இவன் அரசனோடிருந்தானென்று தன் சுற்றத்தைஅழிப்பனென்றுகருதி:

(இ - ள்.) அவனாலுயிர்போக்கப்பட்ட அன்றேவரை யேறி வீழ்ந்து உயிரைப் போக்கலுற்ற யான், மால்வழி ஆலம்வித்துப்போலத் தெறித்துப்போய் மறைந்து பின்தோன்றினதில்லையாயின் உயிரைப்போக்குவலென்றே எண்ணி வருத்தத்தே மிக்குநின்றேனென்றானென்க.

தேவிக்குப் பிள்ளையுண்மையறிதலிற் கூறினான். இது கேட்டுமறக்கவென்றமொழி.

(கு - பு.) 'கோலிழுக்குற்றனான்று' என்றது சச்சந்தனுடைய மரணத்தைக்குறித்துநின்றது; "கோலிளகிற்றன்றே" என்பர்பின்; மண்மகளிலம்பகம், சடு. கொடுமுடி-வளைந்ததலை. மால்வழி - சச்சந்தனுடையசந்ததி. ஆலம்வித்து - ஆலம்விதை. தேவி - விசயை. (கூஅ)

கூகூ. குலத்தொடுமுடிந்தகோன்றன்குடிவழிவாராநின்றே
னலத்தகுதொறுவினுள்ளேனுமங்கோவிந்தனென்பே
னிலக்கணமமைந்தகோதாவரியெனவிசையிற்போந்த
நலத்தகுமனைவிபெற்றநங்கைகோவிந்தையென்பாள்.

குலம் தோன்றுதலருமைபற்றிப் பின்னுமுடிந்தவென்றான். தன்குலமெல்லாம் இப்பொழுது தானாய்நிற்றலின் வாராநின்றேனென்றான். நலத்துக்குத்தக்க.

(இ - ள்.) யான், கோன்குடிவழி வாராநின்றேன்; இடையிடத்தேன்; பெயர் கோவிந்தனென்று கூறப்படுவேன்; கோதாவரியென்று கூறிப்புகழால் எங்கும் பரந்த இலக்கணமமைந்த என் மனைவி பெற்ற நங்கை கோவிந்தையென்று பெயர்கூறப்படுவாளென்க. (கூகூ)

எ௦. வம்புடைமுலையினளென்மடமகண்மதர்வைநோக்க
மம்படியிருத்திநெஞ்சத்தழுத்தியிட்டனையதொப்பக்
கொம்படுநுசுப்பினளைக்குறையிரந்துழந்துநின்ற
நம்படைதம்முளெல்லாநகைமுகமழிந்துநின்றேன்.

(இ - ள்.) முலையினளாகிய என்மகளைக்கண்டு எல்லார்க்கும் அம்பைத் தோளடியிலேசெல்லவலித்து நெஞ்சிலே அழுத்தியதன்மையொத்தலாலே அந்நுசுப்பினளைப் பெறவேண்டுமென்று வருந்திநின்ற நம் ஆயரிடத்தெல்லாம், முகச்செவ்வியின்றி மறுத்துநின்றேனென்க.

தான்மகட்கொடுத்தலின் நம்படையென்றான். சீவகன் விரும்பிக்கோடற்கு மகளை இங்ஙனம் சிறப்பித்துக்கூறினான்.

(கு - பு.) மதர்வை - மயக்கம். நுசுப்பு - இடை. (எ௦)

எக. பாடகஞ்சுமந்தசெம்பொற்சீறடிப்பரவையல்குற்
சூடகமணிந்தமுன்கைச்சுடர்மணிப்பூணினளை
யாடகச்செம்பொற்பாவையேமுடன்றருவலைய
வாடலிவ்வதுவைகூடிமணமகனாகவென்றான்.

(இ - ள்.) ஐயனே, அடிமுதலியவற்றையுடையகோவிந்தையைப் பாவையேமுடனேதருவேன்; குறைவற்றமணம்பொருந்தி மணமகனாவாயாகவென்றானென்க.

இஃது இன்னவாகிய மொழியைக்கேளென்றது. என்றானென்பதனை, "அகன்றாநின்றேன்" (௬அ) என்பதோடுங்கூட்டுக.

(கு - பு.) பாடகம் - ஒருவகைக்காலணி. சூடகம் - கைவளை. ஆடகப்பொன் - ஒருவகைப்பொன். "இலக்கணப்பாவையேழுங் கொடுத்தனன்" என்பர் பின்னும்; அஉ. (எக)

வேறு.

எஉ. வெண்ணெய்போன்றா றினியண்மேம்பால்போற்றீஞ்சொல்ல
ளுண்ணவுருக்கியவாநெய்போன்மேனியள்
வண்ணவனமுலைமாதர்மடநோக்கி
கண்ணுங்கருவிளம் போதிரண்டேகண்டாய்.

இதுமுதல், "குலநினையல்" (எ௩) அளவும் ஒருதொடர்.

மேம்பால் - உண்டற்குமேவும் பால்; ஈற்றுமிசையுகர மெய்யொடுங் கெட்டது. உண்ண - தீய. உம்மை : சிறப்பும்மை.

(கு - பு.) ஊறு - ஸ்பரிசம். மேம் = மேவும் - விரும்பும்.

எ௩. சேதாநறுநெய்புந்தீம்பால்சுமைத்தயிரும்
பாதாலமெல்லாநிறைத்திடுவல்பைந்தாரோய்
போதார்புனைகோதைசூட்டுன்னடித்திசை
யாதாவதெல்லாமறிந்தருளியென்றான்.

சுமைத்தயிர் - ஆடைத்தயிர். யாதுஆவது - இத்தால்வருந்தீங்கு என்.

(கு - பு.) சேதா - செம்மையாகிய பசு. அடித்தி - அடியாள். பாதாலம் - பாதாளம்.

எச. குலநினையனம்பிகொழுங்கயற்கண்வள்ளி
நலனுகர்ந்தானன்றேநறுந்தார்முருக
னிலமகட்குக்கேள்வனுநீணிரைநப்பின்னை
யிலவலர்வாயின்னமிர்தமெய்தினனன்றே.

பின்னை - அவள்பெயர்; ந - சிறப்புப் பொருளுணர்த்துவதோரிடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல. நம்பின்னை: விகாரமுமாம்.

(இ - ள்.) பைந்தாரோய், நம்பி, முலையினையும் காதலினையுமுடைய மடநோக்கி, வெண்ணெய்போற்குழைந்து இனியள்; சொல்லள்; மேனியள் அவையன்றி அவள்கண்களும் பூவிரண்டேகாண்; அவளை வரைந்தால் யாது ஆவது? யாமறிய முருகன்வள்ளிநலநுகர்ந்தானன்றே; திருமால்பின்னையைப்

புணர்ந்தானன்றே, ஆதலாற் குலத்திற்றாழ்வுகருதாதொழிக; இனி யான் கூறின வெல்லாம் திருவுள்ளம்பற்றி நின் அடித்தியைக் கோதை சூட்டுவாயாக; சூட்டுமிடத்துக் கலியாணஞ்செய்தற்குச் சிறியேனல்லேன்; நெய்யும்பாலும் தயிரும் பாதாளமெல்லாம் நிறைப்பேனென்றானென்க.

மணமகனாகவென்றவிடத்து முகச்செவ்விகாணாமையிற் பின் இதுகூறி உடம்படுத்தினான்.

(கு - பு.) இலவலர் - இலவம்பூ. நப்பின்னை - நப்பின்னைப்பிராட்டியார்; இவர் கண்ணனுடையதேவிமார்களுள் ஒருவர்; "ஆயர்பாவை நப்பின்னைதனக்குரை" என்பது, பெரியதிருமொழி; இவரை நீளாதேவியின் கூறென்பர்; இப்பெயர் பின்னையெனவும் வழங்கும்; நச்செள்ளை - காக்கை பாடினியார் நச்செள்ளையார்; இவர் தமிழ்ப்புலமைவாய்ந்த பெண்பாலார்; பதிற்றுப்பத்தென்னுந்தொகைநூலில் ஆறாம்பத்துப்பாடியவர் இவரே; இப்பெயர் செள்ளையாரெனவும் செள்ளையெனவும் வழங்கும். நப்பாலத்தன், நக்கீரனென்பன சங்கப்புலவர் இருவர்பெயர்கள்.

(பி - வி.) சிலப். அடியார். 17 பக். 455. (எஉ-ச)

வேறு.

[சீவகன் தன்னுள்ஆராய்தல்.]

எரு. கன்னியர்குலத்தின்மிக்கார்கதிர்முலைக்கன்னிமார்ப
முன்னினர்முயங்கினல்லான்முறிமிடைபடலைமாலைப்
பொன்னிழைமகளிரோவ்வாதவரைமுன்புணர்தல்செல்லா
ரின்னதான்முறைமைமாந்தர்க்கெனமனத்தெண்ணினானே.

(இ - ள்.) நம்குலத்தோர், வகைமாலையினையும் இழையினையுமுடைய மகளிரை வரையுமிடத்து, கன்னியரிற் குலத்தின் மிக்காருடைய அழியாத மார்பத்தை எதிர்ப்பட்டாராய் முயங்கினல்லது, நம்குலத்திற்கு ஒவ்வாதவரைமுற்படவரையார்: அதுவுமன்றித் தேவரையொழிய மக்கட்கு முறைமை இத்தன்மையதாயிருந்ததெனக் கருதி, பின்பு, தன்மனத்தே பதுமுகனுக்குக் கொடுப்பதாக வெண்ணினானென்க.

(கு - பு.) முறி - தளிர். வகைமாலை - மாலையின்விசேடம். வரையார் - மணம்புரியார்.

(ஒ - ப.) "முறிமிடை படலைமாலை": "வண்டளிர்ப் படலைவருட காரன்" (பெருங். 3. 25: 175). (எரு)

[சீவகன் நந்தகோனைப்பார்த்துச் சொல்லல்.]

எசு. கோட்டிளங்களிறுபோல்வானந்தகோன்முகத்தைநோக்கி
மோட்டிளமுலையினுணின்மடமகளெனக்குமாமான்
சூட்டொடுகண்ணியன்றேயென்செய்வானிவைகள்சொல்லி
நீட்டித்தல்குணமோவென்றுநெஞ்சகங்குளிர்ப்பச்சொன்னான்.

சூட்டொடு கண்ணியன்றேயென்றது - இடுந்தன்மையன்றிச் சூட்டுந் தன்மையொடுகூடிய கண்ணியல்லவோவென்றும் வெற்றிச்சூட்டும் கண்ணியு மல்லவோவென்றும் இருபொருளுணர்த்தும்; உணர்த்தவே மார்பிற்குமாலை யிடுகவென்றும், தலைக்குமாலைசூட்டுகவென்றும் பெரும்பான்மையும் வழக்கு நடத்தலின் தலைமேல் வைக்கப்படும் கண்ணியென்றானாக நந்தகோன் கருதினும்: நெற்றிச்சூட்டு ஆடவர்க்காகாததன்மையும், கண்ணி ஆடவர்க்காந் தன்மையும்போல, தன்குலத்திற்காகாமையிற் சூட்டின்றன்மையும், பதுமுகன் குலத்திற்குச் சிறிதுபொருந்துதலிற் கண்ணியின் தன்மையுமுடையளென்று சீவகன் கருதினும்; கோபாலரிலும் வாணிகஞ்செய்வாருளராதலின்.

(இ - ள்.) களிறுபோல்வான், நந்தகோன்முகத்தைப் பார்த்து, முலையினளாகிய நின்மகள், மாமான், எனக்குச் சூட்டொடுகண்ணி யல்லவோ, இவைகள் சொல்லி நீட்டித்தல் செய்வானேன்? இது குணமோவென்று நெஞ்சிடம் குளிரும்படி கூறினனென்க.

இனி, மாமான் எனக்குச் சூட்டொடு கண்ணியன்றேயென்றது, தனக் காகாமையிற் புலாலும், பதுமுகற்கு ஆதலிற் பூவுமாகக்கருதினனென்றுமாம். இனி ஆமான்சூட்டுமாம். இனி மா வடசொல்லாக்கி ஆகாதென்று முரைப்பர்.

(கு - பு.) பதுமுகன்-சீவகன்றோழர் நால்வருள் ஒருவன்; இவன் வணிகர் குலத்திற் பிறந்தவன்; கனகமாலையாரிலம்பகம், உஉ௲-ஆம் பாடலாலுணர்க. மாமான் - அம்மானே; "மாமான்மகளே" என்பது திருப்பாவை; இப்பெயர் இந்த உருவமாகப் பழைய நூல்களில் மிகவழங்குகின்றது. சூட்டு, மகளிர்க் குரித்தென்பதை, "பனிமுல்லைச்சூட்டும் வேய்ந்தார்" (கசஉ) என்னும் காந்தருவதத்தையாரிலம்பகச் செய்யுளாலுமுணர்க; சூட்டு, புலாலுக்கும், கண்ணி, பூவிற்கும் பெயராகவும் வழங்கும்.

(ஒ - ப.) "மாமான்": "தேர்வேந்தர்மாமான்" (பெருந். பாரத-உத்தியோக.) (எசு)

[கோவிந்தையின்மணநிகழ்ச்சிக்குரியவற்றைஅமைப்பித்தல்.]

எஎ. தேன்சொரிமுல்லைக்கண்ணிச்செந்துவராடையாயர்
கோன்பெரிதுவந்துபோகிக்குடைதயிர்குழும்புக்கு

மான்கறிகற்றகூழைமௌவல்சூழ்மயிலேப்பந்தர்க்
கான்சொரிமுல்லைத்தாரான்கடிவினைமுடிகவென்றான்.

துவரூட்டினவாடை. தயிர்முழங்கப்புகுதல் நன்னிமித்தம். கறிகற்ற-கடித்தல்கற்ற. மௌவல் - மல்லிகைவிசேடம். மயிலே - இருவாட்சி (இருள்வாஷி). கடிவினை - சமாவர்த்தனம்.

(இ - ள்.) முல்லைத்தாரனாகிய ஆயர்கோன் உவந்துபோய்ப் புக்குப் பந்தரிலே கடிவினை முடிவதாகவென்றானென்க.

(கு - பு.) கான் - வாசனை; சமாவர்த்தனம் - விவாகத்திற்கு முன்புசெய்யப்படும் ஒருவகைச்சடங்கு.

(ஒ - ப.) "மான்கறிகற்ற கூழைமௌவல்": "தேன்கறிகற்கு நறுமலர்க்கூந்தல்" (கூர்ம. சம்புத். 76.) (எஎ)

வேறு.

[கோவிந்தையை அழைத்துவந்து இருக்கச்செய்தல்.]

எஅ. கனிவளர்கிளவிகாமர்சிறுநுதல்புருவங்காமன்
குனிவளர்சிலையைக்கொன்றகுவளைக்கண்கயலைக்கொன்ற
வினியுளரல்லராயரெனச்சிலம்பரற்றத்தந்து
பனிவளர்கோதைமாதர்பாவையைப்பரவிவைத்தார்.

குனிவு : விகாரம்.

(இ - ள்.) மாதர், கனிந்தமைதோற்றுகின்ற கிளவியையுடையாளுடைய நுதலும்புருவமும் சிலையைக்கெடுத்தன; கண் கயலைக்கெடுத்தன; இப்பருவங்கண்டு ஆயர் உயிர்கொண்டிருப்பாரல்லரென்று சிலம்பு ஒலியாநிற்கப்பாவையைத்தந்து, பரவிவைத்தாரென்க. (எஅ)

[அவளுக்கு நீராட்டல்.]

எகூ. நாழிபுளிழுதுநாகான்கன்றுதின்றொழிந்தபுற்றோய்த்
தாழிதோழுவுந்தோழும்போன்றுடன்மூக்கவென்று
தாழிருங்குழலினளைநெய்தலைப்பெய்துவாழ்த்தி
மூழைநீர்சொரிந்துமொய்கொளாய்ச்சியராட்டினாரே.

(இ - ள்.) ஆய்ச்சியர், குழலினளைப் பசுவுந்தொழுவும்போலே வூழிதோறும் நீயும் உன்கணவனும் சேர மூப்பீராகவென்று வாழ்த்தி, நாழியுளிருந்த நெய்யிழுதை நாகாகிய பசுவின்கன்றுதின்றொழிந்த புல்லாலே தோய்த்து, அந்நெய்யைத் தலையிலேவார்த்து, மூழையாலே நீரைச்சொரிந்து ஆட்டினாரென்க.

(கு - பு.) நாகு - இளமை. மூழை - அகப்பை. மொய்-நெருக்கம்.

(ஒ - ப.) "புற்றேய்த்து......வாழ்த்தி": "அறுகை நெய்தோய்த்து...... ஏற்றுகின்றார்" (சீவக. 2416); "அறுகினெய்யணிந்தனரே" (சீவக. 2430.)

"பெய்தனர்பிணையன்மாலை": "பித்திகைப்பிணையன்மாலை"(சீவக.2177.) (எகூ)

[அவளை அலங்கரித்தல்.]

அ௦. நெய்விலைப்பசும்பொற்றோடுநிழன்மணிக்குழையுநீவி
மைவிரிகுழலினாளைமங்கலக்கடிப்புச்சேர்த்திப்
பெய்தனர்பிணையன்மாலையோரிலைச்சாந்துபூசிச்
செய்தனர்சிறுபுன்கோலந்தொறுத்தியர்திகைத்துநின்றார்.

(இ - ள்.) கருமைவிரிந்தகுழலினாளை, நெய்விலையாலுண்டான பொற்றோட்டையும் குழையையுநீக்கி மங்கலமானகடிப்பிணையையிட்டு மாலையையிட்டனராய் ஓரிலையில் இடுவித்துவந்தசந்தனத்தையும்பூசிக் கோலஞ்செய்தார்; அது கண்டு ஆய்ச்சியர் திகைத்துநின்றாரென்க.

(கு - பு.) நிழல் - ஒளி. கடிப்பிணை - காதணி.

(ஒ - ப.) "நெய்விலைப் பசும்புற்றோடு": "நெய்விலைக்கட்டிப் பசும்பொன்" (பெரும்பாண். 164.) (அ௦)

[மணஞ்செய்தல்.]

அக. ஏறங்கோண்முழங்கவாயரெடுத்துக்கொண்டேகிமூதூர்ச்
சாறெங்குமயரப்புக்குநந்தகோன்றன்கையேந்தி
வீறுயர்கலசநன்னீர்சொரிந்தனன்வீரனேற்றான்
பாறுகொள்பருதிவைவேற்பதுமுககுமரற்கென்றே.

வீறு - வேறொன்றற்கில்லா அழகு.

(இ - ள்.) ஆயர் ஏறுகோட்பறைமுழங்காநிற்க அவளை எடுத்துக்கொண்டு மூதூரெங்கும் சாறயர ஏகிப் பின்பு கந்துகன்மனையிலேபுகுதலின், நந்தகோன் தன்கையிலே கலசத்தையேந்தி நீரைச்சொரிந்தான்; வீரனும் பதுமுகனுக்கென்றுகூறி ஏற்றானென்க.

மணஞ் செய்தமை கூறினார்.

(கு - பு.) ஏறுகோட்பறை-முல்லைநிலத்திற்குரிய பறை. சாறு-விழா. (அக)

அஉ. நலத்தகையவட்குநாகாணுயிரத்திரட்டிநன்பொ
னிலக்கணப்பாவையேழுங்கொடுத்தனன்போகவிப்பா
லலைத்ததுகாமன்சேனையருநனையம்புமூழ்க
முலைக்குவட்டிடைப்பட்டாற்றான்முத்துகமுயங்கினனே.

நலத்தகை - நன்மையையுடைய அழகு. காமன்சேனை - கண்ணும் முலையும்.

(இ - ள்.) கோவிந்தைக்குப் பசு இரண்டாயிரமும், பொற்பாவை எழும் கொடுத்தனனாய் நந்தகோன்போக, இவ்விடத்தே பதுமுகனைக் காமன்சேனை வருத்திற்று; அவ்வளவிலே அவன் அம்புதைத்தலாலே ஆற்றானாய் முலைச்சிகரங்களுக்கு நடுவே முத்துகவீழ்ந்து முயங்கினனென்க (அஉ)

வேறு.

அங. கள்வாய்விரிந்தகழுநீர்பிணைந்தன்னவாகி
வெள்வேன்மிளிர்ந்தநெடுங்கண்விரைநாறுகோதை
முள்வாயெயிற்றாறமுதம்முனியாதுமாந்திக்
கொள்ளாதவின்பக்கடற்பட்டனன்கோதைவேலான்.

கள்வாய்விரிந்த - தேன்வாயிலேபரந்த.

(இ - ள்.) வேலான், இன்பத்தைச்செய்தலின் அலர்கின்ற கழுநீரிரண்டு சேர்ந்தாற்போன்ற தன்மையவாய்த் துன்பத்தைச் செய்தலின் வேல்போற் பிறழ்ந்த கண்ணினையுடைய மணந்நாற்றுகின்ற கோதையுடைய எயிற்றின் மாறாத அமுதத்தை வெறாமல்உண்டு கரைபுரண்ட இன்பக்கடலிலே அழுந்தினனென்க. (அங)

அச. தீம்பாற்கடலைத்திரைபொங்கக்கடைந்துதேவர்
தாம்பாற்படுத்தவமிர்தோதடமாலைவேய்த்தோ
ளாம்பாற்குடவர்மகளோவென்றரிவைநைய
வோம்பாவொழுக்கத்துணர்வொன்றிலனாயினனே.

திரை, கடைகிறகாலத்துப் பிறந்தது. தாம்பால், ஆம்பால் இரண்டும் விகாரம். இனி, ஆம்பால் - பெரும்பாலுமாம்.

(இ - ள்.) இவள் தேவர் கடலைக்கடைந்து தம்மிடத்தே அகப்படுத்த அமுதமோ! அன்றி அழகியபாலையுடைய இடையர்மகளோ! என்றுநயப்புரைத்து, பின்னும் பரிகரிக்கவொண்ணாத புணர்ச்சியொழுக்கத்திலே மாலையினையும் தோளினையுமுடைய அரிவை அவசமாகத் தானும் அறிவுமயங்கினனென்க.

இவ்விலம்பகம், வீரமகளைச் சேர்ந்தமை கூறிற்று. (அச)

கோவிந்தையாரிலம்பகம் முற்றிற்று.

சீவகசிந்தாமணிக் கதைச்சுருக்கம்.

[க.—நாமகளிலம்பகம்.]

இப்பரதகண்டத்தில்ஏமாங்கதநாட்டில் இராசமாபுரத்திற் குருகுலத்திலே உதித்துச் செங்கோல் செலுத்திய சச்சந்தனென்னும் அரசன், தன்மாமனும் விதையதேயத்தரசனுமாகிய ஸ்ரீதத்தனது மகள் விசயையைமணந்து அவளது பேரழகுபற்றி எழுந்த வேட்கை மிகுதியால் அவளுடன் இடைவிடாமல் இருப்பக்கருதி, நிமித்திகன் முதலிய மந்திரிமார் கூறிய உறுதிமொழியைக் கொள்ளாதுய்க் கட்டியங்காரனென்னும் மந்திரியொருவனை அழைத்து அவனை நோக்கி, "நீ இந்நாட்டைக் காத்துவருதி" எனவிதித்து அந்தப்புரம் புகுந்து தான் எண்ணியவண்ணம் இன்புற்றிருந்தான்.

அவன் அப்படியிருக்கையில் விசயை கருப்பமுற்று, ஒருநாளிரவில் மூன்றுகனுக்கண்டு, அவற்றின்பயன்களை அரசனாலுணர்ந்து அவற்றுள் ஒன்றால் வருத்தமுற்று, அவன்தேற்றத் தேறியிருந்தனள்.

அப்பொழுது கட்டியங்காரன் அரசனைக்கொன்று இராச்சியமுழுவதையும் தானே ஆளக்கருதி,அறிவுடையோர்சொற்கேளாதுகி, தன் மைத்துனனுகிய மதனனோடு யோசித்து, பின்பு அரசனிருக்கும் அந்தப்புரத்தைச் சேனைகளோடும் வளைந்துகொண்டான். அதனை வாயில்காப்பாளனால் அறிந்த அரசன் மனங்கலங்கிப் புலம்பிய விசயையைத் தேற்றி, அவளை முன்னமே தான் செய்வித்த மயிற்பொறிமேலேற்றி, மகப்பேற்றைக்கருதி ஆகாயவழியே வேறிடஞ் செல்ல விடுத்துத் தான் புறம்போந்து கட்டியங்காரனோடும் அவன் படை வீரரோடும் போர்செய்து பின்பு அவனால் மாய்ந்தனன். அப்பாற் கட்டியங்காரன் வெற்றிமுரசறைவித்து எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டனன்.

ஆகாயவழியே செல்லும் விசயை அம்முரசொலிகேட்டுக் கலங்கித் தான் ஊர்ந்துசெல்லும் மயிற்பொறியை முறுக்கி நடத்தமாட்டாமல் மூர்ச்சித்தமையால் அப்பொறி அப்பாற் செல்லாமல் அங்

நகரத்தைச்சார்ந்த ஒருமயானத்திடையே மெல்ல வீழ்ந்தது. உடனே அவள் அவ்விடத்துச் சுபகாலத்தில் ஓராண்மகவைப்பெற்று ஒருவாறு கவலை ஒழிந்து அக்குழந்தைக்குப் பாலூட்டி, அரசனிறந்த தற்கிரங்கி அப்பிள்ளையை நோக்கி, "வேந்தே! அரசன் பலபல சிறப்புச்செய்யப் பிறக்கும் நீ பாவியேன்காண இங்ஙனம்பிறந்தது தகுதியோ? உலகுடையாய்! நீ கிடக்கின்ற இடம் பகைவனிடமா யுள்ளது; நினதுபாயல் சுடுகாடாயிருக்கின்றது; யானும் உசாவுதற்கு ஒரு துணையுமில்லாத் தமியேனுயுள்ளேன்; நின்னைக்கொண்டு போகக் கருதின், இக்காலமோ போகவொண்ணுத இருளாயிருக் கிறது; மேல் நீ வளருமாறும் அறியேன்; சிந்தாமணியே! நீ ஒன்றுமுரையாமற்கிடக்கின்ருய்; எனது வருத்தத்தை நீக்கப்பிறந்த நீ என்னிடத்துப்பிறந்த துன்பக்கடலை யான் நீந்துந் தெப்பமாகாத பொழுது என்னைக்காப்பவர் யாவர்? உரைக்கின்றிலை" என்று கூறித் தனியேயிருந்து வருந்திப் புலம்பும்பொழுது அம்மயானத்துள்ள தெய்வமொன்று மனமிரங்கி, அவள் தோழியாகிய சண்பகமாலையது வடிவங்கொண்டு அவள் முன்னேவந்து துயரந்தீரும்படி அவளுக்கு இனியவார்த்தைகள் கூறி அவளிடத்திருந்த (சச்சந்தன்பெயர் எழு தப்பட்டுள்ள) மோதிரத்தைக் குழந்தைக்குச் சேர்த்தி அக்குழந் தையை ஒரு படுக்கைமீது கிடத்தி அவளைநோக்கி, "இனி இப் பிள்ளையை எடுத்துப்போவதற்கு ஒருவன் வருவான்; ஆத லால், யாம் ஒளித்திருத்தல் நலம்" என்றுகூற, உடனே அவள் வில கிச் சென்று மறைந்து நின்றனள்.

அவள் அப்படி நிற்கையில், மரித்த தன் குழந்தையைப் புதைத் தற்கு அங்கேவந்த கந்துக்கடனென்னும் வணிகனொருவன் யாரு மின்றித் தனியே கிடந்த அக்குழந்தையைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி யடைந்து அதன் கையிலிருந்த மோதிரத்தால் இராசவம்சத்துக் குழந்தை என்றறிந்து, பிறரறிந்துகொள்ளாதபடி அம்மோதிரத்தை மறைத்துக்கொண்டவனுகி அக்குழந்தையை அன்போடெடுப்ப அது தும்மிற்று. அப்பொழுதுதெய்வம், "சீவ" என்றுவாழ்த்தியது. பின்பு கந்துக்கடன் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு விரைந்துசென்று இராசமாபுரத்துள்ள தன்வீட்டினுள்ளே புகுந்து தன் மனைவியாகிய சுநந்தையை நோக்கி, "நின்மகன் சாதலினின்றுந் தப்பினன்" என்று கூறிக்கொடுப்ப, அவள்தொழுதுவாங்கிப் பெருமகிழ்ச்சியடைந்து

வளர்த்துவருநாளில், முன்னம்தெய்வம் சீவவென்று வாழ்த்தினமை பற்றி, அறிவுடையோர் அப்பிள்ளைக்குச் சீவகனென்று நாமகரணஞ் செய்தனர். பின்பு சுநந்தை நந்தட்டனென்னும் ஒருபுத்திரனைப்பெற்றாள். இதுநிற்க,

மயானத்திருந்த விசயை தோழியாக வந்த தெய்வத்தோடும் தண்டகாரணியம் புகுந்து தவவேடம் பூண்டு, மகனுக்கு ஆக்கம் உண்டாகுகவென்று நோற்றனள். தெய்வம், "இராசமாபுரத்திற்சென்று நின்புதல்வன் செய்தியை அறிந்துவருவேன்" என்றுகூறி விசயையிடத்து விடைபெற்றுப்போய்த் தானுறையும் புறங்காட்டைச் சேர்ந்திருந்தது. சீவகன் * தோழர்களோடும், தம்பிமாராகிய † நபுலவிபுலர்களோடும், நந்தட்டனோடும் இனிதுவளர்ந்து உரிய பருவத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று, கந்துக்கடன் கட்டளைப்படி அச்சணந்தியாசிரியரிடத்து வில்வித்தை முதலியவற்றை எளிதிலே பயின்று சிலகாலத்துட் சகலவித்தியாபாரங்கதனாயினான்.

ஆசிரியர், சீவகனது புத்தியின்திறமும் கல்விமுதிர்ச்சியும் கண்டு அளவில்லாத ஆச்சரியமும் மகிழ்ச்சியும் உடையராகி, முதலில் அவனுக்குத் தருமோபதேசஞ்செய்து, பின்பு அவனைத் தனியிடத்திற்கு அழைத்துச்சென்று, தாம் ஓராசனத்திலிருந்து அவனைநோக்கி, "இந்நகரத்தரசனாயிருந்த சச்சந்தனென்பவன் பூர்ணகர்ப்பிணியாகிய தன்மனைவி விசயையை மயிற்பொறிமேற் போக்கிப் பின்பு கட்டியங்காரனென்னும் மந்திரியாற் கொல்லப்பட்டான். அவ்விசயை மயானமடைந்து ஒருபிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளையைக் கந்துக்கடனெடுத்துவந்து தன் மனைவியாகிய சுநந்தையின் கையிற்கொடுப்ப அவள் அன்போடு வளர்த்துவருவாளாயினாள்" என்று ஒருகதை முகத்தாலே கண்ணன் கன்னனுக்குப் பிறப்புணர்த்தியதுபோலக் கூற, அதுகேட்ட சீவகன், "அப்பிள்ளை யாவன்?" என்று வினவ,

---

*சச்சந்தனிறந்தபின்பு, அவன்சுற்றத்தைக் கட்டியங்காரன் அழிப்பது தெரிந்து, அச்சச்சந்தன்றோழர் தம்புதல்வர்களைக் கந்துக்கடனிடத்தே ஒப்பித்து வளர்த்துவரும்வண்ணம் வேண்டிக்கொள்ள கந்துக்கடன் அவர்களைச் சீவகனோடு சேர்த்து அன்போடு வளர்த்து வருவானாயினான். அதனால், அப்பிள்ளைகள் சீவகனுக்குத் தோழராயினர்.

† நபுலவிபுலர் - சச்சந்தனுடைய காமக்கிழத்தியரின் புத்திரர்.

ஆசிரியர், "நீதான்" என்றவுடன், சீவகன் பதைபதைத்து மூர்ச்சித்து, அவர்தேற்றத்தேறிக் கட்டியங்காரனைக் கொல்லுதற்குச் சந்நத்தனுயெழுந்தான். ஆசிரியர் அவனை நோக்கி, "மைந்த, இதுகாலமன்று; இன்னும் ஒருவருடஞ் சென்றபின்னர், நீ எண்ணியது செய்க; இப்பொழுது உன்னை வெளிப்படுத்தாதொழிக; இது யான்வேண்டுவது" என்றுசொல்ல, சீவகன் ஆசிரியர் கட்டளையை மறுத்தற்கஞ்சி, "அப்படியே யாகுக" என்று உடன்பட்டான்.

பின்பு ஆசிரியர் தம்வரலாறு கூறுவாராகி அவனை நோக்கி, "யான் முன்னம் வெள்ளிமலையிலுள்ள வாரணவாசி என்னும் நகரத்தரசன்; உலோகமாபாலனென்னும் பெயருடையேன்; தவஞ்செய்தற்கெண்ணி மகனுக்கு அரசளித்துத் தவவேடம் புனைந்து நோன்புபுரிகையிற் பூர்வசன்மபாவத்தால் எனக்கு யானைத்தீயென்னும் நோய் உண்டாகியது; அதனல் மிகவும்வருந்தி ஒருவாற்றானுந் தீரப்பெற்றிலேனுகி இங்குவந்து நின்னைக்கண்டவுடன் அந்நோய் தீரப்பெற்றேனுதலின், நின்பாற்பெருவிருப்புற்று, நினக்குக்கல்வியறிவுறுத்தற்கே ஈண்டிருந்தேன். என் எண்ணம் முற்றியது. இனித் தவஞ்செய்தற்குச் செல்ல எண்ணுகின்றேன்; விடைகொடு" என்ன, சீவகன் அவரைப் பிரிதற்குச் சிறிதும் கருத்திலனுயினும், அவர் தவஞ்செய்யப்போதலை மறுத்தற்கஞ்சி உடன்பட, அவர், * இருபத்துநான்காந் தீர்த்தங்கரராகிய ஸ்ரீவர்த்தமானருடைய சமவசரணமடைந்து நோன்பியற்றி முத்திபடைந்தனர். சீவகன் இராசமாபுரத்தே இருந்தனன்.

---

* தீர்த்தங்கரர் இருபத்துநால்வராவார்: — (க) விருஷபர், (உ) அஜிதர், (ங) சம்பவர், (ச) அபிநந்தனர், (ரு) சுமதி, (சு) பத்மப்ரபை, (எ) ஸுபார்ச்வர், (அ) சந்திரப்ரபை, (கூ) புஷ்பதந்தர், (கo) சீதளர், (கக) சிரேயாம்சர், (கஉ) வாசுபூஜ்யர், (கங) விமலர், (கச) அநந்தர், (கரு) தருமர், (கசு) சாந்தி, (கஎ) குந்து, (கஅ) அரர், (ககூ) மல்லி, (உo) முனிஸுவ்ரதர், (உக) நமி, (உஉ) நேமி, (உங) பார்ச்வர், (உச) ஸ்ரீவர்த்தமானர்.

[உ.—கோவிந்தையாரிலம்பகம்.]

சிலநாள்சென்றபின், ஒருநாள் அரசனுடையபசுக்கள் சமீபத்தி லுள்ள ஒரு மலையையடைந்து மேய்கையில், அம்மலையிலுள்ள வேடர் அவற்றைக் கவர்ந்துகொண்டுசெல்ல, அப்பசுக்களைப் புரக்குமிடையர் அவ்வேடர்களை ஒன்றும் செய்யமாட்டாமல் மறுகிச்சுழன்று விரைந் தோடிச் சென்று கட்டியங்காரனிடத்து முறையிட்டனர். உடனே அவன் அவ்வேடரை வென்று நிரைமீட்டு வரும்படி தன்புதல்வர் நூற்றுவருக்கும் தன்மைத்துனன் மதனனுக்கும் கட்டளையிட, அவர் படையுடனே சென்று பொருது, அவ்வேடரால் தோல்வி யுற்று மீண்டனர். இடையர் மீட்டும் வந்து அச்செய்தியைக் கட்டியங் காரனுக்கு அறிவிப்ப, அவன் வாளா இருந்தனன்; அதனை அவ் விடையர் தலைவனாகிய நந்தகோன் தெரிந்து வருத்தமடைந்து, "இந்நிரையை மீட்டுவரும்மைந்தற்குப் பேரழகுள்ள என்கன்னி யாகிய கோவிந்தையைத் தருவேன்" என்று வீதிதோறும் முரசறைவித்தான். அதுகேட்டும் வேடருக்கஞ்சிப் பலரும் சும்மா இருந்தனர். அதனை உணர்ந்த சீவகன், சூளுரைத்துப் போர்க்கோலங் கொண்டு சென்று யுத்தஞ்செய்து, அவ்வேடர் ஐம்பத்தாறுயிரவரும் தனக்கு ஒருவாற்றானும் பகைவரன்மையின் அவர்களைக் கொல்லாது அச்சுறுத்தி நிரைமீட்டுவந்து, நந்தகோனது வேண்டுகோளின்படி அவன் மகளைத் தான் அப்பொழுது மணஞ்செய்தல் தன்குலத்திற் குப் பொருந்தாதென்றெண்ணி, தன் தோழனாகிய பதுமுகனுக்கு மணஞ்செய்வித்தனன்.

[ங.—காந்தருவதத்தையாரிலம்பகம்.]

அப்பால் வெள்ளிமலையிலுள்ள வித்தியாதரராசனாகிய கலுழ வேகனென்பவன், தன்மகள் காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்தில் மணநிகழுமென்பதைச் சோதிடராலறிந்து, அங்ஙனஞ் செய்விக்கத் துணிந்து, அவ்விராசமாபுரத்து வணிகனாகிய ஸ்ரீதத்தனென்பான் ஒருதீவிற்சென்று பெரும்பொருளீட்டி நகரடைய எண்ணிப் பரிசனங் களோடும் மரக்கலமூர்ந்து கடலிற் செல்வதைத்தெரிந்து, அவனை அழைத்துவரும்படி தன்னிடத்துள்ள தரனென்னும் வித்தியாதர

னொருவனை அனுப்பினன். அத்தரன் போந்து ஜனங்களுடன் கப்பல் முழுகியதுபோலத் தன்வித்தை மகிமையால் ஸ்ரீதத்தனுக்குத் தோற்றுவிப்ப ஸ்ரீதத்தன் அக்கப்பலினின்றும் முறிந்துவிழுந்த ஒருமரத் துண்டைத் தழுவி மெல்லமெல்லச் சென்று கரையை யடைந்து வருந்தி யிருந்தனன்.

அப்பொழுது, தரன் வழிச்செல்வான் போன்று அவனைச்சந்தித் துத் தேற்றி அவனையழைத்துக்கொண்டு கலுழவேகனிடஞ்செல்ல, கலுழவேகன் ஸ்ரீதத்தனுக்கு மிக்க உபசாரங்கள் செய்து அள வளாவியிருந்து, பின்னர்க் காந்தருவதத்தையின் வரலாறுகளைக் கூறி, அவளை வீணாபதியென்னும் தோழியுடன் அவனிடமொப்பித்துப் பலபொருள்களுமுதவி அவனைநோக்கி, "இசையில் இவளை வெல் வான் யாவனோ அவனுக்கு இவளை மணம்புரிவி" என்றுசொல்லி விடுப்ப, ஸ்ரீதத்தன் அவளோடும் புறப்பட்டு விமானமூர்ந்து போந்து, பரிசனங்களுடன் முழுகிப்போனதாகத் தான் முன்னங்கருதிய கப் பலைத் தரன்காட்டக்கண்டு உவப்புற்று அதிலுள்ள தனக்கினியவர் அனைவரும் தன்னைச்சூழ இராசமாபுரஞ்சார்ந்து தன்மனையை அடைந்து தன்மனைவியாகிய பதுமைக்கு நிகழ்ந்தவற்றைக்கூறிக் காந்தருவதத்தையைக் கன்னிமாடத்தேயிருத்தி, கட்டியங்காரனைக் கண்டு அவனுடம்பாடுபெற்று ஒருமண்டபஞ் செய்வித்து, "இக்காந் தருவதத்தையை வீணையில்வெல்வோனே, இவளை மணஞ் செய்தற் குரியன்" என்று பிரசித்தஞ்செய்தனன். அஃதுணர்ந்த பலதேயத் தார்களும் அவ்விடத்தே வந்துகூடினார்கள். பின்பு ஸ்ரீதத்தன் காந்தருவதத்தையை அழைத்துவந்து, அம்மண்டபத்தேயிருத்தி, அவளை யாழ்வாசிக்கச் செய்தான். அதுகேட்ட பலரும் ஆச்சரிய முற்றனர். முதல் மூன்றுவருணத்தாருள்ளே இசையில்வல்ல ஒவ் வொருவரும் தனித்தனியே வந்து பாடியும், யாழ்வாசித்தும் அவளை வெல்லும் வல்லமை இல்லாராய்த் தோல்வியுற்றனர். இப்படி ஆறு தினங்கள் சென்றன.

பின்பு இச்செய்தியுணர்ந்த சீவகன் தன்கல்வியைத் தோற்று விப்பான் ஆண்டுச்செல்லக்கருதித் தன்தோழனாகிய புத்திசேனனாற் கந்துக்கடனுக்குத் தெரிவித்தான். கந்துக்கடன் அநங்கமாலை யென்னும் பரத்தைநிமித்தம் சீவகனிடத்துக் கட்டியங்காரனுக்கு மிக்க சினமுண்டாயிருத்தலை நாகமாலையென்பவளால் அப்பொழுது

அறிந்துகொண்டமையால், "படையமைத்து அவ்விடஞ்செல்க" என்று சொல்லிவிடுப்ப, சீவகன் அப்படியேபோந்து அம்மண்டப மடைந்து, தான் இசையில்வல்லனுதலைப் பலர்க்கும் புலப்படுத்திக் காந்தருவதத்தையை வென்றனன். உடனே அவள் அவனுக்கு மாலை யிட்டனள்.

அதுகண்டு அழுக்காறுற்ற கட்டியங்காரன் மனம்புழுங்கி, அங்கு வந்திருக்கும் அரசர்களைநோக்கிப் பொருமைவிளைத்தற்குரிய சில வார்த்தைகள் கூறி, "அரசர்களே! இச்சீவகனை வெல்வோனே இக் காந்தருவதத்தையை மணஞ்செய்தற்குரியன்" என்று கூற, அரசர் ஒருங்குதிரண்டுவந்து சீவகனோடு போர்செய்து தோல்வியுற்றனர். பின்பு சீவகன் காந்தருவதத்தையைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று சுப முகூர்த்தத்திலே அவளை விதிப்படி மணம் புரிந்து அவ ளோடும் வாழ்ந்திருந்தனன்.

[ச.—குணமாலையாரிலம்பகம்.]

இப்படிச் சில நாளாயபின், இளவேனிற்காலம் வந்தது. அப் பொழுது நகர்ப்புறச்சோலையில் விளையாடுதற்குச் சென்ற இராசமா புரத்தினருள் சுரமஞ்சரியும் குணமாலையும் * சுண்ணங்காரணமாகத் தம்முள் மாறுபட்டு, தம்சுண்ணங்களுள் நல்லதை அறிஞரால் அறிந்துவரும்படி தம் தோழியர்இருவரையனுப்ப, அவர் அவ்வாறே அறிஞர்பலர்க்கும் அவற்றைக் காட்டினர். கண்ட அவர், "இவற்றைச் சீவகனுக்குக் காட்டும்" என்றனர். அம்மகளிர் அவன் மாட்டுச் சென்று அவற்றைக்காட்ட, அவன் குணமாலை சுண்ணத்தை நல்ல தென்முன். அவர் மீண்டுசென்று அச்செய்தியைத் தம் தலைவியர்க்கு அறிவித்தனர். அதனைச் சுரமஞ்சரி கேட்டு அவலமுற்று, "எனது சுண்ணத்தை இகழ்ந்த சீவகன் பின்னர் வலிந்துவந்து என்னைவிரும் பும்படி யான் நோற்பேன்' என்று குறிப்பாலுணர்த்திக் கன்னி மாடஞ்சென்று மற்ற ஆடவரொருவரையும் கருதாளாய்ச் சீவ கனையே கருதி நோன்பியற்றியிருந்தனள்.

அவள் அப்படியிருக்க, அப்புறநகர்ச் சோலையிலே பிராமண ருடைய சோற்றுக்குவியலை நாயொன்று தீண்ட அதனை அவ்வந்தணர்

---

* சுண்ணம்-வாசனைப்பொடி.

தடியால்மொத்தினர். அது பயந்து ஒருகுளத்தில் விழுந்து நீந்தி வருந்துந்தருணத்தில், அதனைச் சீவகன் கண்டுமிகவுமிரங்கிப் பஞ்ச நமஸ்காரமென்னு மந்திரத்தை அதன் செவியில் உபதேசித்தான். உடனே அந்நாய் அவ்வுபதேசத்தால் தன்னுடம்பை ஒழித்துத் தேவனாகி விண்ணிற் சென்றது. யாவரும் கண்டு வியப்புற்றனர்.

பின்பு அத்தேவன் சுதஞ்சணனென்னும் பெயருடையவனாகி மீண்டுவந்து சீவகனை வணங்கிநிற்ப, சீவகன், 'நீ யார்' என்றனன். சுதஞ்சணன், "ஈங்கு நின்றும் நின்னருளாற்சென்று இயக்கர்தலைவனாகிச் சங்கவெண்மலையிற் சந்திரோதயமென்னு நகரில் இருப்பேனாயினேன்; என் பெயர் சுதஞ்சணனென்பது; நினக்குப் பணிபுரியும் கருத்துடையேன்" என்று சொல்ல, சீவகன், "எனக்குப் பகைவரால் துன்பம் வரும்பொழுது வந்து உதவிசெய்க; இப்பொழுது நின்னிடஞ் சென்றுறைக"என்றுவிடுப்ப, சுதஞ்சணன் விசும்பாறுசச்சென்று தனது நகரமடைந்தனன்.

அவன் சென்றபின்பு, சோலையிலிருந்தோர் யாவரும் தத்தம் ஊர்திகளிலேறி நகரிக்குச் செல்லுகையில், அசனிவேகமென்னும் பட்டத்து யானை செருக்குற்றுச் சங்கிலிபிணித்த கட்டுத்தறியை முறித்துப் பாகனுக்கடங்காமற் குணமாலைக்கெதிரேசென்று சினந்துநின்று அவளைக்கொல்லத் தொடங்கியது. அதனைச் சீவகன் கண்டு கட்டியங்காரன் பகைப்பானென்று கருதாமல் அந்த யானையின் செருக்கை அடக்கி, அதனை அப்பாற்செலுத்திக் குணமாலையைக் காத்தனன். முன்னரே சீவகன்மாட்டு விருப்புற்றிருந்த குணமாலை அவனை நேரிற்கண்டமையால் அவனிடத்தே அதிமோகமுடையவளாகித் தன்மனையையடைந்து, தோழிமுதலாயினோர் நிரம்ப உபசரிக்கவும் உணவுமுதலியவற்றை வேண்டாளாகிச் சோர்வுற்று, சீவகனிடம் தூதுசென்றுவந்த தன்கிளியால், அவன் தன்னை விரும்பியது தெரிந்து ஒருவாறு துயரந்தீரப்பெற்றிருந்தனள். அதனை அவளுடைய நற்றாயாகிய விநயமாமாலை அறிந்து, தன்கணவனாகிய குபேரமித்திரனுக்குத் தெரிவித்தனள். அவன் சீவகனுக்குக் குணமாலையைக் கொடுத்தலில் மிக்க மகிழ்ச்சியுடையவனாகித் தன் கருத்தைமொழிந்து சிலமுதியோரைக் கந்துக்கடனிடத்துத் தூதுவிடுத்தான். அம்முதியோர் அவனிடம் போய்ப்பேச, அவன் உடன்பட்ட

பின் விவாகத்திற்குரியவை ஈட்டப்பட்டன. அதன்பின்பு சீவகன் குணமாலையை மணம்புரிந்து அவளைப்பிரியாது மகிழ்ச்சியுற்றிருந்தான்.

சீவகன் இப்படியிருக்கையில், முன்னர் அவனுக்குத் தோல்வியுற்றயானை நாணிக் கவளமுதலியன கொள்ளாமற் கோபத்தோடு நிற்றலைக் கட்டியங்காரன் அறிந்து, "இதற்குக் காரணம் என்ன?" என்று வினவினான். பாகன் சீவகனால் நிகழ்ந்ததைக்கூற, உடனே அவன் சினந்து தன்மைத்துனனாகிய மதனனையும் சிலவீரரையும் நோக்கி, "நீவிர் சென்று சீவகனாகிய செட்டிமகனைவிரைவிற் கொணர்க" என்று கட்டளையிட, அவர்கள் சென்று சீவகனிருக்குமிடத்தை வளைந்துகொண்டார்கள். உள்ளே இருந்த சீவகன் அதனை அறிந்து கோபங்கொண்டு யுத்தசந்நத்தனாகிப் புறம்போந்தும், "இன்னும் ஒருவருடம்வரையில் கட்டியங்காரனிடத்துக் கோபங்கொள்ளாதிருப்பேன்" என்று முன்னம் ஆசிரியராணைக்கிசையத் தான் கூறியதை நினைந்து கோபந்தணிந்து நின்றவளவிலே, கந்துக்கடனும் சுநந்தையும் வந்து, "மைந்த! அரசனுக்கு அடங்கியொழுகுதல் ஆண்மை" என்றனர். அதனாலும் சீவகன் தன் வீரத்தை வெளிப்படுத்தானாகி மதனன் முதலியோர் சூழ்ந்துவரச் செல்லும் பொழுது அக்கொடுமையைக் கண்ட ஊரவர்யாவரும் பதைப்புற்று வருந்திப்புலம்பியழுதனர். அச்செய்தியைத் தோழரும் தம்பிமாருங்கேட்டுச் சினந்து மதனன் முதலியோரை வெல்லுதற்குரிய உபாயத்தை நாடிக்கொண்டு நின்றனர். காந்தருவதத்தைகேட்டு, தன்கணவனைச் சிறைமீட்கக் கருதித்தன் தெய்வங்களைத்தியானிப்ப, உடனே அத்தெய்வங்கள் போந்து அவனைச் சூழ்ந்துகொண்டன. அவற்றைத் தெரிந்த சீவகன், "இனிச் செய்வதென்னை?" என்று ஆலோசித்துக் காந்தருவதத்தை தன் சிறைத்துயரத்தை நீக்க முயன்றதற்குநாணித் தன் உயிர்த்தோழனாகிய சுதஞ்சணனை நினைத்தான். நினைத்தவுடன் அச்சுதஞ்சணனுக்கு இடக்கண் ஆடியது. ஆடினவளவிலே, அவன் இதனால் தனக்குத் தீங்குவருமோவென்றுநோக்காது முதலிலே சீவகனை நினைந்தான். நினைத்து அவனுற்ற துன்பத்தைத் தனது ஞானத்தாலறிந்து விரைந்து வந்து யுகமுடிவுவந்ததுபோலத் தோற்றும்படி அவ்விடத்துக் காற்றும் மழையும் மிக்குவரச்செய்து ஒருவருக்குந்தோற்றாமற் சீவகனையெடுத்து மார்போடணைத்து ஏந்திச்சென்று தன் நகரமடைந்து

அவன் பெருமையையும் அவன் தனக்குச்செய்த பேருதவியை யும் தன்தேவியருக்கு விளங்கக்கூறி அவனை மகிழ்வித்து அவனோ டும் அவ்விடத்தே உறைந்தனன்.

இங்கே மதனன் சீவகனைக்காணாது திகைத்து, "கட்டியங்கார னிடத்து என்னசொல்வோம்?" என்றெண்ணி, ஆங்குள்ளானொருவனை வாளாற்பிளந்து உருத்தெரியாமற் புரட்டிவிட்டுக் கட்டியங்காரனிடம் சென்று, "நின் கட்டளைப்படியே சீவகனைப் பிடித்துவருகையில் மழையுங்காற்றும் அதிகரித்தமையால் ஈண்டுக்கொணர்தற்குத் தடையுற்று, அவ்விடத்தேயே அவனைக் கொன்றுவிட்டேன்" என்றான். கட்டியங்காரன் பெரிதும் வியப்புற்று, "சீவகனைக் கொல்லுதல் மிகவுமரிது; அவனைக்கொன்ற நீ இவற்றைப் பெறுவாயாக" என்று மதனனுக்குப் பலசிறப்புக்களும் செய்து அவனை மகிழ்வித்தான்.

[ரு.—பதுமையாரிலம்பகம்.]

அங்கே சுதஞ்சணன் பலதேயங்களையும் ஆங்காங்குள்ள மலைகள் ஆறுகள் முதலியவற்றையும் காணுதற்குச் சீவகன் விருப்புற்றிருப்பதைத்தெரிந்து, அவற்றின் வழி முதலியவற்றைக்கூறி, பின்னர், காமனும் விரும்பும் கட்டழகமைந்த சரீரத்தைக் கொடுப்பதும் விஷமுதலியவற்றைக் கெடுப்பதும் வேண்டிய உருவைத் தருவதுமாகிய மூன்று மந்திரங்களை அவனுக்கு மொழிந்து, அவனையேந்திக்கொண்டு தன்மலையினின்றுமிறங்கிப் பூமியில்விடுப்ப, சீவகன் அவன் முன்னர்க்கூறிய வழியே போய், மிருகங்களையும் பறவைகளையும் கொன்றுதின்று திரியும் கொடிய வேடனொருவனைக் கண்டு அவனை நல்வழிப்படுத்த நினைந்து அவனுக்கு உறுதிமொழி உரைத்தனன்.

உரைத்துவிட்டு அப்பாற்சென்று காட்டுத்தீயால் வளைக்கப்பட்டு நின்ற யானைத்திரளின் வருத்தத்தை நீக்கினான்; நீக்கி அரணபாதமென்னும் அசலமடைந்து அங்குள்ள அருகக்கடவுளையும் சாரணரையும் வழிபட்டேத்தி, அப்பாற்பல்லவதேயத்துள்ள சந்திராபமென்னும் நகரைநண்ணி, அந்நகரத்தரசனாகிய தனபதி மகன் உலோகபாலனோடு நட்புற்று, அவன் சகோதரியாகிய பதுமையென்பவள்

சோலையிற்சென்று பூக்கொய்து விளையாடுகையிற் பாம்பு கடித்தமையால் அவளுக்குண்டான விஷவேகத்தைப்போக்கி அவளைமணம் புரிந்து அவளோடும் அவ்விடத்தே இரண்டுமாதங்கள் தங்கிப் பின்பு வேற்றிடஞ்செல்ல விருப்புற்று, ஒருநாளிரவினடுவில் ஒருவரோடும் சொல்லாது வேற்றுருக்கொண்டு அந்நகரினின்றுநீங்கி அப்புறம் செல்வானாயினன்.

பின்பு பதுமை சீவகன் தன்னைநீங்கியது தெரிந்து துன்பக் கடலிலழுந்தி, அவனோடு கூடியிருக்கையில் இன்பம் விளைவித்த ஒவ்வொரு பொருளையுங் கண்டு பலவாறு புலம்பித் தன்தோழிமாருள் அறிவுடையாளொருத்தி தேற்ற ஒருவாறு தேறியிருந்தனள். அஃதுணர்ந்த தனபதி மிகவுங்கவலையுற்றுச் சீவகனை நாடிக்கொணரும் வண்ணம் சிலரையனுப்ப, அவர் சீவகனைப் பலவிடத்துந் தேடியலைந்து பின்பு கண்டு, "நின்னைப்போன்றொரு குருசிலைக்கண்டதுண்டாயிற் கூறுக" என்ன, சீவகன் அவரைநோக்கி, "அவனை ஒன்பதாந் திங்களிலே காண்பீர்; அதற்குமுன்னர்க் காணீர்; யான் கூறியது பொய்புரையன்று;இச்செய்தியை நம்மரசனுக்குக்கூறுமின்" என்றுவிடுப்ப, அவர் போந்து அச்செய்தியைத் தனபதிக்குத்தெரிவித்தார். அவன் ஒருவாறு வருத்தம் ஒழிந்திருந்தான். சீவகன் அப்பாற் சென்றான்.

[௬.—கேமசரியாரிலம்பகம்.]

அப்படிச்சென்ற சீவகன் பலவிடங்களையுங்கடந்து சித்திரகூடமென்னுந்தவப்பள்ளியைச் சார்ந்து, அதிலிருந்த தாபதர்களோடும் அளவளாவிப் பின்னர்த் தக்கநாட்டிலுள்ள கேமமாபுரத்தை யடைந்தான்.

முன்புஅந்நகரத்து வேதவணிகனாகிய சுபத்திரனென்பவன்தனக்குக் கேமசரியென்ற ஒரு புத்திரி பிறந்தபொழுது அவளுக்குச் சாதகம் கணித்தற்குப்போந்த கணிதரை நோக்கி," இவளுக்குக் கணவன் யாவன்"? என்ன, அவர்," கணவனல்லாதார் நின் மகள்கண்ணுக்கு ஆடவராகத் தோன்றாராதலின், அவள் எவனைக்கண்டு நாணுகின்றாளோ அவனே அவளுக்குக் கணவனாவான்" என்றனர். அதுகேட்ட வணிகன் அதுதொடங்கி நாடோறும் வருவோர் பலரையும் தன்மனைக்

கழைத்துச் சென்று உபசரித்து விருந்தூட்டி ஒருவரையுங்கண்டு அவள் நாணுமைதெரிந்து, "இவளுக்குக் கணவனுவான் வருங்காலம் உளதோ?" என்று கவலையுற்றிருந்தான்.

அப்படியிருந்த சுபத்திரன் சீவகனைச்சந்தித்து அவன் வடிவழகு கண்டு மகிழ்ச்சியுற்று, அவனைத் தன்வீட்டிற்கு அழைத்துச்சென்றான். சென்றபொழுது கேமசரி சீவகனைக்கண்டு நாணமடைந்து பின்னர் மோகமுற்று வருந்தினுள். அதையறிந்த சுபத்திரன் சீவகனுக்கு அவளை மணம்புரிவிக்க, அவன் அவளோடும் அவ்விடத்தே இரண்டு திங்கள் தங்கியிருந்து பின்பு வேற்றிடஞ் செல்லக்கருதி அவளிடத்துச் சொல்லாது பிரிந்துசென்று, எதிர்ப்பட்டா னொருவனுக்குத் தருமோபதேசஞ்செய்து தன் அணிகலன்களை அவனுக்களித்து அப்பாற் செல்வானுயினுன்.

கேமசரி சீவகனைக்காணுது திகைத்துப் பிரிவாற்ருது பலவாறு புலம்பித் தன் நற்ருயாகிய நிப்புதியென்பவள் தேற்ற ஒருவாறு துயரந்தீர்ந்திருந்தனள்.

[எ.—கனகமாலையாரிலம்பகம்.]

பின்பு, சீவகன் சிலவிடங்களைக் கடந்துசென்று மத்திமதேயத்துள்ள ஏமமாபுரமென்னும்நகரிக்குச் சமீபமாகிய ஒரு பூஞ்சோலையை அடைந்து ஆங்குள்ள அழகான ஒரு பொய்கையைக் கண்டு அதன் வளங்களை நோக்கிக் காந்தருவதத்தையையும் குணமாலையையும் நினைந்து பலவாறு புலம்பி மிகுந்த வருத்தம் அடைந்து அப்பாற் செல்லாது அவ்விடத்தேயிருந்தான். அப்பொழுது அந்நகரத்தரசனுகிய தடமித்தனுடைய புதல்வன் விசயனென்பவன் அச்சோலையையடைந்து சீவகனைக்கண்டு, "இவன் இவ்விடத்தானல்லன்" என்றெண்ணி, தேயமுதலியவற்றை வினவ, சீவகனும் தானின்னுனென்றுபுலப்படாவண்ணம் அவற்றைக்கூறி, அவ்விடத்துப் பலமுறை முயன்றும் அவ்விசயன் எய்து வீழ்த்தமாட்டாத மாங்கனியொன்றைத்தான் ஓரம்பாலெய்து அவ்வம்புடன் அம்மாங்கனி தன்கையில் வரப்பெற்றுத் தான்வில்வித்தையில் வல்லனுதலை வெளிப்படுத்த, அதனை அவ்விசயனறிந்து மகிழ்ந்து சீவகனை உடன்கொண்டு சென்று

தன் தந்தையாகிய தடமித்தனுக்கு அறிவித்தான். அவன் சீவகனைக் கண்டு உவப்புற்று, விசயன்முதலிய தன் புத்திரர் ஐவருக்கும் வில் வித்தைமுதலியன கற்பிக்கும்படி அவனை நியோகிப்ப, அவன் அவற்றை அவர்களுக்குக் கற்பித்துவருகையில், அவர்கள் அவ்வித்தையில் மிகவும் வல்லுநராயினர். அதனை அரசனறிந்து அளவில்லாதமகிழ்ச்சியுற்று அவனைத் தன்னிடத்தே வைத்துக்கொள்ளக்கருதித் தன்புத்திரி கனகமாலையை அவனுக்கு மணம்புரிவிக்க, அவன் அவளோடும் அவ்விடத்தேயிருந்தான்.

சீவகன் அங்ஙனமிருக்க, நந்தட்டன் சீவகன் இன்னவிடத்திலுள்ளானென்பதை யறியானாகி நாடெங்குந்தேடியும் அவனைக்காணாது வருந்திக்காந்தருவதத்தையை வினவி, அவள்செய்த வித்தைமகிமையாற் சீவகன் ஏமமாபுரத்திற் கனகமாலையோடிருத்தலை நேரிற்கண்டு மகிழ்ச்சியடைந்து அவளை வணங்கி, “அடியேன் சீவகனையடையும்படி அருள்புரிவாய்” என்றுவேண்ட, காந்தருவதத்தை தன்வித்தைவிசேடத்தால் நந்தட்டனைச் சீவகனிருக்குமிடத்தை அடையச்செய்தாள். அப்படி யடைந்த நந்தட்டனைச் சீவகன்கண்டு ஆநந்தமுற்றுத்தழுவி எல்லாச்செய்திகளையும் வினவி அவனை மகிழ்வித்து அவனோடும் அந்நகரத்திருந்தான்.

இச்செய்தியையறியாத தோழர்கள் கவலைமிக்குக் காந்தருவதத்தையை யடைந்து, சீவகன் ஏமமாபுரத்தே இருத்தலையும் நந்தட்டன் அவனிடத்தடைந்ததையும் அவளால் தெரிந்துகொண்டு, தாமும் சீவகனிடம் செல்லக்கருதி அவளுக்குத்தெரிவித்து விடைபெற்றுப் பலவீரர்களோடும் புறப்பட்டு ஏமமாபுரஞ் செல்வாராகி, விசயை தவஞ்செய்துகொண்டிருக்குந் தவப்பள்ளியை அடைந்தனர். அப்பொழுது விசயை அவர்களை நோக்கி, “நீங்கள் எங்குள்ளீர்? எங்குச் செல்கின்றீர்?” என்று வினவ, தம்வரலாறு சொல்லுகையிற் சீவகன் வரலாறுஞ் சொல்லும்படி நேர, அதனைக் கூறுகின்ற தேவதத்தன், “கட்டியங்காரன் கட்டளையால் மதனன் முதலியோர் சீவகனைக்கொல்லக் கொலைக்களங்குறுகலும் ஒரு தெய்வம் காத்தது” என்று சொல்லவெண்ணி, “சீவகனைக்கொல்ல” என்றவளவில் விசயை பதைபதைத்துமூர்ச்சித்துப் பின்பு எழுந்து சீவகன் வரலாறுகளை வெளிப்படச் சொல்லிக் கண்ணீர்விட்டுப் பிரலாபித்தழுகையில், தோழர் தம்முள்

ஒருவரையொருவர் நோக்கி மகிழ்ந்து அவளைச் சீவகன்நற்றாயென்றும், சீவகனை இராசகுமாரனென்றும் விளங்க அறிந்துகொண்டு சீவகன் இறவாதிருத்தலை அவளுக்குணர்த்த, விசயை, "என்மீது வைத்த காதலாலே என் இறை இறந்த பின்புயான் மிகுந்த துன்பமடைந்தேன்; இச்செய்தியை என் ஐயனுக்கு உணர்த்தி அவனை என்னிடத்து அழைத்துவாருங்கள்" என்று சொல்ல, தோழர் வணங்கி, "தாயே! ஒருமதிக்குள்ளே நம்பாற் சீவகனை அழைத்துவருவேம்; நீவிர் கவலைப்படவேண்டாம்" என்றுசொல்லி விடைபெற்று ஏமமாபுரத்தைச்சார்ந்த ஒரு சோலையையடைந்து அங்கிருந்துகொண்டு அந்நகரத்தில் நந்தட்டனோடு சீவகனிருத்தலை ஒற்றாலறிந்து சீவகனைக் காணுமாறு எங்ஙனமென்று ஆலோசித்து யுத்தஞ்செய்ய வந்தவர்களைப்போலவே கோலங்கொண்டு அந்நகரை வளைந்து அரசன் பசுக்களைக் கவர்ந்தனர்.

அதனையறிந்து சினந்த அரசன் கட்டளையாற் பெரும்படை சூழத் தேர்மீதேறிப் போர்செய்தற்கு நந்தட்டனோடு வந்த சீவகனைக் கண்டு பதுமுகன், "அடியேம் நின்திருவடிநிழலிலே உறைய வேண்டிச் சச்சந்தன்மகனாகிய நின்னைக்காணவந்தேம்" என்று எழுதி எய்த அம்பு சென்று சீவகன் தேர்மீது மாறி வீழ்ந்தவளவிலே சீவகன், 'இக்கணையை இவ்வாறு வீழும்படி எய்தவன் பதுமுகனே' என்றறிந்து போர்செய்யாதபடி தன்படையை விலக்கி நிற்ப, தோழர்சென்று அவனைவணங்கிப் பேரானந்தமுற்று அவனோடு நகரஞ்சென்று அரசனைப் பணிந்தனர். அரசன், "இவர்கள் யாவர்?" என்றுவினவ, சீவகன் "என் உயிர்த்தோழர்" என்றான். பின்பு சீவகன் தனியேயிருந்து தோழரை நோக்கி, "என்நிலைமையை எங்குணர்ந்தீர்?" என்ன, அவர் "சச்சந்தன்தேவியாகிய விசயையைத் தண்டகாரணியத்துக்கண்டு தெரிந்து கொண்டோம்" என்றார். உடனே சீவகன் கண்ணீர்சொரிய உரோமஞ் சிலிர்ப்ப, "மகாபாவியாகிய என்னைப்பெற்ற அடிகளும் உளரோ உளரோ?" என்று பன்முறை வினவி, அவரிருக்கின்ற திசை எங்கே எங்கேயென்று கேட்டு அத்திசையை நோக்கி விரைய வணங்கி அங்கேசெல்லுங் கருத்துடையவனாகி விடைபெறுதற்பொருட்டுத் தடமித்தன்பாற் சென்றான்.

உடனே அவனும் தோழராற் சீவகனது வரலாறனைத்தையும் தெரிந்துகொண்டு மகிழ்ந்து விடைகொடுக்க, சீவகன் கனகமாலையை அவ்விடத்தே வைத்துவிட்டு எல்லாரோடும் புறப்பட்டு வழிக்கொண்டு சென்றான்.

[அ.—விமலையாரிலம்பகம்.]

சென்ற சீவகன் தோழரோடும் தண்டகாரணியமடைந்து தன் வரவு நோக்கிக்கொண்டிருந்த விசயமாதேவியைத் தரிசித்து வணங்கிப்பேரானந்தமுற்றான். விசயையும் சீவகனை எடுத்துத்தழுவிப் பெரிதும் பாராட்டி அன்புறுவாளாயினள். இங்ஙனம் ஆறுதினங்கள் சென்றன. பின்பு விசயை தோழருட் சிலரை வேறேயழைத்துச் சில உபாயங்களைக் கூறிப் பின்பு சீவகனை நோக்கி, "நின்மாமனாகிய கோவிந்தனைக் கண்டு, அவனைவலாற் பகையை வெல்லக்கடவை" என்ன, சீவகன், "உமது கட்டளைப்படியே செய்வேன்" என்று கூறி, ஆங்கிருந்த சிலதவமகளிரோடும் விசயையை முன்னதாகத் தன் மாமன் நகருக்கனுப்பிவிட்டுத் தான் குதிரையேறி எல்லாரோடும் ஏமாங்கத நாட்டைச் சார்ந்து இராசமாபுரத்தின் அருகேயுள்ள ஒரு சோலையிற்றங்கி உண்டு உறங்கியபின், மற்றைநாட் காலையில் தோழரை அவ்விடத்தே வைத்துவிட்டுத் தான் மகளிர் விரும்புதற்குரிய ஒரு வடிவங்கொண்டு அந்நகரத்து வீதியிற் சென்றான்.

அப்பொழுது, தான் விளையாடிய பந்தினுளொன்று எழும்பிச் சென்று சீவகன் முன்னேவீழ அதனை எடுத்தற்குவந்த விமலை என்பவள் சீவகனைக் கண்டு வேட்கைமிகப்பெற்று நெஞ்சங்கலங்கி நாணமகன்று வருந்துவாளாயினள். சீவகனும், அவள் பேரழகை நோக்கி அதிக மோகங்கொண்டு அப்பாற்செல்லமாட்டாது அவள் தந்தையாகிய சாகரதத்தனுடைய கடையிலே வருந்தியிருந்தான்.

சாகரதத்தன், தன்னிடத்துப் பலநாளாக விலையாகாதிருந்த சரக்கையெல்லாம் அப்பொழுதுவிற்று மிக்கமகிழ்ச்சி அடைந்து சீவகனைச் சந்தித்து அவனை நோக்கி, "நம்பனே! என் மனைவியாகிய கமலை பெற்ற விமலைக்குச் சாதகஞ்செய்யவந்த சோதிடரை நோக்கி, 'என் பண்டம் விலையாகாமைக்குக் காரணம் யாது?' என்று வினவினேன்; அச்சோதிடருள் ஒருவன், 'நின்மகள் விமலைக்கு

உரிய கணவன் நின் கடையில் வந்து தங்குவான். அப்பொழுது எல்லாம் விலையாகும்' என்றான். அப்படியே நீ வந்து தங்கியவுடன் எல்லாப் பண்டமும் விலையாயின; ஆதலால் நீயே விமலைகணவன்" என்று கூறிச் சுபமுகூர்த்தத்திலே அவனுக்கு விமலையை மணஞ் செய்வித்தான். சீவகன் அவளோடும் அவ்விடத்தே இரண்டு தினங்கள் தங்கி மற்றைநாட்காலையில் எழுந்து சோலையிலுள்ள தோழரை யடைந்தனன்.

[கூ.—சுரமஞ்சரியாரிலம்பகம்.]

அப்பொழுது தோழர் சீவகனது மணக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து, "மணஞ்செய்த தையலின் பெயர் கூறுக" என்ன, சீவகன், "விமலை" என்றான். கேட்ட தோழர் மிகவியப்புற்று, "இவனே காமன்" என்று கூறினர். அவர் அங்ஙனம் கூறக்கேட்ட புத்திசேனன் சீவகனை நோக்கி, "இவர்களைப்போல யானும் நின்னை வியப்பேனல்லேன்; இந்நகரத்தின் கண்ணே சுரமஞ்சரியென்று ஒரு மடந்தை உள்ளாள்; அவள், ஆடவர் தன்மனைக்கு அருகே செல்லினும் உயிரைவிடுவேனெனக் கோபியாநிற்பள்; அவளைமயக்கமுறுத்தி மணப்பின், நின்னைக் காமதிலகனென்பேன்" என்று சொல்ல, சீவகன் புத்திசேனனை நோக்கி, "நீ கூறிய அவளைக் கொணர்ந்து நாளையே காமன் கோட்டத்தில் மகிழ்விப்பேன்; நீ காமன் படிவத்தைச் சார்ந்து மறைந்திரு" என்று சொல்லி, உடனே அவ்விடம் விட்டுச் சுரமஞ்சரியிடத்து மிகுந்த காதலுடையவனாகி ஒரு வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு தண்டூன்றி மிகவும் மெலிவைப் புலப்படுத்திக்கொண்டு கண்டோர் இரங்க நடந்துசென்று, அவளது கன்னிமாடத்தின் வாயின்முன் போயினன்.

அப்பொழுது சீவகன் தன் முதுமையைக்கண்டு அச்சுறுத் தற்கஞ்சிய அவ்வாயில்காக்குமகளிரை நோக்கி, "பசியால் மிக வருந்துகின்றேன்" என்றான். அம்மகளிர் விரைந்து சுரமஞ்சரியை அடைந்து "ஊதப்பறக்குந் தன்மையனும் மிகுந்த பசியாளனுமாகிய ஒரு விருத்தப்பிராமணன் நம்மனைவாயிலில் வந்து நிற்கின்றான்; அவனிடத்து யாம் செய்வதறிந்திலேம்? விரைந்து கூறுதி" என்ன, சுரமஞ்சரி, "அம்மூப்புடையானைப்பார்ப்பின் விரதங்குன்றுவதன்று"

என்றெண்ணி மாடத்தினின்றும் இறங்கிவந்து, அம்முதியோனை நோக்கி, "நீர்வந்தது என்னகாரியத்தைக்கருதி?" என்றுவினவினள். அவன், "குமரியாட" என்றான். அவள் "அதனால் பயனென்னை?" என்ன, முதியோன், "இம்மூப்புப்போம்" என்றான். சுரமஞ்சரி கேட்டு நகைத்து, "இவர் பித்தர் போலும்; இது நிற்க, இவர் பசியைத்தீர்ப்பது பேரறம்" என்றெண்ணி, அம்முதியோனைத் தன்மாடத்தே அழைத்துச்சென்று ஸ்நானஞ்செய்வித்துப்பொற்கலத்தைப் பரப்பி அறுசுவையடிசிலூட்டி முகவாசமீந்து கட்டின்மீதுள்ளபஞ்சணையிலே படுக்கச்செய்ய, அம்முதியோன் சிறிது நேரம் உறங்குவான் போற் கிடந்து பின்னர் ஒருகீதத்தைப்பாடினான். கேட்டமகளிர் விம்மிதமுற்றனர். சுரமஞ்சரி நாணி நகைத்துக் கேட்டுக்கொண்டு நின்றனள்.

அங்ஙனம்நின்ற சுரமஞ்சரி, "இப்பாட்டு சீவகன்பாட்டை ஒத்துளது" என்று தோழியர்வியந்துசொல்லக்கேட்டு, "நாளைச் சென்று காமனை வழிபட்டு 'இப்பாட்டையுடைய சீவகனை விரைவிற்றருக' என்று வேண்டிக்கொள்வேன்" என்று கூறி, மற்றைநாளில் தன்னுயிர்த் தோழியுடனே அவ்வேதியனையும் அழைத்துக்கொண்டு சகடமூர்ந்து, ஆடவர்காணுமற் காமன்கோட்டத்தையடைந்து, தான் பகருகின்றது கேளாதபடி கூடவந்த அந்தணனை ஆங்குள்ள ஓரறையில் வைத்துவிட்டுச் சென்று காமனை வணங்கி, "பூமலிமார்பனே! எனக்குச் சீவகனை விரைவில் தரின் மகரக்கொடியும், அம்பும், கருப்புச் சிலையும், தேரும் ஊருந்தருவேன்" என்று வேண்ட, ஒளித்திருந்த புத்திசேனன் "சீவகனை, நீ பெற்றாய்; இனி விரைவிற்செல்" என்று சொல்ல, அதனை அவள் காமத்தெய்வம் வாய்விட்டுக் கூறியதாகவே யெண்ணிப் பின்னும் பரவி மீண்டுவந்து அறையிடத்தே உரிய வடிவுகொண்டுநின்ற சீவகனை நெஞ்சு துணுக்கெனக்கண்டு நாணி நைந்து நிற்ப, சீவகன் மிக்ககாதலுடையனாகிச் சுரமஞ்சரியைத் தழுவி, "நின்னை நாளைமணஞ்செய்வேன்" என்றுவிடுப்ப அவள் தன் மனையை அடைந்தனள்.

தோழர் இச்செய்தியைப் புத்திசேனனால் தெரிந்துகொண்டு "காமதிலகன்" என்று புகழ்ந்தனர். நிகழ்ந்த இந்தச்செய்தியைச் சுரமஞ்சரிதாயாகிய சுமதியும் தந்தையாகிய குபேரதத்தனுங் கேட்டு மகிழ்ந்து சுற்றத்திற்கெல்லாமறிவித்துச் சீவகனுக்குச் சுரமஞ்சரியையு

மணஞ்செய்வித்தனர். சீவகன் அவளோடும் அன்று அவ்விடத்தே தங்கியிருந்து, மற்றைநாளெழுந்து தோழர்சூழத் தன்மனையை அடைந்து, தன் குதிரைமுதலியவற்றை நோக்கித் தன்னையேநினைத்து அழுது புலம்பி உருகிக்கொண்டிருக்கிற சுநந்தையையும் கந்துக்கடனையும் கண்டு வணங்கி, அவர்கள்வருத்தத்தைப் போக்கி, மற்றையோரை மகிழ்வித்து, காந்தருவதத்தையைக் கண்டு, குணமாலையைத்தேற்றி மேல்முடியுங் காரியங்களைக் கந்துக்கடனுக்குக்கூறி விடைபெற்று, குதிரைகொள்ளும் வாணிகன்போல வேடம்பூண்டு தோழர்சூழ ஏமாங்கத நாட்டைக் கடந்துசென்றான்.

[கo:—மண்மகளிலம்பகம்.]

அங்ஙனஞ்சென்ற சீவகன் விதையநாட்டையடைந்து நகரத்தார் எதிர்கொண்டு விரும்பச் சென்று தன்மாமனாகிய கோவிந்தராசனை வணங்கினான். கோவிந்தராசன் மகிழ்ந்து விருந்து செய்வித்துச் சீவகனுக்கு மேல் நடத்த வேண்டுவனவற்றையெண்ணித் தன் மகனாகிய ஸ்ரீதத்தனுக்குச் சுபகாலத்திலே அரசளித்து எல்லாரோடுமிருக்கையில், தன்னை இராசமாபுரத்துக்கு வரும்படி வேண்டித் தன் கருத்தறிதற்பொருட்டு வணக்கமுடையவன் போலத் தனக்குக் கட்டியங்காரனனுப்பிய வஞ்சக வோலையை விரிசிகனென்பவன் படிப்பவறிந்து, "கட்டியங்காரனைக் கொல்லுதற்குரிய உபாயம் இதுபோல வேறொன்றுமில்லை" என்று சீவகன்கூறக் கேட்டு, நால்வகைச் சேனையோடும் புறப்பட்டு இராசமாபுரத்தின் பக்கத்தே வந்து தங்கினான். அப்பொழுது கட்டியங்காரனுக்குத் துர் நிமித்தங்கள் நிகழ்ந்தன.

அவை நிகழ்ந்தபின், கோவிந்தன், கட்டியங்காரனைக் கபடமாக வருவிக்கவெண்ணித் திரிபன்றியந்திரமொன்று செய்வித்து, "இவ் யந்திரப்பன்றியை எய்து வீழ்த்தியவனே என் மகள் இலக்கணைக்குக் கணவனாவான்" என்று பிரசித்தஞ்செய்தான். அது தெரிந்த கட்டியங்காரனும், பலதேயத்தரசரும் அவ்விடத்தேவந்துகூடி அந்தயந்திரத்தை நோக்கி வியப்புற்றனர். பின்பு இலக்கணையை விரும்பிய அரசிளங்குமரர் தனித்தனியே வந்து வில்லைவளைத்து அம்பு தொடுத்து அப்பன்றியை எய்துவீழ்த்தமாட்டாதவராகி மெலிவடைந்

தனர். அப்போது சீவகன் யானையின்மேற்கொண்டு வெளிப்பட, அவனை இறந்தானென்று கருதியிருந்த கட்டியங்காரன் கண்டு துணுக்குற்றுப் புலியைக் கண்ட மான்போலே அஞ்சிக் கலக்கமுற்றான். சீவகன் யானையினின்றுமிறங்கி அவ்யந்திரத்திலுள்ள சக்கரத்தின்மேல் ஏறிநின்று வில்லை வளைத்து அம்புதொடுத்து அப்பன்றியை வீழ்த்தினன்.

அப்பொழுது கோவிந்தன் கட்டியங்காரனுக்கும் மற்றையோருக்கும் சீவகன் இன்னனென்று விளங்கக் கூறினன். அதன்பின்பு ஆகாயத்திடத்தே ஓரியக்கன் தோன்றி, "சீவகனாகிய சிங்கம்கட்டியங்காரனாகிய கரியின் உயிரை விழுங்கும்" என்று கூறக்கேட்டுக் கட்டியங்காரன் மிகச் சினந்து சீவகனை நோக்கி, "நினக்கு ஒருபொழுதும் அஞ்சுவேனல்லேன்; எனது ஆற்றலை நின் தந்தை அறிவன்: நீயறிவாய்; நின்னையும் என்னைக்கபடமாக வருவித்துக் கொல்லத்துணிந்த நின்மாமனையும் வெல்லும் விருப்புடையேன். போர்செய்தற்கு எழுக" என்று சொல்லித் தன் மக்கள் நூற்றுவரோடும் மற்றை அரசர்களோடுங் கூடி யுத்த சந்நத்தனாக, சீவகனும் தோழரோடும் தம்பிமாரோடும் மற்றை அரசரோடும் புறப்பட, அவ்விருதிறத்தார்சேனையும் எதிர்த்து நின்று போர்செய்தன. சீவகன் படைவீரராற் கட்டியங்காரன் படைவீரரிற் சிலர் மாய்வுற்றனர்; சிலர்தோற்றோடினர். பின்பு சீவகன் கட்டியங்காரன் புதல்வர் நூற்றுவரையும், பதும வியூகம் வகுத்து அதனுள்ளேயிருந்த அவனையுங் கொன்று விளங்கினன். எல்லாரும் புகழ்ந்தனர். விசயை கேட்டு மகிழ்ந்தனள்.

[கக—பூமகளிலம்பகம்.]

பின்பு, சீவகன் இராசமாபுரமடைந்து மாளிகை புகுந்து, தன்னைக்கண்டு நடுங்கிய கட்டியங்காரன் பரிசனங்களுக்கு அபயமளித்து வேண்டும் பொருள்களும் விருத்தியு முதவி அவர் விருப்பின்படி உரியவிடங்களுக்குப் போகச்செய்து பின்பு எல்லாவிடங்களையும் கண்ணுற்று முத்திரைவைத்துக் காவலிட்டு யுத்தவீரர்களை இளைப்பாறச்செய்து மகிழ்வித்து வேத்தவைசார்ந்து சுபகாலத்திலே சிங்காதனத்தில் வீற்றிருந்துமணிமுடிசூடி,கட்டியங்காரனாற்றுன்பமுற்றயாவரையும் இன்பமுறுவித்து, நீதிநெறியை நடாத்தி அரசியற்றுவானாயினன்.

[௧௨—இலக்கணையாரிலம்பகம்.]

பின்பு அவன் தன்னருகிலுள்ளாரை நோக்கி "பதுமை முதலிய தேவியரை அழைத்து வருவீர்" என்ன, அவர் உடனே ஆங்காங்குச் சென்று அவர்களை அழைத்து வந்தனர். வந்த மங்கையர் சீவகனைத் தொழுது வணங்கி, அவனால் அங்கீகரிக்கப்பட்டு, பெருமகிழ்ச்சி யோடிருந்தனர்.

அப்பாற் கோவிந்தராசன் இலக்கணையைச் சீவகனுக்கு மணஞ் செய்விக்கக் கருதிக் கணிதர்களால் விவாக முகூர்த்தம் வரையறை செய்து முரசறைவித்து நகரையலங்கரிப்பித்து, குறித்த முகூர்த்தத் தில் விதிப்படி சீவகனுக்கு இலக்கணையை மணஞ்செய்வித்தான். பின்பு சீவகன் எல்லாருங் கண்டு மகிழும்படி நகர்வலமாகப் பவனி வந்து, ஆலயமடைந்து அருகக்கடவுளை வலஞ்செய்து ஏத்தித் தொழு து, அக்கடவுளுக்கு நூறு ஊர்கள் முதலியவற்றைச் சேர்ப்பித்துத் தன் மாளிகையடைந்து சிங்காசனத்திலிருந்து செங்கோல் செலுத்தி அரசுபுரிவானாயினான்.

அங்ஙனம் அரசுபுரிகின்ற சீவகன், தன்னைவருந்திவளர்த்த கந் துக்கடனுக்கு அதற்குமுன்னில்லாத அரசுரிமையையும் சுநந்தைக் குத் தேவியென்னும் பட்டத்தையுங் கொடுத்தான்; நந்தட்டனை இள வரசாக்கினான்; நபுலவிபுலர்க்குக் குறுநிலமன்னர் மகளிரை மணஞ் செய்வித்து நாடுகளையும் நல்கினான்; தன்தோழர்க்கு அரசையும் ஏனை திமோதிரம் முதலியவற்றையும் ஈந்தான்; தன்னிமித்தம் வருந்திய பிறர்க்கு அமைச்சரைக் கொண்டு நிதியையும் நாட்டையுங் கொடுப் பித்தான்; தன்னை வருந்திவளர்த்த செவிலித்தாயர்க்கு நாடோறும் ஆயிரம் பொன் இறைதண்டுதற்குரிய ஐந்துகிராமங்களைக் கொடுத் தான்; மாமனாகிய கோவிந்தனுக்குக் கட்டியங்காரனுடைய பொருள் களை யெல்லாம்உதவினான்; தனக்குப் பேருதவிபுரிந்த சுதஞ்சண னுக்குக் கோயில் சமைப்பித்து, அவன் வடிவைப் பொன்னாலியற்றி, ஊருரையும் நிலைபெறுத்தி, அவன் சரிதத்தை ஒரு நாடகமாகச் செய்து நடத்தினான். இனிப்பெறுதார் யாரென்று சிந்தித்து, இள மைப் பருவத்தே தான் விளையாடிக்கொண்டிருந்த ஓர் ஆலமரத்திற்கு அதற்கேற்ப மாலையணிந்து பீடஞ்சேர்த்தி ஐந்து ஊரை அதற்கு இறையிலியாகவிட்டான். இன்னும் இவ்வாறு செய்யவேண்டுவன

வெல்லாம்செய்துமுடித்துத் தேவிமாரெண்மரோடுங் கூடி மகிழ்வுற்றுச் செங்கோல் செலுத்திக்கொண்டுவருநாளில் உலகம் செழிப்புற்றது; யாவரும் இன்புற்றனர்; எல்லாவுயிர்களும் மகிழ்வடைந்தன.

[கங.—முத்திபிலம்பகம்.]

அப்படி நிகழும்பொழுது, ஒருநாள் விசயை, தவப்பள்ளியினின்றும் தனக்குத் துணையாகப்போந்த தவமகளிர்க்குக் கைம்மாறில்லையேயென்றெண்ணி, அருகக்கடவுளுக்குக் கோயில்சமைப்பித்துப் பூசைசெய்து அப்பூசையின் பயனையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்தனள்; முன்பு சண்பகமாலை போல் வந்து தன்னிடரைத் தீர்த்துத் தன்னைத் தாபதப்பள்ளியிலே சேர்த்துப் பாதுகாத்ததெய்வத்திற்கு அது தங்கும் புறங்காட்டிலே கோயில்சமைப்பித்தாள்; தன்னை எடுத்துப்போந்த மயிற்பொறியைத் தான் எப்பொழுதுங்காணும்படி தானுறையுமாடத்தே எழுதுவித்தாள்; சீவகன் பிறந்தவிடம் சுடுகாடாகக் கிடவாதபடி சாலையாக்கி, அவ்விடத்து ஐந்நூற்றைந்து பிள்ளைகளுக்கு நாடோறும் பாலும் அன்னமும் உண்பிக்கும்படி செய்வித்தாள்; சுநந்தைக்கு உபசாரமொழி கூறி மேம்பாடுறுவித்தாள்; தன்னை வணங்கிய காந்தருவதத்தை முதலிய எண்மரையும் எடுத்துத் தழுவி, "உலகாளுஞ் சிறுவரைப் பெறக்கடவீர்" என்று பணித்தாள்.

இங்ஙனம் தான்செய்ய வேண்டியவற்றைச் செய்துமுடித்துப் பின்னர்ச் சீவகனையழைத்து அருகேயிருத்தி அவனுக்குத்தருமோபதேசஞ்செய்து தான் துறக்கவெண்ணியதைத்தெரிவித்து உடம்பாடு பெற்றுச் சிவிகையேறிச் சுநந்தையோடும், துறக்கவிரும்பிய மற்றை மகளிரோடும் சமீபத்துள்ள ஒரு தவப்பள்ளியைச் சார்ந்து, ஆங்குத் தவஞ்செய்துகொண்டிருக்கும் பதுமை யென்பவளைத் தொழுது, "அடிகளே! எம்மையெல்லாம் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுவீர்" என்று பிரார்த்தித்து, அவள் கூறிய அறமொழியைக் கேட்டுத் தீக்ஷைபெற்று விதிப்படி துறந்து அவ்விடத்தே தவஞ்செய்து கொண்டிருந்தாள்.

அவள் அவ்வாறிருக்க, பின்பு ஒருநாள் சீவகன் அத்தவப்பள்ளியைச் சார்ந்து விசயை, சுநந்தை இருவரையும் தரிசித்து, தேவிமா

ரெண்மரோடும் நீர்விளையாட்டு நிகழ்த்தி, இளவேனில் முதலிய ஒவ்வொரு பருவத்திலும் அவர்களோடும் இன்பநுகர்ந்து செல்லா நிற்கையில், தேவியரெண்மரும் கருப்பமுற்றுத் தனித்தனியே ஒவ்வொரு புத்திரரைப்பெற்றார். காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை யென்னுந் தேவியர் புதல்வரெண்மருக்கும் முறையே சச்சந்தன், சுதஞ்சணன், தரணி, கந்துக்கடன், விசயன், தத்தன், பரதன், கோவிந்தனென்று பெயர்கள் இடப்பட்டன. அப்புதல்வர் வளர்ப்புற்று ஐந்தாவது பிராயத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று, முறையே கலைகள்கற்று, படைக்கலம் பயின்று, ஊர்திகளூர்ந்து மேன்மையடைந்தனர். அப்பொழுது சீவகனுக்கு நாற்பத்தைந்தாவது பிராயஞ் சென்றது.

பின்னர் ஒருநாள் மல்லிகைமாலையென்பவள் வந்து சீவகனை வணங்கி, "அரசே! சோலை நிறையப் பூத்து அழகெய்தியது; அதனைக் கண்டருள்க" என்ன, சீவகன் தேவிமார் சூழ அச்சோலையையடைந்து எல்லாவளங்களையுந்தான் கண்டு தேவிமார்க்குக் காட்டி ஒரு பலாமரத்தின் நீழலையடைந்து ஒரு பக்கத்திருந்தான். அப்பொழுது அவ்விடத்தே ஓராண் குரங்கு தன்னோடு பிணங்கிய தன் காதன்மந்தியை மகிழ்விக்கும்பொருட்டுப்பலாப்பழமொன்றை யெடுத்துக்கீறிச் சுளைகளை அதற்குக் கொடாநிற்கையில், அச்சோலை காப்பானாகிய ஒருவன் வந்து அக்கனியைக் கவர்ந்து அக்கடுவனையும் மந்தியையும் ஓட்டித் தான் உண்டு மகிழ்ந்தான். அதனை ஆங்கிருந்த சீவகன் கண்டு செல்வத்தில் மிகவுமருவருப்புற்று, "கைப்பழ மிழந்த மந்தி, அரசையிழந்த கட்டியங்காரனை யொத்தது; சோலைகாப்பவன், அக்கட்டியங்காரனைத் துரந்து அரசையெய்திய என்னையொத்தனன்; வலியான் கவர்ந்து நுகர்தற்குரிய இச்செல்வத்தால் அடையும் பயனென்னை?" என்றெண்ணித்துறக்குஞ் சிந்தையனாய்த் தன் மாளிகையடைந்து ஸ்நானஞ்செய்து அறுசுவையடிசிலுண்டு முகவாசங்கொண்டு தேவிமார்களோடும் கோயிலைச் சார்ந்து அருகக்கடவுளைவணங்கித் துதித்து வலமாக வந்தான்.

வந்தவன் அவ்விடத்து அசோகமரத்தின் கீழே பளிக்குக்கன் மேலே சாரணரிருவர் நிற்பக்கண்டு, அவரைத் தரிசித்து வணங்கி வாழ்த்தி அவரை நோக்கி, "அடிகளே! பிறப்பினை யொழிக்கும் வழி

யறியாதேன் பல பிறப்புக்களிலுஞ் செய்துகொண்ட தீவினை கெடும்படி தவஞ்செய்து ஞானத்தையடையுமாறு அருளுமின்'' என்று பிரார்த்திக்க, அவருள் இரத்தினப்பிரபை யென்பவர், “அரசனே! கேட்பாய்'' என்று, தவத்தாற்பெறுகின்ற மக்கள் யாக்கையையும், அந்த யாக்கை நூறியாண்டும் நிலைபெற்று நில்லாது கருப்பமுதலாக அழிகின்ற அழிவையும், நரககதி விலங்குகதி மக்கட்கதி தேவகதி யென்கிற நாற்கதித்துன்பத்தையும், துணியப்படும்பொருளையும் அப்பொருளைத்துணியுந் துணிவையும், சீலத்தையும், தானத்தையும், அச்சீலத்தாலுந் தானத்தாலும் பெறப்படும் பயனையும், வீட்டிலக்கணத்தையும் விளங்கவிரித்துக் கூறினர். யாவற்றையும் சீவகன் விரும்பிக்கேட்டு, “சுவாமீ! அடியேனுடைய முற்பிறப்பையும், அப்பிறப்பிற் செய்த பாவத்தையும் அருளிச் செய்க'' என்ன, அவர் கூறுவாராயினர்:

“தாதகி யென்பதொரு நாட்டிற் பூமிமாதிலகமென்னு நகரில் அரசன் பவணமாதேவனென்பான்; அவன் மனைவி சயமதியென்பாள்; அவர் புத்திரன் அசோதரனென்பான். அவனுக்குத் தந்தை தாயர் இலக்கணமமைந்த மகளிரை மணஞ்செய்விக்க, அவ்வசோதரன் அம்மனைவிகளோடும் இன்புற்றொழுகு நாட்களிலே ஒருநாள், அவன் அம்மனைவியரோடும் நீர் விளையாடுதற்கு ஒரு தடாகத்தை அணுகியபொழுது, அவன் மனைவியர் ஆங்குள்ள தாமரை மலரில் ஒளித்திருக்கும் அன்னக் குஞ்சுகளைக்கண்டு, ‘இவற்றைப் பிடிப்பித்துத் தருக' என்று அவனை வேண்ட அசோதரன் தன்னருகே நின்ற ஏவலாளனொருவனைக் கொண்டு, அவற்றுளொன்றைப் பிடிப்பித்து அம்மாதர்களுக்குக் கொடுத்தனன். அவர்கள் அதற்குப் பாலூட்டித் தமது மார்போடணைத்துப் பாதுகாத்து வந்தார்கள். இதனை ஒருநாள் பவணமாதேவன் கண்டு நடுநடுங்கி, அசோதரனால் விளைந்தமை தெரிந்து, சினந்து அவனை வருவித்து, நேராகஇருத்திப் பலவறம்போதித்து, ‘மைந்தனே! பறவைகளையும், மிருகங்களையும் தம் கிளையினின்றும் பிரித்துக் காவல்செய்து வைத்தோர் மறுமையில் தாமும் தங்கிளையினின்று நீங்கிப் பிறராற்காவல் செய்யப்படுவர்' என்றுகூற அசோதரன் கேட்டு மிகவுமஞ்சி, அவ்வன்னப்பார்ப்பைத் தன் மனைவியரிடத்தினின்றும் விடுவித்து அன்று பிடித்த தடாகத்தே போகவிட்டுத் தந்தையைப்பணிந்து, ‘அடியேன் துறந்து தவஞ்செய்வல்' என்ன அரசன், ‘மைந்தனே! உலகைக் காத்துப் பின் துறவினையடைதி' என்று வற்புறுத்திக்கூற அதனை அவன் மனங்

கொள்ளானுகித் தந்தையை உடன்படுவித்து விடைபெற்றுத் துறவிற் சென்ருன். அவ்வசோதரன் நீயே" என்றுகூறி மேற் செப்நி கூறுஞ் சாரணர், "அங்ஙனந் துறவிற்சென்ற நீதவஞ்செய்து மறுமையில் ஸகஸ்ராரமென்னுங் கற்பத்து இந்திரனுக அரசுபுரிந்து இங்கே அவதரித்தாய்; அன்னப்பார்ப்பைக் கிளையினின்றும் பிரித்துச் சிறைவைத்தமைபால் நீயும் கிளையினின்றும் பிரிந்து சிறைகொள்ளப் பட்டாய்" என்று கூறக்கேட்டு அஞ்சிப் பதைபதைத்துத் துறக்குஞ் சிந்தையனுகிச் சீவகன் அவரை வணங்கித் துதித்தான். அப்பொழுது அச்சாரணரிருவரும் எழுந்து விசும்பாருகத் தாம் குறித்தவிடஞ்சென்ருர்.

உடனே சீவகன் தேவிமாரோடுந் தன்மாளிகையை யடைந்து தன் கருத்தை யாவருமறியக்கூறி நந்தட்டனையழைத்து, "நீ இவ்வுலகாள்வாய்; நான் துறப்பேன்" என்ன, அவன், "இவ்வற்பவாழ்வை வேண்டேன்; நின்றிருவடியை வழிபட்டுவாழும் வாழ்வன்ருே அடியேன் வேண்டுவது" என்ருன். பின்பு தன்புதல்வன் சச்சந்தனையழைத்து அவனுக்கு இராசதருமங்கள் பலவற்றையுங் கூறி மணிமுடிசூட்டி அவனை அரசாக்கி, தம்பிமார் புதல்வருக்கும், தோழர் புதல்வருக்கும் உரிய சிறப்புக்கள் இயற்றி, தான் துறத்தல் கேட்டுப் பிரிவாற்ருது, "யாமும் நின்னேடு துறப்பேம்" என்று கூறிய தேவிமாரெண்மரையும் விசயைபாற் சேர்த்துத் துறப்பித்துத் தன் பிரிவையெண்ணித் தேயத்தாரும், நகரத்தாரும், மற்றையாரும் விம்மிவிம்மிப் பிரலாபித்தழவும் தான் ஒருவரையும் நோக்கானுய்த் தேவர்கள் தாங்கிச் செல்லுஞ் சிவிகை ஊர்ந்து சமவசரணமடைந்து ஸ்ரீவர்த்தமான சுவாமிகளைத் தரிசித்துச் சுதன்மரென்னும் கணதரரால் விதிப்படியே துறந்து விபுலகிரியில் தவஞ்செய்து கருமக்ஷபம் பண்ணி யாவருக்குந் தருமோபதேசஞ்செய்து எல்லாவுலகத்திற்கும் உச்சியிலுள்ளதாகிய சித்திக்ஷேத்திரத்தை யடைந்து வீடுபெற்ருன்.

பின்பு அவன் மேனி அக்கினிபிந்திரனுற் கருப்பூரவிநாசம் போலே மறைந்தபின்பு எல்லாவுலகத்தாருங்கூடிப் பஞ்சகல்யாணத்துள் ஒன்ருகிய பரிநிர்வாணமென்னுங் கல்யாணத்தை விதிப்படி செய்தார்கள்.

தேவிமாரெண்மரும் தவஞ்செய்து மறுமையில் இந்திரராகி இன்புற்றனர். நந்தட்டனும், தோழரும் தவஞ்செய்து மறுமையிற் றேவராய்ச் சுவர்க்கம் பெற்றனர்.
